பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 21 திங்கட்கிழமை (05.01.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:040

# கிளிநொச்சி வீழ்ந்து விட்டது; இனி எதற்கு அரசியல் தீர்வு?

## சர்வகட்சிக் குழுவைக் கலைக்க வற்புறுத்துகிறது ஜே.வி.பி. சார்பு அமைப்பு

கொழும்பு, ஜனவரி 05

கிளிநொச்சியும் இராணுவத்திடம் வீழ்ந்துவிட்ட பிறகு, இனி தமிழர்களுக்கு அரசியல் தீர்வு என்ற ஒன்றை வழங்கவேண்டிய அவசியமே கிடையாது. எனவே, அரசியல் தீர்வு முயற்சிகளுக்காக உருவாக்கப்பட்ட சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவை அரசு உடனடியாக கலைத்துவிடவேண்டும்.

இப்படி வலியுறுத்தியிருக்கிறது ஜே.வி.பி. சார்பு அமைப்பான தேசப்பற்றுள்ள தேசிய மத்திய நிலையம்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற அந்த அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைப்பின் செயலாளரும் ஜே.வி.பியின் பிரசார செயலாளரும், எம்.பியுமான விஜித ஹேரத்தே இவ்வேண்டுகோளை விடுத்தார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:- கிளிநொச்சியைப் புலிகள் கைவிட்டமை (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஒட்டுசுட்டானில் ஹெலிகள் தாக்குதல்

கிளிநொச்சி, பரந்தன் கிழக்கு, ஒட்டுசுட்டான் ஆகிய பகுதிகளில் நேற்று மாலை விமானப்படையின் எம்.ஐ. 24 ரக ஹெலிகொப்டர்கள் குண்டுத் தாக்குதல்களை நடத்தின என்று விமானப்படைப் பேச்சாளர் விங்கொமாண்டர் ஜானக நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அந்தப் பகுதிகளில் உள்ள விடுதலைப் புலிகளின் நிலைகளின் மீதே விமானத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-சி)

## பரந்தனில் படைகளின் மும்முனை நகர்வு முறியடிப்பு நேற்று 60 இராணுவத்தினர் பலி; 100 பேர் படுகாயம்

### விடுதலைப்புலிகள் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 05

கிளிநொச்சி மாவட்டம், பரந்தனில் இருந்து இரண்டாம் கட்டை நோக்கிப் படையினர் நேற்று மேற்கொண்ட மும்முனை முன்நகர்வுகள் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளன. இதில் 60 படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் 100இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

படையினரின் சடலங்கள் உட்பட ஆயுதப் பொருள்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன என்று விடுதலைப் புலிகளை மேற்கோள்காட்டி இணையத்தளங்கள் நேற்று செய்தி வெளியிட்டன. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

பரந்தனில் இருந்து இரண்டாம் கட்டை நோக்கி படையினர் நேற்று அதிகாலை 3 மணி தொடக்கம் மும்முனை முன்நகர்வுகளை மேற்கொண்டனர்.

இம்முன்நகர்வுகளுக்கு எதிராக தீவிர முறியடிப்புத் தாக்குதலை விடுதலைப் புலிகள் நடத்தி நேற்று பிற்பகல் (16 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி வீழ்ந்துவிட்டாலும் புலிகள் தோற்றுவிட்டனர் எனக் கூற முடியாது!

### தமிழக பா.ஜ.க. தலைவர் தெரிவிப்பு

சென்னை, ஜன05

கிளிநொச்சி வீழ்ந்துவிட்டாலும், விடுதலைப் புலிகள் தோற்றுவிட்டார்கள் எனக் கூறமுடியாது. பிரபாகரனைப் பிடிப்பது என்பதும், அவரை இந்தியாவிடம் ஒப்படைப்பது என்பதும் நடைமுறைக்குச் சாத்தியமற்றது.

- இவ்வாறு தமிழக பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் இல.கணேசன் தெரிவித்துள்ளார்.

நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு: -

இலங்கையில் இருந்து (16 ஆம் பக்கம் பார்க்க)

## பேரணிகள், மத நிகழ்வுகளை கொழும்பில் நடத்தத் தடை!

### புலிகளின் தாக்குதல் அச்சம் காரணமாக

கொழும்பு, ஜன. 05

விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொள்ளலாம் என்ற அச்சம் காரணமாக கொழும்பு நகரில் பேரணிகள், மத நிகழ்வுகள் போன்ற பெரிய நிகழ்வுகளை நடத்துவதற்கு அனுமதி வழங்க வேண்டாமென பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பு நகரிலும், அண்டிய நகரப் பகுதிகளிலும் பொதுமக்கள் பெருமளவிற்கு கலந்துகொள்ளக்கூடிய நிகழ்வுகளை நடத்துவதற்கு அனுமதிக்க வேண்டாமென பாதுகாப்பு அமைச்சு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் உத்தரவிட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் இந்த உத்தரவு காரணமாக களனி ரஜ மஹா விகாரையின் துருது பெரஹர போன்ற நிகழ்வுகளும் இம்முறை நடைபெறா என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

## நேற்றைய தொடர் ஷெல் மழையினால் 15 பொதுமக்கள் வட்டக்கச்சிப் பகுதியில் படுகாயம்

### மருந்துகள் இன்றி உயிரிழக்கும் அபாயம்

வவுனியா, ஜன.05

கிளிநொச்சியில் உள்ள வட்டக்கச்சி, கட்டைக்காடு, மன்னார்க் கண்டல் கிராமங்களில் மக்கள் குடியிருப்புக்கள் மீது படையினர் நேற்று நடத்திய தொடர் ஷெல் தாக்குதல்களில் 15 பொதுமக்கள் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## எங்கு பார்த்தாலும் இடிந்த கட்டடங்கள்! வெறிச்சோடிக் கிடக்கின்றது கிளிநொச்சி

### அங்கு சென்று திரும்பிய செய்தியாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.05

கிளிநொச்சியை சுற்றியுள்ள பகுதிகள் அச்சம் தரும் வகையில் வெறிச்சோடிக் காணப்படுகின்றன. அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காணப்படும் கட்டடங்கள் ஷெல் வீச்சினால் முற்றிலுமாக சிதறடிக்கப்பட்டுள்ளன என இலங்கை இராணுவத்தால் ஞாயிற்றுக்கிழமை அங்கு அழைத்துச் செல்லப்பட்ட செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக ஏ.பி. செய்தியாளர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

விடுதலைப் புலிகளின் முக்கிய நகராக விளங்கிய கிளிநொச்சியூடாகச் செல் (02 ஆம் பக்கம் பார்க்க)

## ஒட்டு சுட்டானும் படை வசம்

### பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜன 05

முல்லைத்தீவுப் பகுதியில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் ஒட்டுசுட்டானை நேற்று ஞாயிற்றுக்கிழமை கைப்பற்றினர் என்று பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்துள்ளது.

மேஜர் ஜெனரல் யு.எஸ்.என்.கே.பெரேரா தலைமையிலான சிங்க ரெஜிமேன்டின் 14ஆவது படைப்பிரிவும் 642 பிரிகேட் படைப்பிரிவினரும் இரண்டு நாள்கள் கடும் மோதலுக்குப் பின்னர் ஒட்டுசுட்டானைக் கைப்பற்றினர் என்று (16 ஆம் பக்கம் பார்க்க)

## தொடர்கிறது சமர் கிளிநொச்சியில்

கொழும்பு, ஜன. 05

வன்னியில் படை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் முல்லைத்தீவை நோக்கிய நகர்வினை மேற்கொண்டுள்ள அதேவேளை, கிளிநொச்சியை சுற்றியுள்ள பகுதிகளில் தொடர்ந்தும் மோதல்கள் இடம்பெறுகின்றன என்று படைத்தரப்புத் தகவல் தெரிவித்தன.

''விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மறைந்துள்ள முல்லைத்தீவுக் காடுகளை இலக்காக வைத்து எமது இராணுவ நடவடிக்கையை (16 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகளில் மற்றும் சில பாடசாலைகளின் விவரம்

யாழ்ப்பாணம், ஜன.5

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் முடிவுகள் வெளியாகியதை அடுத்து பாடசாலைகளின் அதிபர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களின் விவரங்களை 'உதயனு'க்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அவற்றின் விவரங்கள் பாடசாலை ரீதியாக வருமாறு:-

**யாழ். இந்து மகளிர் கல்லூரி**

**★உயிரியல்பிரிவு**-பகீரதி சுந்தரலிங்கம் -2பிசி, வக்சலா மகேந்திரன் -2பிசி, அபிசாதனா சிவகுமாரன் -2பிசி, ரெனிசியா செல்வரட்ணம்- பி2சி,

**★கணிதப்பிரிவு**-கர்ணியா சுந்தரலிங்கம் -ஏ2பி, கௌசிகா தேவராசா - ஏபிசி, கிருபாலினி கேதீஸ்வரநாதன் - 3பி, ஆரண்யா சிவசுப்பிரமணிம் -பி2சி, பர்மியா கருணானந்தசோதி பி2சி, ஜோதிகா லோகநாதன் - பி2சி-

**★வர்த்தகப்பிரிவு**-சைந்தவி ஜெயராமன் -3ஏ, தனுஜா குணசேகரம் - 3ஏ, கயோதா விஜயபாலன் - 2ஏபி, திபாகினி சிவபாதசுந்தரம் - ஏ2பி, நிறஞ்சனா வரதலிங்கம் - ஏ2பி, அனுஷா சிவலோகநாதன் - 2ஏசி, சரண்யா பாலச்சந்திரன் -ஏபிசி, தனுஷா வேலாயுதசேயோன்-3பி.

**★ கலைப்பிரிவு**-பிரசாந்தி இராசலிங்கம் - 3ஏ, நிரோசா பாலசுப்பிரமணிம் - 3ஏ, பிரமிளா சீவரத்தினம் -3ஏ, சுகன்ஜா கணேசலிங்கம் -2ஏபி, கோபிகா சதாசிவம் -2ஏபி, கேசிகா ரவீந்திரன் -2ஏபி, மயூரிக்கா வாசுதேவன் -2ஏபி, ரஜிதா செல்வராசா -2ஏபி,சிந்துஜா இராசதுரை -2ஏபி, இந்துஜா யோகராஜா-2ஏபி, சாம்பவி சிவதாஸ் -2ஏபி, துஷ்யா இராசலிங்கம் -2ஏபி, பிரியந்தினி ஆனந்தசிவம் -2ஏபி, பிரபாசினி பரமநாதன் -2ஏபி, குணநிதி தனபாலசிங்கம் -2ஏபி, தனுஷா சிவகுமார் - 2ஏஎஸ், ஜெனனி நாகேஸ்வரன்- 2ஏஎஸ், சாகினி நாகேந்திரா - 2ஏஎஸ்,வனஜா துரைசிங்கம் -ஏ2பி, பகீரதி செல்வகுமாரன் -ஏ2பி, மங்களரூபி சிவகுமாரன் -ஏ2பி, நிஷாந்தி சத்தியேஸ்வரன் -ஏ2பி, விநோதா சிவலோகநாதன் -ஏ2பி, நர்மதா பரமேஸ்வரன் -ஏ2பி, அனுலா நல்லையா - ஏபிசி, யோசிகா சாந்திராஜ் - ஏபிசி, லக்ஷாயினி குழந்தை வேலு - ஏபிசி, நிருபா முருகானந்தன் - ஏபிசி, திவ் வியா கமலநாதன் - ஏபிசி, ஜெயவர்சிகா கார்த்திகேசு- ஏபிசி, சுமதினி சீவரட்ணம்- ஏபிசி, வசந்தனா இலங்கைநாதன் - ஏபிசி, நிலக்ஷனா ரட்ணம்- ஏபிசி, சிறிறேகா சண்முகநாதன் - ஏபிசி, சுமங்கலி ஆனந்தசோதி - ஏபிஎஸ், குவேனி குணசேகர் - ஏபிஎஸ், லெசாஜினி தேவராசா - 3பி, அனுஷிகா பத்மநாதன் 3பி, மனஸ்வினி மகேந்திரன் 3பி,

**சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

**★கலைப்பிரிவு**-சோ.கஜந்தன் -3ஏ, நி.கேசாந்-3ஏ,த.தனுராஜன்-3ஏ,க.பிரிதிகா-3ஏ,சி.ஜெசாலினி-3ஏ,ச.ஜெனனி-3ஏ,சி.கோபிகா-3ஏ,வி.நிரூசா-3ஏ,வே.இமயவல்லி-3ஏ, மோ.கோமதி-3ஏ, க.பிரேமிளா-3ஏ, க.பிரசன்னா -2ஏபி, கி.இளங்குமரன் -2ஏபி, சி.அச்சுதன் -2ஏபி, ந.இன்பராஜ்- 2ஏபி, பா.சுலோசனா -2ஏபி, இ.பிரபாகினி-2ஏபி, ம.பிரபாவதனி-2ஏபி,சி.கலையரசி -2ஏபி, சு.கஜனி -2ஏபி, த.கௌசிகா- 2ஏபி, ஸ்ரீ.யாழினி -2ஏபி, ஸ்ரீ.யாழினி- 2ஏபி, து.யுகாசினி -2ஏபி,சு.கருணாவதி- 2ஏபி, பா.அகலியா -2ஏபி,ம.சோபனா- 2ஏபி, சி.ஜீவிதா-2ஏபி, உ.பிருந்தா-2ஏபி, தி.பபிரா -2ஏபி, நா.கஜலக்சுமி-2ஏபி, ந.டிசானி-2ஏபி, த.நிதர்சன்-2ஏபி, த.மதீசன் -ஏ2பி, பி.பிரதீபன்-ஏ2பி, பு.சிவப்பிரியன்- ஏ2பி, ஜெ.விக்டர் -ஏ2பி, சி.கவிதா- ஏ2பி, து.யாசினி -ஏ2பி, ந.சுகந்தினி-ஏ2பி, ஜெ.லாவணியா-ஏ2பி, ந.சுகந்தினி- ஏ2பி,சி.யாழினி-ஏ2பி, பொ.பாமினி- ஏ2பி, ந.அமுதினி-ஏ2பி, கோ.அபர்னா-ஏ2பி.

**★கணிதப்பிரிவு**-இ.சிவகுணாளன் - 2ஏபி, ப.நிராஜ் - 2ஏசி, க.பிரதீபன் ஏ2பி -

**★உயிரியல் பிரிவு**- பா.கஜலக்சன்-2ஏபி, மு.லக்சாயினி - ஏ2பி.

**★ வர்த்தகப் பிரிவு**-கு.தனுஷன் - 2ஏசி, த.நிருசன்-ஏ2பி.

**ஸ்கந்தவரோதயக் கல்லூரி**

**★ கலைப் பிரிவு**-சி.அனுஷன் -3ஏ, ச.தக்சீலா-2ஏபி, ப.பார்த்தீபன்-2ஏபி, கு.சுதர்ஜினி - 2ஏபி, யோ.நிசாந்தினி-2ஏசி, பி.நிரோஜினி - 2ஏசி, த.சஞ்சீவி - 2ஏசி, ச.சோபிகா - 2ஏஎஸ், து.காளிதாஸ் - ஏ2பி, த.ஸ்ரீநாயகி -ஏ2பி, கு.கலைவாணி-ஏ2பி, ஜெ.தர்மிலா-ஏ2பி, த.கேதீஸ்வரன்-ஏ2பி, செ.பாஸ்கரன்-ஏ2பி, பொ.நாகவரதன்-ஏ2பி, வே.றேகா-ஏ2பி, வா.மதன்ராஜ் -ஏ2பி, பா.திவ்வியா-ஏ2பி, வி.இமாஜினி-ஏ2பி, இ.ஜெயசாந்தினி-ஏபிசி, ஆ.துவாரகா-ஏபிசி, அ.கோமதி-ஏபிசி, த.பிரேமினி-ஏபிசி, இ.றஜீதா-ஏபிஎஸ்.

**★விஞ்ஞானப் பிரிவு**-அ.கோபிகா 3சி.

## அச்சுவே[illegible]யில் நேற்று மக்கள் எழுச்சிப் பேரணி

அச்சுவேலி, ஜன.5

மனித உரிமைகளைப் பேணுமாறு கோரி அச்சுவேலியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை மக்கள் எழுச்சிப் பேரணியும் பொதுக்கூட்டமும் நடைபெற்றன.

வலிகாமம் கிழக்கு மக்களின் சார்பில் நடைபெற்ற ஊர்வலம் ஆவரங்கால் சிவன் கோயிலில் ஆரம்பித்து ஆவரங்கால் சந்தி, வல்லைச் சந்தி, அச்சுவேலி பஸ் நிலையம் ஆகியவற்றின் வழியாக அச்சுவேலி யூனியன் மைதானத்தை சென்றடைந்தது.

பிரஸ்தாப மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் முக்கியபிரமுகர்கள் உரையாற்றினர்.

ஊர்வலத்தில் வன்னியில் உள்ள மக்களை வெளியேற அனுமதிக்குமாறும் பயங்கரவாதத்துக்கு எதிராகவும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

## கோப்பாய் கோட்ட அதிபர்கள் கூட்டம்

அச்சுவேலி, ஜன.5

கோப்பாய்க் கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறும்.

புதிய கல்வியாண்டில் கோப்பாய்க் கோட்டம் சார் நிலையில் உள்ள வேலைத் திட்டங்கள் மற்றும் கல்வி மேம்பாடு தொடர்பான முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்படவிருப்பதால், சகல அதிபர்களையும் கோட்டக் கல்வி அதிகாரி வி.எஸ்.இத்திர வடிவேல் அறிவித்துள்ளார். (1-11)

# வடக்கு, கிழக்கு மக்கள் கொழும்பில் நேற்றுப் பதிவு

கொழும்பு, ஜன.5

2003 ஆம் ஆண்டுக்கு பின்னர் வடக்கு கிழக்குப் பகுதிகளிலிருந்து வந்து கொழும்பு உட்பட மேல்மாகாணத்தில் தங்கியிருந்த பல நூற்றுக்கணக்கானவர்கள் நேற்று தத்தமது பொலிஸ் பிரிவுகளில் பதிவுகளை மேற்கொண்டனர்.

தமிழர்கள் அதிகமாக செறிந்து வாழும் பகுதிகளான வெள்ளவத்தை , கொட்டாஞ்சேனை மற்றும் முகத்துவாரம் போன்ற பகுதிகளில் மக்கள் கூட்டம் கூட்டமாக நீண்ட வரிசைகளில் நின்று தமது பதிவுகளை மேற்கொண்டனர்.

நேற்று காலை 8 மணிமுதல் மாலை 6 மணி வரை பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேல் மாகாணத்தில் 9 பிரிவுகளில் இந்தப் பொலிஸ் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

கொழும்பு வடக்குபிரிவு, கொழும்பு மத்திய பிரிவு, கொழும்பு தெற்குப்பிரிவு, நுகேகொட பிரிவு, கல்கிசைபிரிவு, பாணந்துறை பிரிவு, களுத்துறை பிரிவு, நீர்கொழும்பு பிரிவு, களனி பிரிவு மற்றும் கம்பஹா ஆகிய பிரிவுகளிலேயே இந்தப் பதிவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தன.

2003 ஆம் ஆண்டுக்கு பின்னர் மேல்மாகாணத்திற்கு வந்து தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ தங்கியிருக்கும் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த மக்கள் அனைவரும் தத்தமது பொலிஸ் பிரிவுகளில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்று கடந்த வெள்ளிக் கிழமை பொலிஸ் தலைமையகத்தினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கமையவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

# மட்டு. கொக்கட்டிச்சோலையில் புலிகள்-அதிரடிப்படை மோதல்

மட்டக்களப்பு, ஜன.05

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை, முன்னைக்காடு பகுதியில் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் விடுதலைப்புலிகளின் அணிக்கும் விசேட அதிரடிப் படையினருக்கும் இடையில் சிறு மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அதில் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார். சிவிலியன் ஒருவர் படுகாயமடைந்தார் என்றும் புலிகள் தரப்பில் நேற்று அறிவிக்கப்பட்டது.

விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த எம். கே. விஜயசிறி (வயது-37) என்பவர் கொல்லப்பட்டார். நேசராஜா அருளம்பலம் என்ற சிவிலியனே படுகாயமடைத்த நிலையில் மட்டக்களப்பு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

## முஸ்லிம் யுவதி புத்தளத்தில் கைது

புத்தளம், ஜன.5

விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ வானொலியான 'புலிகளின் குரல்' சிங்கள சேவையில் அறிவிப்பாளராக கடமையாற்றினார் என்ற சந்தேகத்தின் பேரில் புத்தளம் சாஹிரா இடம்பெயர்ந்தோர் முகாமில் வசிக்கும் 20 வயதுடைய முஸ்லிம் யுவதியொருவர் நேற்று முன்தினம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர நேற்று தெரிவித்தார்.

குறித்த யுவதியிடம் பயங்கரவாதத் தடுப்பு பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தனர்.

## வெள்ளியன்று இரவு ஊரடங்கை நீக்க உதவக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.5

எதிர்வரும் வெள்ளிக்கிழமை - ஜனவரி ஒன்பதாம் திகதி - இரவு குடாநாட்டில் உள்ள இந்து ஆலயங்களில் ஆருத்ரா தரிசனத்தை முன்னிட்டு இந்து ஆலயங்களில் விசேட திருவிழா நடைபெற உள்ளது. அன்றைய தினம் இரவு ஊர டங்கை நீக்கி அடியார்கள் ஆலய வழிபாட்டைத் தடங்கல் இன்றி மேற்கொள்ள, சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு உதவுமாறு இந்து சமயப் பேரவை அரசாங்க அதிபரிடம் கேட்டுள்ளது. (அ)

## இன்று பாடசாலைகள் ஆரம்பமாகின்றன

கொழும்பு, ஜன.5

இந்த வருடத்திற்கான முதலாவது பாடசாலைத் தவணைகள் இன்று ஆரம்பமாகின்றன.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சை வினாத்தாள்கள் திருத்தும் பணி நடைபெறும் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் மட்டுமே இன்று தொடக்கம் இயங்கும் என்று கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த வருடம் மூன்று தவணைகளுக்காக 202 நாள்கள் பாடசாலைக் கல்விச் செயற்பாடுகள் நடைபெறும் என்றும் கல்வித் திணைக்களம் மேலும் தெரிவித்தது. (அ-சி)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**
3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில O/L, A/L, B.A. ஆங்கில இலக்கணம், வினா விடை வகுப்புகள்.
BY: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி
426(302) கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம், ரீவாக் வீதி, சங்கானை.

**தவறிவிட்டது**
ஐயனார் வீதி, சுன்னாகம் என்னும் முகவரியுடைய பற்புநாதன் மணிவண்ணன் என்பவரின் தே.அ.அட்டை (871093741v) நல்லூருக்கும் சுன்னாகத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரிக்கோ அல்லது FINE SELECTION சுன்னாகம் என்னும் முகவரியுடைய கடையிலோ ஒப்படை க்கவும்.

**முக்கிய கலந்துரையாடல்**
வடக்கு மாகாண ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் தோற்றி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாத பட்டதாரிகளுடன் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் உரையாட இருப்பதால் 06.01.2009 நாளை காலை 8 மணியளவில் பெருமாள் கோயில் முன்பாக தவறாது ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
பட்டதாரிகள் செயற்குழு.

**பொருளியற் கல்லூரி**
நாவலர் றோட், யாழ்ப்பாணம். கே.கே.எஸ். வீதி, இணுவில்.
(இரு இடத்திலும்)
எமது நிறுவனத்துக்கு நிகர் வேறு எதுவுமே கிடையாது.நீங்கள் அறிந்தீர்களா யாழ். மாவட்டத்தின் முன்னணிப்பெறுபேறுகளை என்றும் இல்லாத அளவுக்கு சகல பாடங்களிலும் சாதனை.
நீங்கள் இதுபோல சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிட புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
A/L DAY CLASS
கலை - வர்த்தகம்
யாழ்.நகரில் - 07.01.2009 புதன் 8 a.m.
இணுவில் - 08.01.2009 வியாழன் 8 a.m.
உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்.
குறிப்பு: எமது மற்ற நிறுவனமான
BARATHY [illegible]

**அருள் முருகன் திருமணப் பணியகம்**
திருமண சேவைகள் சமூகப் பொறுப்பும் பொது நல நோக்குமுடையனவா இருக்கும் போதே இதற்கான மேன்மையும் அங்கீகாரமும் கிடைக்கமுடியும். இக்கருத்தினையும் தரம் மிகு திருமணங்களையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது இப் பணியகும். சீதனங்களுக்கு வீத அடிப்படையிலான கமிஷன் பேரங்கள் முறைப் பாரம்பரியங்கள் இங்கில்லை இது இலாப நோக்க முடையதரகு வியாபார நிறுவனமு மன்று இலவச சேவைகளும் இயல் பானவை அனைவரதும் பூரண ஒத்துழைப்பானது இங்குள்ள அதிகலவி லான மணமக்கள் உட்பட எம் மத்தியுலுள்ள சகல மணமக்களும் திருமணங்களை இலகுவாக்கும் இலவச சேவைகளும் இயல்பானவை.
03. யாழ் வீதி, பெருமாள் கோவில் சமீபம், யாழ்ப்பாணம் T.P:- 222 9334
(Systematical Seyvices)

## எங்கு பார்த்தாலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லும் ஏ- 9 பாதை முற்றாக வெறிச்சோடிக் காணப்படுகின்றது. சில கால்நடைகளைத் தவிர வேறு எதனையும் அங்கு காணமுடியவில்லை.

கிளிநொச்சியைக் கைப்பற்றிய இரு நாள்களுக்குப் பின்னர் புதிதாகக் கைப்பற்றப்பட்ட பகுதிகளுக்கு இலங்கை அரசு தமது வெற்றியைக் காண்பிப்பதற்காகப் பத்திரிகையாளர்களை அழைத்துச் சென்றது.

கிளிநொச்சியைச் சுற்றியுள்ள பகுதிகள் அச்சம் தரும் வகையில் வெறிச்சோடிக் கிடக்கின்றன.

வீதிகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காணப்படும் வீடுகள் ஷெல் வீச்சினால் முற்றாகத் தகர்க்கப்பட்டுள்ளன. இராணுவத்தின் நிலக்கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் ஏ- 9 வீதியிலும் விடுதலைப் புலிகள் விட்டுச் சென்ற பொறிவெடி நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

**மக்கள் காடுகளுக்குத் தப்பிச் சென்றுவிட்டனர்**

இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மீண்டும் மோதல் வெடிப்பதற்கு முன்னர் இங்கு வாழ்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் காடுகளுக்குள் தப்பிச் சென்றுள்ளனர்.

ஒன்றரை வருடங்களாக சுயாதீன பத்திரிகையாளர்கள் இப்பகுதிக்கு வருவதற்கு அரசு தடை விதித்து வந்தது.

தற்போது தனது வெற்றியைக் காண்பிக்க அவர்களை அழைத்து வந்துள்ளது.

விடுதலைப் புலிகளிடம் உள்ள நிலப்பரப்புகள் குறைவடைகின்றன. அவர்களது எண்ணிக்கையும் வீழ்ச்சியடைகின்றது. யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவரும் இலக்கை எய்தும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்கிறார் அங்கு படையினரை வழிப்படுத்தும் மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ்.

கிளிநொச்சி மோதலிற்கு இவரே தலைமை தாங்கினார் என்று கூறப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்ட செய்தியாளர்களிடம் விடுதலைப் புலிகள் அமைத்திருந்த 17 கிலோமீற்றர் நீள பாதுகாப்பு அரண்களை இராணுவத்தினர் காண்பித்தனர்.

ஒன்றரை மீற்றர் அகலமும் 2 மீற்றர் ஆழமும் உள்ள அந்தப் பதுங்குகுழிகள் நீரும் எறிகணைப் பாகங்களும் நிறைந்து காணப்பட்டன.

அதற்குப் பின்னால் 2 மீற்றர் உயரமும் 5 மீற்றர் ஆழமும் கொண்ட மண் அரண்கள் காணப்பட்டன.

கிளிநொச்சியைப் பாதுகாப்பதற்கு விடுதலைப் புலிகள் கடுமையாகப் போராடினர் என டயஸ் தெரிவித்தார்.

கிளிநொச்சிக்குள் நுழைவது மிகவும் கடினமாக இருந்தது. விடுதலைப் புலிகளின் மண் அரண்களைக் கைப்பற்ற ஒன்றரை மாதம் பிடித்தது என்றார் அவர். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## பெற்றோல் விலை நிர்ணய சர்ச்சை: உயர்நீதிமன்றம் எடுக்கும் முடிவு என்ன?

நீதிமன்றங்களின் வருட இறுதி விடுமுறைகள் முடிவடைந்து அமர்வுகள் மீளவும் ஆரம்பிக்கப் போகின்றன.

நாளை மறுதினமும் அதைத் தொடர்ந்து அடுத்து வரும் வாரங்களிலும் நாட்டின் போக்கையே தீர்மானிக்க்கூடிய மிக முக்கிய வழக்குகள் நீதிமன்றங்களின் முன்னால் வரவிருக்கின்றன.

பெற்றோலின் விலையை லீற்றர் நூறு ரூபாவாகக் குறைக்கும்படி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டு மூன்று வாரங்களாகின்றன. அரசுத் தரப்பின் பிரதிநிதியாக சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டத்தரணியும், நிதி அமைச்சின் சார்பில் திறைசேரிச் செயலாளர், நிதி அமைச்சின் செயலாளர் ஆகிய பதவிகளை வகிக்கும் அதிகாரிகளும் பிரசன்னமாகி இருக்கையில் இந்த உத்தரவு பிரதம நீதியரசர் உள்ளிட்ட உயர்நீதிமன்ற ஆயத்தால் வழங்கப்பட்டது.

உண்மையில் பெற்றோலியப் பொருள்களின் இறக்குமதியை ஒட்டி அரசுத் தரப்பினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு விலைச் சூத்திரத்தை ஏற்று, அதனடிப்படையிலேயே ஒரு லீற்றர் பெற்றோலை நூறு ரூபாவுக்கு விற்கலாம் என்ற தீர்மானத்தை எடுத்து, அதனைத் தனது உத்தரவாகப் பிறப்பித்தது உயர்நீதிமன்றம்.

அதாவது அரசுத் தரப்பின் உயரதிகாரிகளின் அனுசரணையுடனேயே அந்த விலை நிர்ணயம் செய்யப்பட்டு நீதிமன்றத் தீர்மானம் எடுக்கபபட்டது.

கடந்த டிசம்பர் 17 ஆம் திகதி முதல் அந்தத் தீர்மானிக்கப்பட்ட விலை நிர்ணயத்தின் அடிப்படையில் பெற்றோலைப் பாவனையாளர்களுக்கு விற்கவும் நீதிமன்றம் பணித்தது.

ஆனால், அமைச்சரவை முரண்டுபிடித்து, உயர்நீதிமன்றத்தின் உத்தரவை உதாசீனம் செய்து, புறந்தள்ளி, தன்னிஷ்டப்படி நடக்கின்றது.

'பொருள்களுக்கு விலையை நிர்ணயிப்பதும், வரி விதிப்புக் குறித்துத் தீர்மானிப்பதும் நாடாளுமன்றுக்கும் அமைச்சரவைக்கும் பெறுப்பான விடயங்கள். அது உயர்நீதிமன்றின் தத்துவத்துக்கு உட்பட்டதல்ல. எனவே, அது தொடர்பாக உயர்நீதிமன்றின் உத்தரவு அதன் அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட விடயம். அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட விடயத்தை ஒட்டி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பதால் அதை ஏற்கவேண்டியதில்லை. அதைப் புறக்கணிப்போம்' - என்ற கருத்து நிலைப்பாட்டில் இவ் விடயத்தை அணுகுகின்றது அமைச்சரவை.

அமைச்சரவையின் கருத்து நிலைப்பாட்டில் நியாயம் இருக்கக்கூடும். ஆனால் உயர்நீதிமன்றம் விடுக்கும் தீர்ப்பை ஒட்டி, அந்த உத்தரவை வழங்குவதற்கு உயர்நீதிமன்றுக்கு அதிகாரம் உண்டா என்பதைத் தீர்மானிக்கும் நியாயாதிக்கம் அமைச்சரவைக்கு இல்லை என்பதே உண்மை.

இப்படிப் பெற்றோலுக்கு விலையை நிர்ணயித்து, உத்தரவிடும் அதிகாரம் உயர்நீதிமன்றுக்கு இல்லை என்றால் கூட, அதை உயர்நீதிமன்றுக்கு விளக்கி, அதன் மூலமே இம்முடிவை - அதாவது உயர்நீதிமன்றுக்கு அந்த அதிகாரம் இல்லை என்ற தீர்மானத்தை - உயர்நீதிமன்றம் வாயிலாகவே அமைச்சரவை பெறவேண்டும்.

அப்படியில்லாமல், தன்னிஷ்டப்படி அத்தீர்மானத்தை அமைச்சரவை எடுத்து, உயர்நீதிமன்றத்தின் உத்தரவைப் புறக்கணிக்குமானால் அது நீதிமன்ற அவமதிப்புக்குரிய விடயமன்றி வேறில்லை.

மேலும், பொருள்களுக்கு வரி விதிப்பதும் விலையைத் தீர்மானிப்பதும் நாடாளுமன்றம் மற்றும் நிறைவேற்றுத் துறையின் அதிகாரங்களுக்கு உட்பட்ட விடயம் என்றாலும் -

நிறைவேற்றுத்துறை கண்மூடித்தனமாக - தான்தோன்றித்தனமாக - இத்தகைய தனது அதிகாரத்தைப் பிரயோகிக்குமானால், அதில் தலையிட்டு, பாதிக்கப்பட்ட தரப்புக்கு நியாயம் பெற்றுக் கொடுக்கும் நியாயாதிக்கம் அரசமைப்பின் கீழ் உயர்நீதிமன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டி, அதன் அடிப்படையிலேயே - இலங்கை அரசுத் தரப்பில் சீரமைத்து வழங்கப்பட்ட விலைச் சூத்திரத்தின் அடிப்படையில் - பெற்றோலின் விலையை உயர்நீதிமன்றம் தீர்மானித்தது என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

ஆக, பெற்றோல் விலை நிர்ணயம் தொடர்பாக உயர்நீதிமன்றத்தின் உத்தரவை, புறக்கணித்ததன் மூலம் அமைச்சரவை உயர்நீதிமன்ற அவமதிப்புச் செயற்பாட்டை வெளிப்படையாகவே மேற்கொண்டிருக்கின்றது என்பது வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

இது தொடர்பில் உயர்நீதிமன்றம் எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன?

கிளிநொச்சியைக் கைப்பற்றி அதன்மூலம் தென்னிலங்கையின் பௌத்த - சிங்கள வாக்காளரிடையே பெரும் செல்வாக்கையும் வரவேற்பையும் பெற்றுள்ள மஹிந்த அரசின் அமைச்சரவைக்கு எதிராக பிரதம நீதியரசர் உள்ளிட்ட உயர்நீதிமன்ற ஆயம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது என்பது உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது.

அதுவும், ஐந்து வருடங்களுக்கு மேலாக அரசமைப்பின் 17ஆவது திருத்தப்படி, தேர்தல், நிதி, நீதி, பொலிஸ், பொதுச்சேவை ஆகிய துறைகளைக் கவனிக்கும் சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவுவதற்கு வழிசெய்யும் அரசமைப்புக் கவுன்ஸில் விவகாரத்தை செயற்படுத்தாமலேயே இழுத்தடித்து வரும் அரசுத் தரப்புக்கு எதிராக உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பு வாளைத் தீட்டி வருகையில், நாளை மறுதினம் நீதிமன்றுக்கு வரும் பெற்றோல் விலை விவகாரமும் முக்கியத்துவம் பெறுகின்றது.

# முல்லைத்தீவை மீட்பதும் ஆனையிறவைப் பிடிப்பதும்; படையினரின் கவனம் இனி இந்த இரண்டில்தான்



'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை களநிலை ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் 04.01.2009 அன்று அப்பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரையில் இருந்து சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.

வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத்பொன்சேகாவுக்கு கிளிநொச்சிக்குள் படையினர் நுழைந்து விட்டார்கள் என்ற செய்தி கிடைத்தது.

கிளிநொச்சியைப் படையினர் கைப்பற்றும் நிலையில் உள்ளார்கள் என்ற செய்தியை இராணுவத் தளபதி கடந்த வியாழக்கிழமையே வெளியிட்டிருந்தார். இந்தவேளையில் படையினர் பெரும் எடுப்பில் தாக்குதல் ஒன்றைத் தொடுக்கப்போகிறார்கள் என்ற எதிர்பார்ப்பில் விடுதலைப்புலிகள் தமது எஞ்சியிருந்த இராணுவத் தளபாடங்களையும் போர் ஆயுதங்களையும் அப்புறப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தார்கள். முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இடங்களுக்கு அவர்கள் இடம்மாறிக்கொண்டிருந்தார்கள். முகமாலையிலிருந்தும் அவர்கள் வெளியேறிக்கொண்டிருந்தார்கள். என்றாலும் முன்னேறிக்கொண்டிருக்கும் படையினரைத் தடுத்து தாமதிக்கச் செய்வதற்காக சிறு குழுக்களை அவர்கள் விட்டுச் செல்லாமலிருக்கவில்லை.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு செய்தி கிடைத்தபோது அவர் பெரிதும் மகிழ்ச்சியுற்றவராகக் காணப்பட்டார். அதேசமயம் கிளிநொச்சி வெற்றியை எவ்வாறு கொண்டாடுவது என்று சில திட்டங்களும் உருவாக்கப்பட்டன. ஜனாதிபதியின் முதல் செயற்பாடு என்னவாக இருந்தது என்றால் தேசிய பாதுகாப்புச் சபையை அவசரமாகக் கூட்டி ஆலோசனைகள் கலப்பதாகும். இராணுவத்தின் வெற்றி எவ்வாறு நிகழ்ந்தது என்பதை பாதுகாப்புச் சபையினர் அவருக்கு விளக்கிக் கூறினார்கள்.

முப்படைகளின் பிரதான தளபதியாகவும் இருக்கும் ஜனாதிபதி ராஜபக்ஷ கூட்டம் ஆரம்பமானவுடன் "சரத் திறமாக செய்து முடித்துள்ளீர்கள்" என்று இராணுவத் தளபதிக்கு பாராட்டுத் தெரிவித்துக் கொண்டார். இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டவை பற்றிய விவரங்கள் தெரியாது போனாலும் கிளிநொச்சியை எவ்வாறு படையினர் கைப்பற்றினார்கள் என்பதை தளபதி பொன்சேகா விளக்கிக் கூறினார் என்பது மட்டும் தெரியவந்தது.

## முல்லைத்தீவை தற்காப்பதற்கு புலிகள் தம் வளங்களையெல்லாம் பயன்படுத்துவர்

அதன்பின் தேநீர் விருந்து இடம்பெற்றது. அந்தச் சந்தர்ப்பத்தில் பலரும் தளபதி பொன்சேகாவைப் பாராட்டுவதற்குத் தவறவில்லை.

பழைய நாடாளுமன்றக் கட்டடத்தில் ஜனாதிபதியின் செயலகத்தில் கூட்டம் நடைபெற்றது.

பின்னர் இரண்டாவது மாடியிலுள்ள விருந்து நடைபெறும் மண்டபத்திற்கு மூன்றாவது மாடியிலிருந்து ஜனாதிபதியும் பாதுகாப்புச் சபை உறுப்பினர்களும் இறங்கி வந்தார்கள். அங்கே பெரிய கூட்டம் ஒன்று காத்திருந்தது. அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், சிரேஷ்ட அரச அதிகாரிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் அங்கு காணப்பட்டனர். ஒரு தேசிய நிகழ்ச்சி தொடர்ந்தது. நாடு முழுவதுக்குமான வானொலி, தொலைக்காட்சி ஒலி, ஒளி பரப்புகள் ஆரம்பமாகின. சில நிமிடங்களில் நாடு முழுவதும் கொண்டாட்டங்கள் ஆரம்பமாகின.

கொழும்பு நகரில் பட்டாசு வெடிக்களும் வானவேடிக்கைகளும் அமர்க்களப்பட்டன.

கிளிநொச்சியை மீளக் கைப்பற்றியமை குறித்து என்னதான் கூறப்பட்டாலும் அது உண்மையில் எதற்கும் ஒப்பிட்டுக் கூறமுடியாத வெற்றியாகும் என்று ஜனாதிபதி அங்கு பேசுகையில் கூறினார். "இந்த மேன்மையான காரியத்துக்காகப் படையினர் தமது அவயவங்களை, உறுப்புக்களை ஏன் உயிர்களையும் தியாகம் செய்திருக்கிறார்கள்" என்று கூறிய ஜனாதிபதி புலிகளுக்களுக்கு விடுத்த இறுதிச் செய்தி "ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு சரணடையுங்கள்" என்பதாகும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிக்குண்டுள்ள பொதுமக்களை விடுவிக்கும்படியும் இல்லையெனில் தடை செய்வதற்கு நேரும் என்றும் அவர் புலிகளுக்கு செய்தியொன்றையும் விடுத்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்யும் வர்த்தமானி அறிவித்தல் ஒன்று எந்த நேரத்திலும் வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு தடையொன்று வருமானால் தற்பொழுது முல்லைத்தீவின் சில பகுதிகளில் மட்டுமே முடங்கிப் போயுள்ள விடுதலைப்புலிகளுடனான எந்தவிதமான பேச்சுவார்த்தையும் எதிர்காலத்தில் இடம்பெறுவதற்கு சாத்தியமே இல்லாமல் போய்விடக்கூடும். அதுபோலவே வெளிநாடுகள் பலவும் இந்தப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமில்லை. அரசியல் மட்டத்திலேயே தீர்வு காணப்படவேண்டும் என்று தெரிவித்து வருவது அர்த்தம் இல்லாமல் போய்விடும்.

ஜனாதிபதிக்குப் பிறகு தளபதி சரத் பொன்சேகா பேசினார். கிளிநொச்சி கைப்பற்றப்பட்டது பற்றிய விவரங்களைத் தெரிவித்தார். பெரும் எண்ணிக்கையான படையினர் தம் உயிர்களைத் தியாகம் செய்திருக்கிறார்கள். சிலர் அசத்தர்களாகியுள்ளனர், இன்னும் பலர் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள் என்று தெரிவித்த அவர், இராணுவ நடவடிக்கையினால் ஏற்படும் மனித இழப்புக்களைக் குறிப்பிட்டுக் கூறினார். பூநகரியைக் கைப்பற்றியதன் பின்னர் ஒரு மாத காலத்துக்குள் தமது படைகள் பரந்தன் மற்றும் கிளிநொச்சி மீது தமது கவனத்தைத் திருப்பியிருந்தார்கள் என்று கூறிய தளபதி பொன்சேகா, கிளிநொச்சி வீழ்ச்சியின் பின்னர் எஞ்சியுள்ள புலிப் போராளிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் 40 கிலோமீற்றர் அளவிலான பிரதேசத்திலேயே செயல்பட்டு வருகிறார்கள். 1500 போராளிகள் கொல்லப்பட்டுவிட்டார்கள். இன்னும் 1700 அல்லது 1900 போராளிகளே எஞ்சியிருக்கிறார்கள். ஒரு வருடத்திற்குள் எஞ்சியிருக்கும் இவர்களின் முடிவையும் நாம் கண்டுவிடலாம். அதற்கு ஒருவருடம் கூட எடுக்காது என்று தெரிவித்தார்.

கிளிநொச்சியின் இழப்பானது கெரில்லாக்களைப் பொறுத்தவரை குறைத்து மதிப்பிட வைக்கும் தோல்வியாகும். தம்மிடமிருந்த சகல வளங்களையும்



பயன் படுத்தி அவர்கள் தற்காப்புப் போரை நடத்தி வந்தார்கள். அவர்களின் இப் போதைய அவசர பின்வாங்கலுக்கான காரணம் இன்னமும் தெளிவில்லாமலிருக்கிறது. ஆனால் ஒரு விஷயம் வெளிப்

## ஆனையிறவு வீழ்ச்சியுற்றால் ஏ - 9 பாதை கட்டுப்பாட்டில் வரும்

படையாகின்றது. முன்னேறி வரும் படைகளை எதிர்த்து நிற்பதனால் தமது எஞ்சியிருக்கும் முக்கிய பலத்தினை மேலும் இழப்பதாகிவிடும் என்பதால் முல்லைத்தீவு மாவட்டத்தில் தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளைக் காப்பாற்றுவதற்கு அவைகளைத் தக்கவைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதே அது.

கிளிநொச்சியை கெரில்லாக்கள் தமது அரசியல் அதிகார மத்திய பகுதியாக மாற்றியிருந்தார்கள். அவர்களின் நிர்வாக யந்திரம் இங்கேயே செயற்பட்டு வந்தது. நீதிமன்றங்கள், வரி அறவிடும் பகுதி, சமாதானச்செயலகம், வருகை தருவோரை வரவேற்கும் அமைப்புகள் யாவும் இங்கேயே இருந்தன. அவர்களின் இராணுவ மத்தியப் பிரிவுகள் முல்லைத்தீவிலேயே உள்ளன. பொலிஸ் தலைமையகம், இராணுவப் பொருள் களஞ்சியம், பயிற்சி முகாம்கள், மற்றும் பல அமைப்பு நிறுவனங்கள் அங்குள்ளன. நேற்று விமானப் படை விமானங்கள் கடும் எடுப்பில் அப்பகுதிகளில் குண்டுமாரி பொழிந்துள்ளன.

புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மறைந்திருக்கக் கூடும் என்று கருதப்படும்இடங்களை இலக்குவைத்து இந்த விமானத் தாககுதல்கள் இடம்பெற்றிருப்பதாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மன் ஹுலுகல்ல ஒப்புக்கொண்டுள்ளார்.

கிளிநொச்சி கைப்பற்றலுடன் படையினரின் நடவடிக்கைகள் இரண்டு அம்சங்களைக் குறிக்கோளாகக் கொண்டு நடத்தப்படுகின்றன. பிரதானமான ஒன்று முல்லைத்தீவைக் கைப்பற்றுவது, இரண்டாவது ஆனையிறவைக் கட்டுப்பாட்டில் கொண்டுவருவது, அங்கிருந்து நகர்ந்து இயக்கச்சி சந்தியைக் கடந்து ஒரு காலத்தில் வெளியேறும் வாயிலாக விருந்த முகமாலை வரை செல்வதாகும். இது நடைபெற்றால் ஏ-9 பிரதான வீதி ஊடாக பொருள் விநியோகப் பாதையொன்றை மீட்டு விட்டதாகவிருக்கும்.

ஜனாதிபதி உரை நிகழ்த்திமுடிந்த கையோடு கிளிநொச்சி வீழ்ச்சிக்கு பழி வாங்கும் நடவடிக்கை என்று கூறக்கூடிய சம்பவம்ஒன்று இடம்பெற்றது. கெரில்லா தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் சிற்றம்பலம் காடினா மாவத்தையில் ட்ரான்ஸ் லங்கா ஹோட்டலுக்கு முன்னுள்ள வீதி வழியாக நடந்து முன்னர் விமானப் படை தலைமையகமாகவிருந்த பகுதிக்குள் நுழைய முற்பட்டுள்ளார். இந்தக் கட்டடங்களில் விமானப்படையினர் தங்கியிருக்கிறார்கள். இலங்கை விமானப் படையின் புதிய பல மாடிக்கட்டடத்துக்கு அருகில் இவை உள்ளன. அவர் வளா கத்துக்குள் நுழைய முயன்றிருக்கிறர். இரண்டு விமானப் படைப் பொலிசார் அவரை சோதிக்க முற்பட்டுள்ளார்கள். அச்சமயம் அவர் தமது உடலில் கட்டியிருந்த குண்டை வெடிக்கச் செய்துள்ளார்.

விமானப்படையைச் சேர்ந்த மூன்று பேர் கொல்லப்பட்டு 30 சிவிலியன்கள் காயமடைந்துமுள்ளனர். வளாகத்துக்குள் நுழைந்து விமானப்படையினர் கூட்டமாக இருந்த இடத்தில் குண்டை வெடிக்கச் செய்வதே அவருடைய எண்ணமாக இருந்திருக்கவேண்டும் என்று பொலிசார் கருதுகிறார்கள்.

இம்மாதிரித் தாக்குதல்களில் ஒரு புதிய பாணி தென்படுவதாகப் பொலிசார் கூறுகின்றனர். கடந்த டிசெம்பர் 28ஆம் திகதி வத்தளை சென்.அன்னம்மாள் தேவாலயத்துக்கருகில் சிவில் பாதுகாப்பு படையினரின் முகாம் ஒன்றில் இவ்வாறான தாக்குதல் ஒன்று நடை பெற்றிருந்தது.

இப்பொழுது முல்லைத்தீவு மற்றும் ஆனையிறவு மீதான கவனம் தீவிரமடைந்துள்ளதால் போர் நடைபெறும் இடங்களுக்கு வெளியிலுள்ள படை அமைப்புக்களின் பாதுகாப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. முல்லைத்தீவைத் தற்காத்துக்கொள்ள புலிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ள வேளையில் இனிவரும் நாள்கள் மிகச் சிக்கல் மிக்கவையாக இருக்கப் போகின்றனவென்று கருதலாம்.(ப)

### நாளை

| | |
|---|---|
| மார்கழி 22 | 06.01.2009 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | தசமி |
| | மு.இ.09.16வரை |
| நட்சத்திரம்: | பரணி |
| | பி.இ.04.37வரை |
| சுபநேரம்: | 11.02- 12.32 |
| ராகுகாலம்: | 03.32 - 05.02 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுடில்லியில் உள்ளவர்களுக்கு தமிழரை விட கொலைவெறிச் சிங்களவரா முக்கியமானோர்?

## மன்மோகனிடம் கேட்கிறார் ராமதாஸ்

சென்னை, ஜன. 5



சட்டத்துக்குக் கட்டுப்பட்ட கோடிக்கணக்கான தமிழ் மக்களை விடவும், கொழும்பில் தமிழ் மக்களைக் கொன்று குவிக்கும் சிங்களவர்கள்தான் மத்திய அரசின் அதிகாரிகளுக்கு முக்கியமானவர்களா? - என்று பிரதமர் மன்மோகன் சிங்குக்கு பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுதொடர்பாக கடந்த சனிக்கிழமை பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அந்தக் கடிதத்தின் விவரம் வருமாறு-

'இலங்கைப் பிரச்சினை - இந்திய அரசு அடுத்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகள்'' என்ற தலைப்பில் அமைந்த அறிக்கை ஒன்றை உங்களிடம் அளித்தேன். ஒரு மாதம் கடந்துவிட்டது. அதிலுள்ள யோசனைகள் தொடர்பாக எந்த நடவடிக்கையையும் மத்திய அரசு எடுக்கவில்லை.

கடலுக்கு அப்பால் தங்கள் சகோதரர்களும், சகோதரிகளும் வேட்டையாடப்படுவதைத் தடுக்க ஏதும் செய்ய முடியாமல் இங்குள்ள 6 கோடிக்கும் மேற்பட்ட தமிழர்கள் உள்ளனர். அடக்குமுறையைக் கையாளும் கொழும்பு அதிகாரிகளுடன் டில்லியிலுள்ள சில அதிகாரிகள் கூட்டாகச் செயற்படுகின்றனர்.

டில்லியிடம் சலுகைகளுக்காக எப்போதும் கெஞ்சிப் பிச்சை எடுத்துக்கொண்டிருக்கும் நிலைக்குத் தமிழர்களைக் குறுக்கிவிட முடியாது.

கடந்த ஒக்டோபரில் தமிழகச் சட்டபேரவை ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றிய உடனே, முன்னாள் தூதர்கள் என்.என்.ஜா, கே.பி.எஸ்.மேனன், தாக்கூர் அடங்கிய உயர் நிலைக்குழு கொழும்பு சென்றது.

இந்திய அரசு, தமிழக அரசியல்வாதிகள் கூறுவதைச் செவிமடுக்காது, போர்ப்படை நடவடிக்கைகளை நிறுத்துமாறு இலங்கை அரசை வலியுறுத்தாது என்று பொருள்படும் வகையில் அந்தக் குழு அங்கு வெளிப்படையாக அறிக்கைகள் வெளியிட்டது. டில்லிக்கும் கொழும்புக்கும் இடையே ரகசிய உடன்பாடு இல்லை என்றால் இது நடந்திருக்காது.

நான் உங்களிடம் அளித்த அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளபடி, நேரடியாக இல்லை என்றாலும், மறைமுகமாக ஐ.நா. பாதுகாப்பு மன்றம் மூலமாக நடவடிக்கைகள் எடுத்திருக்கலாம்.

இலங்கையில் இந்தியர்கள் கொல்லப்படுவதை, இந்தியா வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது.

திட்டம் தீட்டுதல், கொள்கைகளை உருவாக்குதல் பொறுப்பில் டில்லியிலிருக்கும் அதிகாரிகளுக்கு, சட்டத்துக்குக் கட்டுப்பட்ட கோடிக்கணக்கான தமிழ் மக்களை விடவும், கொழும்பிலுள்ள போர் வெறியர்களும் இனப் படுகொலை வெறியர்களும்தான் மிகவும் முக்கியமானவர்களா என்பதை மத்திய அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

கோடிக்கணக்கான தமிழ் மக்களின் கௌரவம், சுயமரியாதை குறித்து அவர்களுக்கு எந்த அக்கறையும் இல்லையா? இதையே இறுதி பதிலாக எடுத்துக் கொள்ளலாமா? காலம் கடப்பதற்கு முன்பு தமிழக மக்களுக்கு நீங்கள் பதில் தெரிவிக்க வேண்டும். இவ் விடயத்தில் நீங்கள் அவசர உணர்வுடன் செயற்படுவீர்கள் என நம்புகிறேன் - என்றுள்ளது.

# போர்த் தந்திரோபாயமே புலிகளின் பின்வாங்கல்; வெல்வது நிச்சயம்!

## அதற்கு துணையாகவிருப்போம் என்கிறார் வைகோ

மதுரை, ஜன. 5



"இலங்கைப் போரில் விடுதலைப் புலிகள் பின்தங்கியிருப்பது ஓர் போர் தந்திரம்தான். நிச்சயம் அவர்கள் வெல்வார்கள். நாங்கள் அவர்களுக்கு உறுதுணையாக இருப்போம். இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மிகவும் கொடூரமானவராக நடந்து கொள்கிறார். அவரது நடவடிக்கை நீடிக்காது'' - என்று ம.தி.மு.க. பொது செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

வீரபாண்டிய கட்டபொம்மனின் 250ஆவது பிறந்தநாள் விழா நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டது. மதுரையிலுள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

கிளிநொச்சியை இலங்கை இராணுவம் கைப்பற்றிவிட்டது என சிங்கள அரசு கொக்கரிக்கிறது. ஆனால் அது உண்மையல்ல. ஐ.நா. சபையின் தடை உத்தரவை மீறி சிங்கள அரசு குண்டுகளை வீசி வருகிறது. இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மிகவும் கொடூரமானவராக நடந்து கொள்கிறார். அவரது நடவடிக்கை நீடிக்காது.

தமிழினத்தை அழிக்கும் இலங்கை இராணுவத்துக்கு உதவும் மத்திய அரசைக் கண்டிக்கிறோம். போரில் விடுதலைப்புலிகள் பின்தங்கியிருப்பது ஒரு போர் தந்திரம்தான். நிச்சயம் அவர்கள் வெல்வார்கள். நாங்கள் அவர்களுக்கு உறுதுணையாக இருப்போம் - என்றார்.

# போரை நிறுத்தாத மத்திய அரசை கண்டித்து நாளை ஆர்ப்பாட்டம்

## கம்யூனிஸ்ட் கட்சி அறிவிப்பு

இலங்கைப் பிரச்சினையில் தமிழக மக்களின் உணர்வுகளையும், வேதனையையும் உணர்ந்து நடவடிக்கை எடுக்கத் தவறிய மத்திய அரசைக் கண்டித்து நாளை சென்னையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம் நடத்துகிறது.

இதுதொடர்பாக கட்சியின் செயலாளர் தா.பாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இலங்கையில் பல ஆண்டுகளாகத் தீர்க்க முடியாமல் நீடித்து வரும் இனச்சிக்கல், இனப் போராக நடந்து வந்ததில், கிளிநொச்சி நகரத்தை இலங்கை இராணுவம் கைப்பற்றி விட்டது என வந்துள்ள செய்தியை, கவலை தரத்தக்க செய்தியாகவே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில செயற்குழு கருதுகிறது.

சில நாடுகளின் இராணுவ உதவிகளுடன் போராடிய இலங்கை இராணுவம் பயங்கரவாதிகளாகக் கூறப்படும் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கப் போகிறோம் எனக் கூறிய போதிலும், இலங்கை அரசு நடத்திய கண்மூடித்தனமான வான், தரைப்படைத் தாக்குதல்களால், நிராயுத பணிகளான தமிழ்மொழி பேசும் மக்கள் கொல்லப்பட்டார்கள். சில லட்சம் பேர் அகதிகளாக்கப்பட்டார்கள்.

இலங்கை அரசின் மனிதாபிமானமற்ற மூர்க்கத்தனத்தையே இது காட்டுகிறது. 2009 ஆம் ஆண்டு புத்தாண்டு விழாப் பிரார்த்தனையிலும் விழாவிலும் ஈடுபட்டிருந்த மக்கள் மீதும் குண்டுவீசப்பட்டிருக்கின்றமை கடும் கண்டனத்துக்குரியதாகும்.

முதல்வர் தலைமையில் பிரதமரைச் சந்தித்த அனைத்துக் கட்சிக்குழு, மிகக் குறைந்தபட்சக் கோரிக்கையாக, வெளியுறவுத்துறை அமைச்சரை இலங்கைக்கு அனுப்பிவைக்கக் கோரியது. ஆனால், இன்று வரை அது நிறைவேற்றப்படவில்லை. இலங்கையில் நடக்கும் தமிழ் இனப் பேரழிவுக்குத் தீர்வுகாண வேண்டுமென்பதில் இந்திய அரசுக்கு எவ்விதக் கவலையுமில்லை. தமிழ் மக்களின் மதிப்புக் குரலை அலட்சியப் படுத்தி விட்டது. இருப்பினும், கிளிநொச்சியைப் பிடித்ததால் இராணுவ வெற்றி எனக்கூறும் இலங்கை அரசை, இன்றுடன், இத்துடன் போரை நிறுத்துமாறு இந்திய அரசு பகிரங்கமாக வற்புறுத்த வேண்டும்.

இலங்கை அரசு, உடனடியாகப் போர் நிறுத்தத்தை அறிவித்து, இலங்கை வாழ் தமிழ் மக்களின் மனித, ஜனநாயக, அரசியல் உமைகளை வழங்கி, நடைமுறைப்படுத்தக் கூடிய திட்டத்தை அறிவிக்க வேண்டுகிறோம்.

தமிழக மக்களின் உணர்வுகளையும், வேதனையையும் உணர்ந்து நடவடிக்கை எடுக்கத் தவறிய மத்திய அரசைக் கண்டித்து 6 ஆம் திகதி (நாளை) சென்னையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம் நடத்தும் - என்றுள்ளது.

# தனி ஈழக் கோரிக்கை வெல்லும் கிளிநொச்சியைப் புலிகள் மீட்பர்!

## பழ. நெடுமாறன் நம்பிக்கை

அரூர், ஜன. 5

கிளிநொச்சியை இலங்கை இராணுவம் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தாலும் 'தனிஈழம்' வேண்டும் என்ற கோரிக்கை வெல்லும் - என்று தமிழீழ விடுதலை ஆதரவு ஒருங்கிணைப்புக்குழு அமைப்பாளர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

ஈழத்தமிழர்கள் மீதான படுகொலையைக் கண்டித்து அரூரில் சனிக்கிழமை நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் பங்கேற்ற அவர் செய்தியாளர்களிடம் பேட்டியளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு-

"கிளிநொச்சியை விடுதலைப் புலிகள் வசமிருந்து இதுவரை 3 முறை இலங்கை இராணுவம் கைப்பற்றியுள்ளது. இப்போது புலிகள் பின்வாங்கியிருக்கின்றனர், மீண்டும் கிளிநொச்சியைக் கைப்பற்றுவார்கள்.

இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்த வேண்டும் என்று 6 கோடி தமிழக மக்கள் கோரிக்கை விடுத்தனர். தமிழக சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதனைத்தொடர்ந்து தமிழக முதல்வர் மு.கருணாநிதி தலைமையில் அனைத்துக்கட்சித் தலைவர்கள் புதுடில்லி சென்று பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து, இலங்கையில் போரை நிறுத்த வேண்டும் என வலியுறுத்தினர். ஆனால் எதற்கும் இந்திய அரசு அசைந்து கொடுக்கவில்லை.

இந்திய அரசு இலங்கைக்கு இராணுவத் தளவாடங்கள், நிதியுதவி ஆகியவற்றுடன் போர் வியூகம் (வழிமுறை) வகுத்துக் கொடுப்பதால்தான், இலங்கை இராணுவத்தால் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் முன்னேற முடிகிறது. இலங்கைக்கு இந்திய அரசு உதவி செய்வதால்தான், ஒரு மாதம் ஆகியும் வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி இலங்கை செல்லவில்லை.

தமிழர்களைப் படுகொலை செய்யும் இலங்கை இராணுவத்துக்கு இந்தியா எவ்வளவு உதவிகள் செய்தாலும் ஈழத் தமிழர்கள் 'தனி ஈழம்' என்ற சுதந்திரத் தாகத்தை அடைந்தே தீருவார்கள்.



இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் வரும் 8ஆம் திகதி சென்னை வருகிறார். அவரது வருகைக்கு 6 கோடி தமிழர்கள் தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும். பிரதமருக்கு கறுப்புக் கொடி காட்ட வேண்டும். கறுப்புக் கொடி காட்டும் போராட்டத்தில் பங்கேற்க அனைத்துக் கட்சித்தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளேன் - என்றார்.

# எது நடக்காது என நம்பினோமோ அது இன்று நடைபெற்றுவிட்டது!!

## கிளிநொச்சி வீழ்ந்ததால் கனிமொழி கவலை

ஈழத் தமிழர்களைக் காப்பதற்கு அனைவரும் வீறுகொண்டு எழுங்கள் - என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினரும் கவிஞருமான கனிமொழி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழா ஒன்றில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு-

தமிழர்கள் எப்போதுமே தங்களுடைய கடந்த கால பெருமைகளில் ஆழ்ந்து அதைப் பற்றி மட்டுமே பேசிக் கொண்டிருப்பவர்களாக இருக்கின்றனர். கிளிநொச்சி வீழ்ந்துவிட்டது என்ற செய்தி இன்று காதில் விழுந்தது. அங்கு ஓர்இனம்மெல்ல அழிக்கப்பட்டு கொண்டிருக்கிறது.

எது நடக்காது என்று நம்பிக் கொண்டிருந்தோமோ? அது இன்று நடைபெற்று விட்டது. நாம் இன்னும் பழங்கதைகள் பேசிக் கொண்டிருப்பதில் பலனில்லை. இதற்காக இந்த படுகொலைகளை எதிர்த்து, இன அழிவை எதிர்த்து, நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

# கிளிநொச்சியைக் கைப்பற்றியிருப்பது படுதோல்விக்குச் சமமான வெற்றியே!

## திராவிடர் கழகம் கருத்து

கிளிநொச்சியைக் கைப்பற்றிவிட்டோம் என இலங்கை அரசு அறிவித்திருப்பது தோல்விக்குச் சம்மான வெற்றி - என்று திராவிடர் கழகம் கருத்துத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து திராவிடர்கழகத் தலைவர் கி. வீரமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

ஈழத் தமிழர்கள் வாழ்வுரிமைக்காகப் போராடுகிறார்கள்; வாழ்வா, சாவா என்ற அந்த ஜீவ மரணப் போராட்டத்தில், விடுதலைப் புலிகளை ஒழிக்கிறோம் என்ற போர்வையில், தமிழ் இனத்தையே கூண்டோடு, பூண்டோடு அழித்து

## இந்தியச் செய்திகள்

விட மஹிந்த அரசு திட்டமிட்டுள்ளது.

மக்கள் நடமாட்டம் அறவே இல்லாதது கிளிநொச்சி. ஆள் நடமாட்டம் இல்லாமல் கிட்டத்தட்ட ஆவி நகரம்போல் மாறிவிட்ட நகரைத்தான் இராணுவம் கைப்பற்றியுள்ளது.

முன்னதாக 1996இல் கிளிநொச்சியை இராணுவம் கைப்பற்றியது. அதை 1998 பெப்ரவரியில் மீண்டும் புலிகள் கைப்பற்றினர் என்பது பழைய வரலாறு.

சுமார் 7 நாடுகளின் - வல்லரசு நாடுகள் உட்பட வியூகம் வகுத்துதான் ஆள் நடமாட்டமில்லாத சூனியப் பிரதேசமான கிளிநொச்சியை சிங்கள இராணுவம் கைப்பற்றியது எனக் கூறிடும் நிலையில், இது ஒரு தற்காலிக பின்னடைவு.


அங்கே நடைபெறும் ஈழத் தமிழர் வாழ்வுரிமைப் போரில் இப்படிப் பல சோதனைகளும், வேதனைகளும் ஏற்பட்டாலும் அதை எதிர்கொள்ளும் துணிவும், நெஞ்சுரமும் உள்ளவர்களாக புலிகள் இன்னமும் உள்ளார்கள்.

புலி பதுங்கினால் மேலும் தீவிரமாகப் பாயும். என்பது தமிழ்ப் பழமொழி. எப்படியாயினும் இடையில் எமது ஈழத் தமிழர்கள் இப்படிக் குண்டு மழையால் கொல்லப்பட்டு மடிகின்றனரே, எவ்வளவு காலம் இந்த இரத்த ஆறுஓட வேண்டுமோ?

விடியாத இரவுகள் இல்லை; முடியாத போர்களும் இல்லை! ஈழத் தமிழரின் சுதந்திர உணர்வுக்குக் கொடுக்கும் விலைகளும், தலைகளும் இப்படி நாளும் பெருகவேண்டுமோ?

நியாயம் பேசும் உலகமே! நீ ஏன் [illegible] என்றுள்ளது.

# வளம்பெற வாழ்த்துகிறோம்



05.01.2009 திங்கட்கிழமை தனது 60 ஆவது அகவையை கொண்டாடும் கரவெட்டி மிதிலையைச் சேர்ந்த

**தர்மராசா தவராசா**

(பிரதி அதிபர், யா/கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை)

அவர்களும் அவருடைய குடும்பத்தினரும் வளம் பல பெற்று பல்லாண்டு காலம் வாழ பூவற்கரை பிள்ளையாரின் பாதங்களைப் பணிகின்றோம்.

'வைரமஹால்', வதிரி.

திரு.திருமதி பாலேந்திரம் தவமணிதேவி (குடும்பத்தினர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாண்டு ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் புதிய பாடத்திட்டம் அறிமுகம்

மானிப்பாய், ஜன.5

ஜி.சீ.ஈ. உயர்தரத்திற்கு இந்த ஆண்டு முதல் புதிய பாடத்திட்டம் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

தேசிய கல்வி நிறுவனத் தலைவர் ரோகித லால் பெரேரா இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

இப்புதிய கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய பாடத்திட்டம் 2011 ஆம் ஆண்டில் முதன்முதலாக ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்காகவே தயாராகிறது.

தகவல் தொழில்நுட்பம் முக்கிய பாடமாக உள்ளடக்கப்பட்டே பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (202-95)

# இவ்வாண்டுக்கான பாடசாலைத் தவணைகள்

இவ்வாண்டுக்கான பாடசாலைத் தவணைகள் தொடர்பான கால அட்டவணை கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ், சிங்களப் பாடசாலைகளின் முதலாம் தவணை இன்று தொடக்கம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி வரையும், இரண்டாம் தவணை ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி தொடக்கம் ஒகஸ்ட் மாதம் 20ஆம் திகதி வரையும், மூன்றாம் தவணை செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளன.

இதேவேளை, சகல பாடசாலைகளும் 202 நாள்கள் கட்டாயம் இயங்க வேண்டும் என்றும்- ஜி.சீ.ஈ .உயர்தரப் பரீட்சைக்காக ஒகஸ்ட் மாத விடுமுறை நாள்களையும் ஜீ.சி.ஈ. சாதாரண பரீட்சைக்காக டிசெம்பர் மாத விடுமுறை நாள்களையும் எக்காரணம் கொண்டும் மாற்றக்கூடாதெனவும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (202-236)

## முந்தலில் சுற்றிவளைப்பு; 12 தமிழர்கள் கைது!

கொழும்பு, ஜன.5

புத்தளம், முந்தல் பகுதியில் படையினரும் பொலிஸாரும் சனிக்கிழமை அதிகாலை மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதலின்போது ஒரு பெண் உட்பட 12 தமிழர்கள் கைது செய்யப்பட்டதாக முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

அதிகாலை 4 மணி முதல் காலை 9.30 மணிவரை இடம்பெற்ற இத் தேடுதலில் 161 ஆண்கள், 110 பெண்கள் ஆகியோர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் உடப்பு, வவுனியா, தம்பலகாமம் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று அறியப்படுகின்றது. (அ-1)

## உழவு இயந்திரம் தடம் புரண்டு 2 படையினர் பலி!

வவுனியா, ஜன.5

வவுனியா, ஓமந்தை கொக்குலியப் பகுதியில் நேற்று முன்தினம் படையினர் சென்ற உழவு இயந்திரம் தடம் புரண்டது.

இந்த விபத்தில் 2 படையினர் உயிரிழந்ததுடன் 21 படையினர் காயமடைந்தனர் என்று பாதுகாப்புத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ-02)

## படையினருக்கு இன்று அஞ்சலி

கொழும்பு, ஜன.5

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போரில் கொல்லப்பட்ட படையினருக்கு இரண்டு நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்துமாறு அரசாங்கம் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இன்று திங்கட்கிழமை மு.ப. 8.35 நிமிடத்தில் இரண்டு நிமிட மௌன அஞ் சலி செலுத்தி நாட்டுக்கும் படைகளுக்கும் கௌரவமளிக்குமாறு அரசாங்கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கேட்கப்பட்டுள்ளது. (அ-2)

# சிவத்தமிழ்ச் செல்வியின் நினைவாலயம் நாளை மறுதினம் திறக்கப்படும்

யாழ்ப்பாணம்,ஜன.5

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 84ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழாவும் சிவத்தமிழ்ச் செல்வி நினைவாலயத் திறப்பு விழாவும் நாளைமறுதினம் புதன்கிழமை காலையில் இடம்பெறவுள்ளது.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் காலை 8.30 மணிக்கு அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன ஆன்மீக அன்பர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் நினைவாலயத்தைத் திறந்துவைப்பார்.

அதனைத் தொடர்ந்து அகில இலங்கை இந்து மாமன்ற பொதுச்செயலாளர் க.நீலகண்டன் சிவத்தமிழ்ச்செல்வியின் திருவுருவச் சிலையை திரைநீக்கம் செய்து வைப்பார்.

அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர் வி. கயிலாசபிள்ளை தம்பதிகள் சிறுவர் பூங்காவைத் திறந்துவைப்பர்.

9 மணியளவில் அறக்கொடை விழா, திருவாசகம் ஓதல் என்பன இடம்பெறும்.

தொடர்ந்து சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், ஹவாய் சைவ ஆதீன் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் பிரார்த்தனை உரைகள் நிகழ்த்துவர்.

அவற்றையடுத்து அன்னையின் பிறந்த நாள் அறக்கொடை வழங்கல் இடம்பெறும். இதில் யாழ்.போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கான அன்பளிப்பை வைத்தியசாலைப் பணிப்பாளரும், யாழ். வலயப் பாடசாலைகளில் கல்வி கற்கும் திறமையின் உச்சமும் வறுமையின் நிலையும் உள்ள மாணவர்களுக்கான கல்வி நிதியத்தை வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகமும் பெற்றுக்கொள்வர்.

தொடர்ந்து நினைவுரைகளை யாழ். அரச அதிபர் க.கணேஷ், யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர் வி.கயிலாசபிள்ளை, வலி. வடக்குப் பிரதேச செயலர் சு.முரளிதரன் ஆகியோர் நிகழ்த்துவர். (203)

## பிரதம செயலாளர் யாழ்.வருகின்றார்

வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ். ரங்கராஜா எதிர்வரும் 16ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் உள்ளூராட்சி உதவி யாளர்களுக்கான பதவி உயர்வு, சேவைப் பிரமாண குறிப்பு தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளார்.

இதேவேளை வடக்கு மாகாணத்திற்கு உள் ளூராட்சி மன்றங்களின் ''செயலாளர் நியமனம்'' குறித்து விசேடமாகக் கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (202-95)

# காணாமற் போனோரின் குடும்பங்களுக்கு மேம்பாட்டுத் திட்டம்: இன்று முதல் பதிவுகள்

யாழ்ப்பாணம், ஜன.5

குடாநாட்டில் அரசியல் காரணங்களால் காணாமல் போனவர்களின் குடும்பங்களின் நிலைமையைக் கருத்திற் கொண்டு சமூக சேவைகள் அமைச்சால் மேம்பாட்டுத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த விடயம் தொடர்பாகச் சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

குடாநாட்டில் அரசியல் காரணங்களுக்காகக் கைது செய்யப்பட்டவர்களினதும் காணாமற் போனவர்களினதும் குடும்பங்களின் நிலையைக் கருத்தில் கொண்டு இக்குடும்பங்களுக்கான மேம்பாட்டுத் திட்டமொன்றை முன்னெடுக்க சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வட மாகாணத்திற்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தீர்மானித்துள்ளார்.

அண்மைக்காலமாக இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை விடுவித்துக் கொள்வதற்கு அமைச்சர் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

இந்நிலையில் காணாமற் போனவர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவர்கள் மீள தங்களது இல்லங்களுக்குத் திரும்பும் வரை இவர்களது குடும்பங்கள் முகங்கொடுத்துள்ள பொருளாதார ரீதியிலான பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் முகமாக மேற்படி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் தேவையான உதவிகள் இனங்காணப்பட்டு வழங்கப்படவுள்ளன.

எனவே அரசியல் காரணங்களுக்காகக் கைது செய்யப்பட்டவர்களதும் காணாமற் போனவர்களதும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தங்களது விவரங்களை அமைச்சின் யாழ்.அலுவலகத்திற்கு நேரில் வந்து பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் ஏற்கனவே விவரங்களைப் பதிவு செய்து கொண்டவர்கள்- மீண்டும் ஒருமுறை தங்களது விவரங்களை உறுதிப்படுத்திக் கொள்வது நல்லது.

இன்று திங்கட்கிழமை தொடக்கம் நாளை மறுதினம் வரை மேற்படி விவரங்களைப் பதிவு செய்துகொள்ள இயலும் என்பதை அறியத் தருகின்றோம்- என்றுள்ளது.

# விவசாயச் செய்கையை ஊக்குவிக்க உலக உணவு நிறுவனம் உதவி

இணுவில், ஜன.5

குடாநாட்டில் புயல் மற்றும் வெள்ளத்தால் அண்மையில் பாதிப்படைந்த விவசாயச் செய்கையை மீளக் கட்டியெழுப்ப ஊக்குவிப்பு நடவடிக்கைகளை உலக உணவு நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக உரும்பிராய் பிரதேச விவசாயிகளுக்கு 'கரித்தாஸ் -கியூடெக்' நிறுவனம் ஊடாக உரம், பயறு, கச்சான் விதைகள் மற்றும் உப உணவு உற்பத்திக்கான மரக்கறி விதைகள் என்பன வழங்கப்பட்டுள்ளன. (202-45)

# ஊர்காவற்றுறையில் வெள்ளம் வழிந்தோட வெட்டிய பள்ளங்கள் சீர்செய்யப்படவில்லை

ஊர்காவற்றுறை, ஜன.5

அண்மையில் ஏற்பட்ட கடும் மழை, 'நிஷா' புயலினால் ஏற்பட்ட வெள்ள நீரை வெளியேற்றுவதற்காக ஊர்காவற்றுறையின் பல இடங்களிலும் வீதிகள் குறுக்காக வெட்டப்பட்டு வெள்ள நீர் வழிந்தோடுவதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. தற்சமயம் வெள்ளநீர் வழிந்தோடிய நிலையில் இவ்வாறு வெட்டப்பட்ட வீதிகள் மீள சீரமைக்கப்படவில்லை. இதனால் சைக்கிள்கள், மோட் டார் சைக்கிள்கள் மற்றும் ஏனைய வாகனங்களின் சாரதிகள் தமது வாகனங்களைச் செலுத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து இவ்வாறு வெட்டப்பட்ட வீதிகளை சீரமைப்பு செய்ய வேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அதுமட்டுமன்றி குழாய் மூலமான குடிதண்ணீரைப் பெறுவதற்கான இணைப்புக்களைப் பெறுவதற்கெனவும் சில இடங்களில் வீதிகள் குறுக்காக வெட்டப்பட்டிருந்தன. அவை கூட நீண்ட காலமாகியும் சீர் செய்யப்படவில்லைத் எனத் தெரிவிக்கப்படுகிறது. (202-127)

# எமது பண்பாடு, இனத்தின் தனித்துவத்தைப் பேணவும் பாதுகாக்கவும் ஒன்றுபட்டுச் செயற்படுதல் வேண்டும்

## வலி.கிழக்குப் பிரதேச சபைச் செயலர் கூறுகின்றார்

கோப்பாய், ஜன.5

எமது பாரம்பரிய கலைகள், பண்பாடுகளை எமது சமூகம் பேணும் வகையிலும் எமது இனத்தின் தனித்துவ அடையாளங்களை அழியவிடாமல் பாதுகாக்கவும் நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். இதற்கு உள்ளூராட்சி விழாக்களும் வித்திடுகின்றன.

வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர் த.நடராஜா இப்படிக் குறிப்பிட்டார்.

வலி.கிழக்குப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார இறுதிநாள்விழா அண்மையில் புத்தூரில் உள்ள தலைமைப் பணிமனையில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே செயலாளர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் அவர் தெரிவித்தவை வருமாறு:

கடந்த காலங்களில் முன்பள்ளிகளை மையமாக வைத்து நடைபெற்ற உள்ளூராட்சி விழா இவ்வருடம் பிரதேசத்தின் அபிவிருத்தியை நோக்காகக்கொண்டு முன்னெடுக்கப்பட்டமை சிறப்பானதாகும்.

இதற்கு முன்னோடியாக எமது ஊழியர்கள் பண்பாடுகளைப் பேணும் கோல உடைகள் அணிந்துள்ளனர். அத்துடன், பாரம்பரிய விளையாட்டுக்களை நெறிப்படுத்தி சிறப்புற நடத்தியுள்ளனர். சமூகத்தின் அவசர தேவைகளைக் கருத்தில் கொண்டு தம்மாலான நலத்திட்டங்களை முன்னெடுத்துள்ளமை போற்றத்தக்கதாகும்.

எமது ஊழியர்கள் சமூகத்தோடு நெருக்கத்தை ஏற்படுத்தும் விதமாக பல செயற்பாடுகள் முன்னெடுத்தமையில் பாடசாலைகளுக்கிடையே கட்டுரைப்போட்டி, பொது அறிவுப் போட்டிகள் நடத்தியமை, முன்பள்ளிகளிடையே ஒருங்கிணைந்த போட்டிகள், கழிவகற்றும் பணிகள், விழிப்புணர்வு கருத்தரங்குகள், பார்த்தீனியம் அழிப்பு போன்றன குறிப்பிடத்தக்கதாகும் - என்றார்.

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் தனதுரையில், மக்களுக்கும் பிரதேச சபைக்கும் நெருக்கத்தை ஏற்படுத்தும் செயற்பாட்டிற்காகவே உள்ளூராட்சி வாரம் தோன்றியது. இந்த நோக்கத்தை வலி.கிழக்குப் பிரதேச சபை சிறப்பாக முன்னெடுத்து வருவது பாராட்டிற்குரியது.

ஒரு பிரதேசத்தின் வளர்ச்சி அப்பிரதேச மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. அந்த மக்கள் பிரதேச சபையினருக்கு பூரண ஒத்துழைப்பை, ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் இலகுவாக அபிவிருத்தித் திட்டங்களைத் தீட்டி அவற்றை முன்னெடுக்க உதவியாக இருக்கும் - என்றார்.

சுன்னாகம் வாழ்வக தலைவர் ஆ.ரவீந்திரனும் உரை நிகழ்த்தினார். நிகழ்வின் இறுதியில் வாழ்வக மாணவரின் இசை நிகழ்ச்சி, பரிசளிப்பு நிகழ்வு என்பன இடம்பெற்றன. (202-72)

## பொறுப்புணர்வுடன் செயற்பட்ட இளைஞர்கள்

இணுவில், ஜன.5

கொக்குவிலில் உள்ள கல்வாரித் திருச்சபையின் தேவாலத்தில் இவ்வாரம் நடைபெற்ற விழா ஒன்றின்போது போக்குவரத்து வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்காக பிறவுண் வீதிக் குக் குறுக்கே மண் அணை போட்டிருந்தார்கள்.

குறித்த தினத்தில் நிகழ்வு முடிவுற்றது மறுநாள் காலையிலேயே அந்த மண்பிட்டி இளைஞர்களால் அகற்றப்பட்டதைக் காணமுடிந்தது.

இந்தப் பொறுப்புணர்வும், பண்பும் பாராட்டத்தக்கதாகும்.

இது போன்றே வேறு சில இடங்களில் போடப்பட்ட மண் அணைகள் அகற்றாமல் போக்குவரத்துக்குத் தடையாக இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. (20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறையில் கிணறுகள் இறைப்பு

வடமராட்சி, ஜன.5

பருத்தித்துறை பிரதேச சபைப் பகுதியில் உள்ள குடிதண்ணீர்க் கிணறுகள் நீர்இறைக்கும் இயந்திரங்கள் மூலம் இறைத்து சுத்தம் செய்யப்பட்டு வருகின்றன.

பிரதேச சபை மேற்கொண்டுவரும் இந்நடவடிக்கையின் போது முதலில் பிரதேச சபைக்குச் சொந்தமான பொதுக் கிணறுகள் யாவும் கலக்கி இறைத்துச் சுத்தம் செய்யப்பட்டன.

இதனைத் தொடர்ந்து பொதுமக்களுக்குச் சொந்தமான குடிதண்ணீர் கிணறுகளை இறைத்து சுத்தம் செய்யும் வேலைகள் தற்போது தினந்தோறும் நடைபெற்று வருகின்றன.

குடிதண்ணீர் கிணறுகளைச் சுத்தம் செய்ய விரும்பும் பொதுமக்கள் நீரிறைக்கும் இயந்திரத்திற்குத் தேவையான மண்ணெண்ணையை வழங்கினால் பிரதேச சபைக்குச் சொந்தமான நீரிறைக்கும் இயந்திரத்தின் மூலம் குடிதண்ணீல் கிணறுகளை இறைத்துச் சுத்தம் செய்து தர முடியும் என பிரதேசசபைச் செயலளர் ச.சந்திரயோகன் தெரிவித்தார்.

இது தொடர்பாக பொதுமக்கள் பிரதேச சபை அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொண்டால் தாமதமின்றி குடிதண்ணீர் கிணறுகளைச் சுத்தம் செய்து தரமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (202-236)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன.5

மீசாலை கிழக்கு சித்திரவேலாயுதர் ஆலயத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி காலை 6 மணி தொடக்கம் ஆலய பஜனைக் குழுவினரால் திருவாசக முற்றோதல் நடைபெறும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (202-207)

* * *

வடமராட்சி, ஜன.5

புலோலி வடமேற்கு வில்லிபாதி முருகன் கோயிலில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிமுதல் திருவாசக முற்றோதல் நிகழ்வு நடைபெறவுள்ளது. (202-236)


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 30.04.1934 மறைவு 20.12.2004

திதி: 05.01.2009

### அமரர் சொக்கலிங்கம் துரைஐயா

(கமலா ஸ்ரோர்ஸ், சந்திரன் பான்சி பலஸ், துரைஐயா மண்டபம்)

தோற்றம் மறைந்தாலும்
துயரங்கள் மறையவில்லை
காலம் மறைந்தாலும்
கவலைகள் மறையவில்லை
வாழும் காலங்கள் வரை
உங்கள் ஞாபகம் எம் மனதைவிட்டு அகலாது

மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



வேலணையூர்

### திருமதி சின்னம்மா குமாரரத்தினம்

திதி:- நவமி (05.01.2009)

மண்ணில் மகிழ 16-05-1922 | மனம் நெகிழ 18-12-2007

இல்லத்தில் இனிது வாழ்ந்து,
இன்பச் செல்வங்களாய்ப் பிள்ளைகளைப் பெற்று,
இன்முகத்தோடு சீராட்டிப் பாராட்டி வளர்த்த அம்மா!
இனிதேயவர்கள் வாழ வழிகாட்டி,
நீங்கள் மறைந்து ஆண்டு ஒன்றுதான் ஆனதுவோ
மறுபடியும் இங்கு வந்து பிறந்திடுங்கள் அம்மா!

(87482)

42/9, கோணாவளை வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

## நான்காவது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 25-06-1955

உதிர்வு 19-12-2004

### அமரர் கிட்டிணன் தர்மலிங்கம்

(ஆசிரியர்-யா/கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரி, கரவெட்டி)

அப்பாவே!
கடந்து போகும்
காலங்களிலும்
கலைந்து போகாத-உங்கள்
நினைவுகளோடு......
ஆண்டுகள் நான்கதனில்
கனவில் மலர்ந்த
கதைகள் பல.
கனவாகவே போன
காட்சிகள் பல பல.....
வாழ்த்தில் முதல் நாளாகிய-அந்த
ஞாயிறுதான் எமக்கு
கரிநாள் ஆகுமென நினைக்கவில்லை-
அந்த ஞாயிறுதான் காலனவன்
உம்மைக் காவுகொள்ளக் காத்திருந்த
கெடுநாள் என்பது புரிந்து விட்டது.
எதை, இழக்கக் கூடாதோ
அதை இழந்து...எல்லாம் இழந்த
சருகுகளாய் அலைகின்றோம்.
கள்ளமில்லா வெள்ளைச் சிரிப்பாக பொங்கும்
அந்தக் கடல் நுரையில்
ஒரு திவலையாக-அதில்
நாம் என்றும் ஒன்றித்
தவழிருப்போம் அப்பாவே......!

(81344)

குடும்பத்தினர்.
முடக்காடு, நெல்லியடி,
கிழக்கு நெல்லியடி.

## என்றும் நீங்காத நினைவில்......

4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 30 ★ 04 ★ 1934 | மறைவு 20 ★ 12 ★ 2004

21 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12 ★ 07 ★ 1954 | மறைவு 19 ★ 10 ★ 1989

அமரர் சொக்கலிங்கம் துரைஐயா | திதி:- 05.01.2009 | அமரர் துரைஐயா பாலச்சந்திரன்

(கமலா ஸ்ரோர்ஸ், சந்திரன் பான்சி பலஸ் உரிமையாளர்கள்)

அன்பான வார்த்தைகளாலும் அயராத உழைப்பாலும்
அனைவரையும் அரவணைத்து அகிலத்தில்
ஏற்றமுற வைத்த தெய்வங்களே! பாசத்தின் இருப்பிடமாய்
பொறுமையின் பொக்கிஷமாய் எங்கள் இதயத்தில் என்றும்
அணையாத் தீபமாய் சுடர்வீசும் எங்கள் தெய்வங்களே!
ஆண்டுகள் பல சென்றாலும் ஆறிடுமோ நம் துயரம்.

து.பிரேமச்சந்திரன்.
கமலா ஸ்ரோர்ஸ்,
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

(81466)

குடும்பத்தினர்.
சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

## நீங்காத நினைவில்

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னைமடியில் 10.04.1994 | இறைவன்மடியில் 06.12.2008

அமரர் குகராசா ராகுலன்

காலங்கள் பல ஓடினாலும்
நீங்காது உன்-நினைவுகள்
மழை வந்து போய்விட்டால்
மறுகணமே இருள் போய்விடும்
எம் செல்வமே நீயில்லா
நம்வாழ்வில்இருள்நீங்குமோ?
தினம்தினம்உன்நினைவில்
ஏங்கித்தவிக்கின்றோம்.

எங்கள் கண்ணீர்பூக்களை எமது செல்வத்திற்கு காணிக்கை ஆக்கி. ஆத்மா இறைவனின் பொற்பாதங்களில் அமைதி பெறவேண்டுகின்றோம்.

அந்தியேட்டி கிரியைகள் இன்று 05.01.2009 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்

ஆஸ்பத்திரி வீதி,
அச்சுவேலி தோப்பு,
அச்சுவேலி
T.P 0778036216


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் இன்னல்களையும் பிரச்சினைகளையும் வெளிக்கொணர்வதற்கு பலரும் பயந்த வேளையிலும் துணிந்து குரல் கொடுத்த குமார் பொன்னம்பலம்



மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களது 9ஆவது சிராத்த தினம் இன்றாகும். இலங்கைச் சரித்திரத்திலேயே ஒரு தமிழ்த் தலைவர் தமிழர்களுக்காக குரல் கொடுத்த காரணத்துக்காக சிங்களத் தீவிர வாதிகளால் கொலை செய்யப்பட்டமை இதுவே முதற்தடவையாகும். அவர் கொலை செய்யப்படும்பொழுது அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந் தார். மாபெரும் தலைவர், சட்ட வல்லுனர், மறைந்த ஜி.ஜி.பொன்னம்பலம் (Q.C) அவர்களின் மறைவின் பின் அவரது மைந்தரான இவர் கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்று எல்லோரும் மெச்சத்தக்க வகையில் நடாத்தி வந்தார்.

அப்போதைய அரசியல் சூழ்நிலைக்கேற்ப தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் அரசியற் கோட்பாடுகளை ஏற்று இலங்கை வாழ் தமிழர்களது பிரச்சினைகளை திம்புக் கோட்பாட்டின் அடிப்படையில் தீர்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன் ஒரு தீர்வைக் கொண்டு வருவதற்கு எல்லா வழிகளிலும் செயற்பட்டார். இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நாமத்தை உச்சரிக்கவே யாரும் அஞ்சித் தயங்கிநின்ற வேளையில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேசுவதால் மட்டுமே தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட முடியும் என்ற யதார்த்தத்தை பகிரங்கமாக வெளிக்கொணர்ந்த பெருமை அமரர் குமார் பொன்னம்பலம் அவர்களையே சாரும். மேலும் தமிழர்களின் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் என்பதையும் தமிழீழ விடுதலைப்புலிகளே தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதையும் இலங்கையிலும் சர்வதேசத்திலும் ஆணித்தரமாக எடுத்துரைத்தவர் அமரர் குமார் அவர்களே. இவர் தமிழீழ விடுதலைப்புலிகளை ஆதரிப்பதால் ஆத்திரமும் துவேசமும் கொண்டிருந்த பலர் இவரைப் பார்த்து இவ்வளவு ஆதரவு இருப்பின் நீங்கள் ஏன் இன்னமும் அவர்களுடன் சேரவில்லை

**இன்று இவரது 9ஆவது நினைவு தினம்**

எனக் கேட்டபோது என்னுடைய பாசறை வேறு அவர்களது பாசறை வேறு எனப் பதில் கூறியிருந்தார். இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையையும் அவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மனித உரிமை மீறல்களையும் சர்வதேசத்திற்கு வெளிக்கொணர்ந்த பெருமையும் அமரர் குமார் பொன்னம்பலம் அவர்களையே சாரும். இதற்காக இலங்கை வாழ் தமிழர்கள் அவருக்கு என்றும் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

அவரது இந்தக் கொள்கைகளால் அவரைக் கைது செய்யும் நோக்குடன் சந்திரிக்கா அம்மையாரின் அரசு இரகசியப் பொலிசாரை அவரது வீட்டுக்கு அனுப்பி பல மணிநேரமாக விசாரணை செய்து அவரது வாக்குமூலத்தைப் பெற்றது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார் தென்னாபிரிக்காவில் வைத்து "தமிழர்கள் இலங்கையின் பூர்வீகக் குடிகள் அல்லர்" எனப் பேட்டியளித்த சம்பவத்தைக் கண்டித்த ஒரே தமிழ்த் தலைவர் குமார் அவர்களே ஆவார். அவர் படுகொலை செய்யப்படுவதற்கு சில நாள்களுக்கு முன்பு சந்திரிக்கா அம்மையார் தொலைக்காட்சி ஒன்றில் விடுதலைப்புலிகளைக் கடுமையாகத் தாக்கிப் பேசி "புலிகளுக்கு ஆதரவாக இயங்குபவர்கள் கொழும்பில் இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள்" என்ற கருத்தில் பேசியி ருந்தார். மறுநாள் காலை குமார் தொலைபேசி யில் என்னுடன் தொடர்புகொண்டு இனி யும் தான் நீண்டகாலம் வாழ்வது கடினமென என்னிடம் கூறியிருந்தார். அவரின் கொலைக்கு சந்திரிக்கா அரசே பொறுப்பேற்க வேண்டும்.

குமார் பொன்னம்பலம் அவர்களது கொலைச் சம்பவத்தை விசாரணை செய்த பொலிஸ் அதிகாரியான பந்துல விக்கிரமசிங்க விசாரணை அறிக்கையையும் கொலையோடு சம்பந்தப்பட்டவர்களின் விவரத்தையும் 2000ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதமே அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்காவிடம் கையளித்திருந்தும் அவர் எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது தொடர்பாக பாராளுமன்றத்தில் பல தடவைகள் நான் எனது கடுமையான வாதங்களை முன்வைத்திருந்தேன். தகுந்த அரசியற் தலைமையின்றி தமிழினம் அனாதையாக்கப்பட்டு படுமோசமான கட்டத்தை அடைந்திருக்கும் நிலையில் அவ்விடத்தை நிரப்பக்கூடிய தலைமகன் குமார் பொன்னம்பலமாகவே இருந்தார். அதனையும் கருத்தில் கொண்டுதான் அவர் கொலை செய்யப்பட்டபோது "மாமனிதர்" என்ற பட்டம் அவருக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. அவரைக் கொலை செய்தது யார் எனத் தெரிந்த பின்பும் அவரின் கொலைச் சம்பவத்தை விசாரித்த பொலிஸ் காவல் உத்தியோகத்தர்கள் கொலை செய்தவர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். கொலை செய்தவர்களுக்கு எதிராகத் தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை.

புலம்பெயர்ந்த தமிழர்களைப் பொறுத்தவரையில் அவர் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் ஆற்றிய தொண்டுகளால் அவர்களின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்தார். இலங்கை அரசியில் சரித்திரம் எழுதும்போது ஜனநாயகக் கட்சி கூட்டமைப்பின் விஞ்ஞானம் (Democratic People's Alliance Manifesto) உருவாவதற்கு இவர் ஆற்றிய சேவை பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும். இந்த விஞ்ஞாபனத்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சி, தினேஸ் குணவர்த்தனாவின் மக்கள் ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி, முஸ்லிம் காங்கிரஸ், பல்கலைக்கழக மாணவர் முன்னணி முதலிய பல கட்சிகளும் சேர்ந்து உருவாக்கின. அதில் அனைத்துக் கட்சியினரும் கையெழுத்திட்டனர். இதை சிறிமாவோ அம்மையார் கைவிட்டிருக்கா விட்டால் தமிழர்களது பிரச்சினை அப்போதே தீர்க்கப்பட்டிருக்கும். 1985ஆம் ஆண்டு முதல் அவர் இறக்கும்வரை பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசர காலச் சட்ட விதிகளின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களுக்காக இலவசமாக வாதாடி அவர்களுக்கு விடுதலை பெற்றுக் கொடுத்தார். அவர் ஆற்றிய சேவை இதுவரை யாரும் ஆற்றியதில்லை. அவர் இறந்தபோது களுத்துறைச் சிறைச்சாலை

அப்பாத்துரை விநாயகமூர்த்தி
சிரேஷ்ட சட்டத்தரணி
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
தலைவர்-அகில இலங்கைத்
தமிழ் காங்கிரஸ்

யில் கறுப்புக்கொடி பறக்கவிடப்பட்டமை இதை நிரூபிக்கிறது. அவர் மறைவதற்கு சற்று முன் தேர்தலை எதிர்நோக்கி தமிழ்ப் பகுதிகளில் போட்டியிடுவதற்கு ஒரு பட்டியலைத் தயாரித்திருந்தார். இதுவும் அவரது கொலைக்கு காரணமாக அமைந்திருக்கலாம்.

இவரது மூன்றாமாண்டு நினைவு மலரில் கவிதாஞ்சலி வழங்கியுள்ள மறைந்த தமிழறிஞர் க.சொக்கனவர்கள்

( 12ஆம் பக்கம் பார்க்க).

# ராசி பலன்

05-01-2009முதல்
11-01-2009 வரை

பொ.சந்திரலிங்கம்

## மேடம்



அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகியிருக்க விரும்புவர். தாய் நலம், தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழிற்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இராது.

## இடபம்



கார்த்திகை 2, 3, 4. ரோகிணி, மிருகசீரிடம் 1, 2

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். நல்ல வீடு ,வாகனம் அமையலாம். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரின் கைஓங்கலாம். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மனஅமைதி இருக்காது.

## மிதுனம்



மிருகசீரிடம் 3, 4. திருவாதிரை,புனர்பூசம் 1, 2, 3

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகும். பணம் இருக்கும். உறவினர்,அயலவர்உதவுவர்; உதவியை எதிர்ப்பார்ப்பர்,தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை யுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மனஅமைதி இருக்காது.

## கடகம்



புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்பு கள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்கும்.


## சிம்மம்



மகம், பூரம், உத்தரம் 1

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

## கன்னி



உத்தரம் 2, 3, 4. அத்தம், சித்திரை 1, 2

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்கும்.

## துலாம்



சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்க லாம்.பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்பு உண்டு. புதிய முதலீடு கள் அமையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாச மாக இருப்பர். மன அமைதி இருக்கும்.

## விருச்சிகம்



விசாகம் 4, அனுசம், கேட்டை

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் குறைய லாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

## தனுசு



மூலம், பூராடம், உத்தராடம் 1.

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விலகிஇருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில் துறை முன்னேறும். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்காது.

## மகரம்



உத்தராடம் 2 ,3, 4. திருவோணம், அவிட்டம் 1, 2

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு,வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

## கும்பம்



அவிட்டம் 3, 4. சதயம், பூரட்டாதி 1, 2, 3

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமணவாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில் துறை முன்னேறும். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்கும்.

## மீனம்



பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.மனஅமைதி இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோலுரிகிறது இந்தியாவின் இரட்டைவேடம்: அவர்களுக்கு ஒரு நியதி? ஈழத்தமிழருக்கு ஒரு நியதியா?

*'தமிழ்த் தேசியமும் இந்தியத் தேசியமும் மும்பைத் தாக்குதலினூடாக ஒரு பயணம்' என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் வெளியாகிய கட்டுரையின் இறுதிப் பகுதி இது.*

''நான் 'பயங்கரவாதியாக' நடிக்க முடியாது. நீங்கள் வேண்டுமென்றால் கதையை மாற்றுங்கள்: பிறகு 'கால்சீட்' தருவது பற்றி யோசிக்கிறேன்'' என்று ஏதேதோ உளறினார். அவருக்காகவே நீண்ட நாள்களாகக் காத்திருந்த எனக்கு அது அதிர்ச்சி. ஒரு பெண் போராளியாக நடிக்கச் சம்மதித்திருந்த அவருக்கு மும்பைத் தாக்குதலை அடுத்து அவருடைய பாத்திரம் அவரளவில் 'பயங்கரவாதமாகி' இருந்தது. அவரில் எந்தத் தவறும் இல்லை. இது உளவியல் சிக்கல்.

செப்.11 தாக்குதலை அடுத்து அமெரிக்கா செய்த முதல் வேலை, உலகெங்கிலுமுள்ள போராட்ட அமைப்புக்களை எந்த வித பாகுபாடுமின்றி தடைசெய்ததுதான். தொடங்கி அடுத்த நாளே மூடுவிழா நடத்திய 'லெட்டர் பாட்' அமைப்புக்கள் தொடக்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு வரை 'பயங்கரவாத' பட்டியலில் இணைக்கப்பட்டன.

இது எங்கேயோ தேள் கொட்ட எங்கேயோ நெறி கட்டியதாம் என்ற எமது கிராமத்து கூற்றுக்கு நல்ல உதார ணம். அந்த நடிகைக்கு ஏற்பட்டது தனி உளவியல் சிக்கல். அமெரிக்காவுக்கு உண்டாகியது கூட்டு உளவியல் சிக்கல். இரண்டுக்கும் பெரிதாக வேறுபாடு இல்லை.

எனது தோழி ஒருத்தி 'ஒக்ஸ்போட்' பல்கலைக்கழகத்தில் இந்த தனி - கூட்டு மன உளவியல் தொடர்பாக கலாநிதிப் பட்ட ஆய்வு மேற்கொண்டிருக்கிறார். அந்த ஆய்வு மட்டும் சரியாக வெளிவருமென்றால் 'பயங்கரவாதம்' குறித்த தனி மதிப்பீட்டையும் அரசுகளின், அமைப்புக்களின் பொது மதிப்பீட்டையும் ஒரு வரையறைக்குள் நாம் கொண்டு வரலாம். எம்மீது தடவப் பட்டிருக்கும் ''பயங்கரவாதச்'' சாயத்தை அதன்வழி கழுவ முற்படலாம்.

அந்த நடிகை இரண்டு நாள்களில் தொடர்பு கொள்வதாகக் கூறி பெங்களூர் சென்றவர் தொடர்புக்கு வந்தார். அவருடைய 'கோபம்' ஏகத்திற்கும் குறைந்திருந்தது. பொறுமையுடன் எல்லாவற்றையும் கேட்டார். ''பயங்கரவாதம் என்றால் என்ன? எது பயங்கரவாதம்? அதன் மூலமும் வேரும் எங்கிருந்து தொடங்குகின்றன. விடுதலைப் போராட்டங்களையும் பயங்கரவாத செயல்களையும் ஒரே தராசில் வைத்து மதிப்பிடுவது சரியா? என்பவற்றையெல்லாம்தான் நாம் உங்களின் பாத்திரத்தினூடாகப் பேச விரும்புகிறோம். நீங்கள் முதலில் உங்கள் பாத்திரத்தை உணருங்கள். பிறகு நடிப்பது பற்றி முடிவெடுப்போம்'' என்று நீண்ட வியாக்கியானம் கொடுத்த பிறகு ஏதோ புரிந்தவர் போல் அடுத்த வாரம் சென்னை சென்று தொடர்பு கொள்கிறேன் என்றவர் மீண்டும் சென்னையிலிருந்து தொடர்புக்கு வந்தார். அவரிடமிருந்து 'மும்பை' காணாமல் போயிருந்தது. பழைய தோழியாக அன்பொழுகப் பேசினார். ஏனெனில் தமிழகம் அவரை மாற்றிவிட்டிருந்தது.

மேலே நான் குறிப்பிட்டது முழுவதும் ஒரு நடிகையின் கதை இல்லை, இந்தியத் தேசியம் கைநழுவின கதை இது. அவர் மும்பையிலிருந்த போது தாக்குதலை விட உக்கிரமாக 'பயங்கரவாதம்' குறித்து ஊடகங்கள் ஒரு தாக்குதலை ஆரம்பித்திருந்தன. அதன் விளைவுதான் அவரில் தொற்றிக் கொண் டது. அவர் பெங்களூர் (அவரது தாயின் சொந்த இடம்) வந்த போது கன்னட தேசியமும் பிழைக்க வந்த இட மான சென்னை வந்த போது தமிழ்த் தேசிய மும் அவரைப் பிடித்துக்கொண்டன. இந்தியத் தேசியம் தொலைந்து போனது.

மும்பையில் தாக்குதல் நடந்த பிரதேசங்கள் தவிர்ந்து மற்ற இடங்களில் இயல்பு வாழ்க்கை தொடர்கிறது என்று பிபிசி செய்தியாளர் சொல்லிக்கொண்டிருந்த போது இந்திய ஊடகங்கள் முழு இந்தியாவுமே பற்றி எரிவது போன்ற பிரமையை உருவாக்க பெரும் பிரயத்தனப் பட்டன.

பெரும்பாலான இந்திய ஊடகங்களின் எதேச்சதிகாரமான போக்கையும் இந்தியத் தேசியம் என்ற போர்வையில் இந்துத்துவ அரசியலை கட்டமைக்க முற்படுவதையும் மும்பைத்தாக்குதலை அடுத்து மிகத் தெளிவாகவே உணரக்கூடியதாகவிருந்தது. உதாரணத்துக்கு மும்பைத் தாக்குதலின் பின்னான 'இந்தியா ருடே' வார இதழை நாம் ஆய்வுக்கு உட்படுத்திப் பார்ப்போம்.

டிசம்பர் 17 தேதியிட்ட இந்தியா டுடே 'பயங்கரவாத' சிறப்பிதழாக அதைக் கட்டமைத்திருந்தது. மும்பைத் தாக்குதலை விட வன்முறையாக அந்த இதழ் இருந்தது. ''பயங் கரவாதத்தின் மீது போர்தொடுப் போம். நாம் இப்போதே போரிட்டாகவேண் டும். எதிரியைத் தோற்கடிப்போம் என்று மும்பைத் தாக்குதலுக்கு நிகரான வன்முறையை எழுத்தில் வடித்திருந்தது.

இதே இதழ்தான் காலம்காலமாக தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக நச்சுக் கருத்துக்களைப் பரப்பி வருகிறது. செஞ் சோலையில் குண்டு வீசி சிங்களம் அப்பாவி சிறுமிகளை கொலை செய்தபோதுகூட புலிகளின் முகாம்தாக்கப்பட்டதாக எழுதி யிருந்தது. ஒரு வேளை சிறுமிகள் கொல்லப்பட்டது உண்மையாக இருந்தால்கூட அதற்கு போர் தீர்வு இல்லை என்று திருவாய் மலர்ந்த இந்த இதழ் இப்போது பாகிஸ்தானை முன்னிறுத்தி ''கொல்லுவோம், அடிப்போம்'' என்று ஆசிரியர் தலையங்கம் எழுதுகிறது.

அண்மையில் இதன் ஆசிரியர் குழுவிலிருந்து ராஜ் செங்கப்பா என்பவர் சிங்கள அரசின் ஆசியுடன் இராணுவத்தின் உதவியுடன் வன்னிக்களத்துக்கு சென்று ''பிரபாகரன் சுற்றி வளைப்பு'' என்று கவர் ஸ்டோரி எழுதினார். ஊடகத் தர்மத்தின் எந்த வரையறைக்குள்ளும் பொருந்தாத ஆய்வு அது.

புலிகளின் பகுதிக்கு செல்லாமல் அங்கி ருந்த மக்கள் எவரையும் சந்திக்காமல் ஒற்றைத் தர்மத்தின் அடிப்படையில் தர்க்க நியாயங் களை புறக்கணித்து எழுதப்பட்ட கோமாளித் தனமான ஆய்வு அது. சிங்களத்தின் தேவை யையும் ஆசையையும் ஆய்வு என்ற பெயரில் உளறியிருந்தார். அது ஒருவகையில் இந்திய அதிகாரத் துவத்தின் ஆசையும்கூட என்பது எமக்குத் தெரியாததல்ல.

இதன் தமிழ்ப்பதிப்பின் ஆசிரியராக முன்பிருந்த வாஸந்தி அம்மையார் ஒரு முறை எழுதியிருந்தார். ''மாவீரர் நாள் வரும்போது வீதியெங்கும் பாடல்கள் ஒலிக்கவிடப்பட்டு தாக்குதல் ஒளிப்பதிவுகள் காண்பிக்கப்பட்டு போலியான தேசியம் ஒன்று இளைஞர்கள் மத்தியில் வளர்க்கப்படும். அப்படியே போராட்டத்துக்கு புலிகள் ஆள்பிடித்து விடு வார்கள்'' என்று எழுதியிருந்தார். இப்போது மட்டும் இந்த குழுமம் மும்பைத்தாக்குதலை முன்னிறுத்தி செய்ய முற்படுவது என்ன? போலியான ஓர் இந்திய தேசியத்தை கட்டமைக்க முற்படுகிறார்கள். ஆனால் ஏற்கனவே அது தகர்ந்துபோனதை மும்பைக்கு பின்னான சில நிகழ்வுகள் அடையாளம் காட்டியிருக்கின்றன.

''வெற்றியில்லாவிட்டால் நம்மால் பிழைத்திருக்க முடியாது'' என்ற வின்ஸ்டன் சேர்ச்சிலின் புகழ் பெற்ற வாக்கியத்தை பொருத்தமற்ற முறையில் தமது ஆசிரியர் தலையங்கத்தில் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் உண்மையிலேயே மேற்படி வாசகம் எமக்கானது. ஆனால் நாம் பயன்படுத்தினால் அது பயங்கரவாதம், அவர்களுக்கு மட்டும் அது நீதிக்கான அழைப்பு. எத்தகைய முரண்பாடு.

மும்பைத் தாக்குதல் ஏன் நடைபெற்றது? அதன் மூலம் என்ன? என்ற நீதியான ஆய்வைத் தவற விட்டுவிட்டு போலியான ஒரு தேசியத்தை வளர்க்க முற்படும் இந்திய ஊடகங்களின் கோமாளித்தனத்தை எண்ணி சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை.

***இந்தியா என்ன செய்யலாம்?***

இந்தியா இதற்கு என்ன செய்யலாம்? என்பதற்கு தீர்வாக ராஜ் செங்கப்பா எழுதிய வழிகளைப் பாருங்கள்:

* பாகிஸ்தானினுக்குள் சென்று பயிற்சி முகாம்கள் மீது விமானத் தாக்குதல் நடத்துவது.
* ரகசியமான நடவடிக்கைளை பாகிஸ்தானில் மேற்கொள்வது.
* முக்கியஸ்தர்களை கடத்தி கொண்டு வந்து பிணைக் கைதி ஆக்குவது.

அடப்பாவிகளா இதைத்தானேடா அந்தத் தீவிரவாதிகள் உங்கள் நாட்டில் செய்திருக்கிறார்கள். இப்படி மும்பைத்தாக்குதலுக்கு முன்பே சில ரகசிய வேலைத்திட்டங்களை இந்தியாவுக்கு வெளியில் நீங்கள் மேற்கொண்டதற்கான எதிர்வினைதான் மும்பைத்தாக்குதல். அதாவது உங்களது

*பிரான்சிலிருந்து*
**பரணி கிருஷ்ண ரஜனி**

மோசமான வெளிவிவகாரக் கொள்கை. அதை மாற்றுவதை விட்டுவிட்டு அடிப்போம், கொல்வோம் என்று ஊடகங்களே அலறுவது அபத்தமாக இருக்கிறது.

இந்த இதழ்வழியே இவர்களது போலித் தேசியம் அம்பலாமானதுதான் சுவாரசியமானது. பாருங்கள், பின்லேடனைத் தேடுவதற்கான சி.ஐ.ஏ.யின் முன்னாள் தலைவரான Michael F.Scheuer இடம் இருந்து, அவர் நம்மாள் தானே என்று நினைத்து ஒரு கட்டுரை வாங்கி வெளியிட்டுள்ளார்கள். இவர் தனது பணியின் காரணமாக கோணங்கித்தனமாக உளறக்கூடிய ஆள். அவருடைய பயங்கரவாதம் குறித்த நூல்களை வாசித்தவர்களுக்கு அது தெரியும். ஆனால் மனுசன் இப்ப செம தெளிவு. (ஆள் திருந்தவில்லை. பின்லேடனை பிடிக்க முடியாமல் போனதால் வந்த விரக்தி) விடயம் தெரியாமல் 'இந்தியா ருடே' Today அவரிடம் கட்டுரை கேட்டு வெளியிட்டு தனது தேசியத்தை தானே அம்பலப்படுத்தியிருக்கிறது.

மும்பைத் தாக்குதல் ஏன் நடந்தது என்பதற்கு அவர் கூறும் காரணங்களைப் பாருங்கள்: ''மும்பையில் தாக்குதல் நடத்தியவர்கள் கண்மூடித்தனமாகத் தாக்கும் வெறியர்கள் அல்லர் என்பதையும் மிகவும் பயிற்சி பெற்ற, தீவிரமாகத் திட்டமிட்டு, கட்டுப்பாட்டுடன், ஒரு குறிக்கோளை மையமாகக் கொண்ட ஒரு இராணுவத்துக்கு நிகரானவர்கள் என்பதையும் இந்தியா ஏற்கவேண்டும். 2000 இற்கு பிறகு இந்தியா தொடர்ந்து தாக்கப்பட்டதற்கு இந்திய அரசின் நடவடிக்கைகளே தூண்டுதல் என்பதை இந்தியத் தலைவர்கள் தங்கள் வாக்காளர்களிடம் தெரிவிக்க வேண்டும். காஷ்மீர் விவகாரத்தில் இந்திய அரசின் மோசமான நடவடிக்கைகள், பயங்கரவாதத்துக்கு எதிரான அமெரிக்காவின் யுத்தத்துக்கு இந்தியா வழங்கும் ஆதரவு, ஆப்கானிஸ்தானில் அதிகரித்து வரும் இந்தியத் தலையீடு, இஸ்ரேலுடனான இந்திய இராணுவ ஒத்துழைப்பு, முக்கியமாக கடந்த 10 வருடங்களாக இந்திய அரசியலில் இந்துத்துவ தேசியவாதத் தொனி தலை தூக்கி இருப்பது, இந்திய முஸ்லிம்கள் பெரும்பாலா னோர் பொருளாதார ரீதியாகப் பின்தங்கியி ருப்பது'' - என்று அவர் காரணங் களை அடுக்கியி ருக்கிறார். ''தீவிரவாதம் தோற் கடிக்கப்பட வேண்டும் எனின் இந்திய அரசியல்வாதிகளும், வாக்காளர்களும் இந்திய அரசின் கொள்கைகளை, நடவடிக்கைகளை மறு ஆய்வு செய்ய வேண்டும்'' என்றும் எழுதியிருக்கிறார்.

எனக்கு தெரிந்த வரையில் Michael F.Scheuer வாழ்க்கையில் முதல் முறையாக கூறிய அர்த்தம் பொதிந்த வாசகங் கள் அவை. மும்பைத் தாக்குத லுக்கு இவை தான் காரணம். இவற்றை இந்தியா மறு பரிசீலனை செய்யாத வரையில் 'மும்பை'கள் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

இன்னொரு வேடிக்கை 'இந்திய ருடே' இன் இந்த இதழில் நடந்திருக்கிறது. இந்தியாவின் கறைபடிந்த அரசியல்வாதிகளுக்கு மத்தியில் விதிவிலக்காக வாழ்ந்தவர் முன்னாள் பிரதமர் வி.பி.சிங். அவரது மரணத்தை இந்திய அதிகார ஊடகங்கள் திட்டமிட்டு மறைத்தன. ஏனெனில், பிரதமராக இருந்த மிகச் சிறிய காலப்பகுதியில் இந்தியாவை பல் இன, பல மொழிபேசும் மக்கள் வாழும் ஒரு தேசமாக அடையாளப்படுத்தி பிற்படுத் தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கான அரசியல் சாசனத்தை முன்மொழிந்தவர். கிட்டத்தட்ட இந்திய தேசியத்தை நிராகரித் தார். எனவே அவர் மீது சேறடிக்கும் முகமாக India Today ஒரு சிறிய அஞ்சலிக்குறிப்பை வெளியிட்டிருந்தது.

''இந்திய தேசியத்தை வாழவைப்போம். பயங்கரவாதத்தை தோற்கடிப்போம்'' என்று பக்கம் பக்கமாக எழுதியிருந்ததை மக்கள் ஏற்கவேயில்லை. மாறாக அரைப்பக்கத்துக்கு வி.பி.சிங் மீது காழ்ப்பை கொட்டியதற்காக 'இந்திய ருடே' இதழ் நாடெங்கும் மாநில வாரியாக தீயிட்டு கொழுத்தப்பட்டுள்ளது. இதிலிருந்து ஒன்று புரிகிறது. இந்திய உபகண்டத்தில் வாழ்வது இந்தியத் தேசியம் அல்ல. இனங்களின் தேசியம் மட்டுமே.

***சிங்களத்துடன் கைகோர்ப்பு***

தமிழகத்துக்கும் ஈழத்துக்குமான சிக்கலான உறவுகளை இந்திய ஆளும் வர்க்கம் குறுக்கிப்பார்க்கிறது. அண்மையில் தமிழகத்தில் நடந்துவரும் ஈழஆதரவு போராட்டங்களை கவனத்தில் கொள்ளாது தமது குறுகலான தேசியநலன் சார்ந்து சிங்களத்துடன் கைகோத்திருக்கிறது இந்திய அதிகாரம். இது ஒரு மோசமான வெளியுறவுக் கொள்கை. தமது தேசத்திலுள்ள ஏழரைக் கோடி மக்களின் விருப்பத்தை கவனத்தில் கொள்ளாது ஒரு குறுகிய சிந்தனை வட்டத்துக்குள் நின்று இந்திய அதிகாரம் வரையும் வெளியுறவுத் தீர்மானங்கள் அந்தத் தேசத்திலிருந்து அந்த மக்களை வேறு பிரித்து பார்க்கும் சாத்தியத்தை உருவாக்குகிறது. அரசியல் கட்சிகளை கொண்டு அந்த மக்களின் போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்ய முயல்கிறது மத்திய அரசு.

தமிழ் நாட்டில் இரண்டு நாட்களுக்குக் கூட மும்பைத்தாக்குதல் நின்று பிடிக்க வில்லை. மக்களிடம் பெரிதாக எந்த ஆரவாரமும் இல்லை. இது குறித்து பிரபல பத்திரிகையாளர் ஒருவரிடம் கேட்ட போது அவர் கூறினார். ''தமது ஈழ ஆதரவு நிலைப் பாட்டை மத்திய அரசு கவனத்தில் கொள்ளாத கோபம் பெரும்பாலான மக்களிடம் இருக்கிறது. அதை அவர்கள் வெளியாகக் கூறாவிட்டாலும் இந்தியத் தேசியம் என்ற நிலைப்பாட்டி லிருந்து தம்மை அறியாமலேயே அவர்கள் மாறிக் கொண்டிருக்கிறார்கள். இதை ஒரு புள்ளி விவரமாக எடுத்தால் அதன் துல்லி யத்தை அறியமுடியும். ஆகையால் அவர் களால் மும்பையைவிட கிளிநொச்சியில் கூடுதல் கவனத்தைக் குவிக்க முடிகிறது. மத்திய அரசு வெற்றிகரமாக அவர்களின் எழுச்சியை அடக்கி விட்டதாக நினைத்துக் கொள்ளலாம். ஆனால் சத்தமில்லாமல் அவர்கள் இந்தியத் தேசியத்திலிருந்து நழுவிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அது மறந்து கொண்டிருக்கிறது. அத்தோடு ஈழப்பிரச்சினையில் மத்திய அரசு ஒன்றும் செய்யவில்லை என்ற கோபத்தை இனிவரும் காலங்களில் நாம் வேறு வழிகளில் அடையாளம் காணலாம். அதாவது காவிரி நதி நீர்ப் பிரச்சினை, ஒகே னக்கால் பிரச்சினை என்று ஏதாவது இனி வரும் போது அது பெரும் வன்முறை யில்தான் போய் முடியும். அப்போது கன்னட தேசியமும், தமிழ்த்தேசியமும் மட்டுமே வாழும் - அந்த இடத்தில் இந்தியத் தேசியம் சாகும்.'' என்றார்.


இது உளவியல். ஒரு பிரச்சினையில் கிடைக்காத நியாயத்தையும் கோபத்தை யும் வேறு ஒரு நிகழ்வினூடாக அடைய முயல்வது, காட்டிக் கொள்வது. மும்பைத் தாக்குதலினூடாக இந்தியா படிக்க வேண்டிய பாடம் நிறைய உண்டு. 'பயங்கரவாத' பூச்சாண்டி வகுப்பெடுக்கிறதை நிறுத்தி பல்லின, பல மொழி பேசும் மக்கள் வாழும் ஒரு தேசத் தில் அத்தேசிய இனங்களை முன் மொழிந்து அரசியல் சாசனத்தை மாற்றி உரிமைகளை பகிர்வதனூடாகவே அது இந்தியத் தேசமாக இருக்க முடியும். Michael F.Scheuer எழுதியுள்ளது போல, இந்திய அரசியல்வாதிகளும், வாக்காளர்களும் இந்திய அரசின் கொள்கைகளை, நடவடிக்கைகளை மறு ஆய்வு செய்ய வேண்டும். இல்லையெனில் இந்தியா துண்டு துண்டாக உடைந்து தனித்தேசங்களாக மாறும் என்று யாரும் நினைக்க வேண்டாம். அது உள்ளுக் குள்ளேயே தன்னளவில் சுக்குநூறாக உடைந்து கொண்டேயிருக்கும். அதற்குள் ஆயிரம் 'மும்பை'களை அது சந்தித்திருக்கும். அது பெயரளவில் ஒரு தேசமாகவும் செயலளவில் ஒரு நோயாகவும் இருக்கும். ✱

## தமிழ்த்தேசியமும் இந்தியத்தேசியமும்: 2 மும்பைத் தாக்குதலினூடாக ஒரு பயணம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன இறுக்கமும் மலட்டுத் தன்மையும்




**கேள்வி:** பெண் வயது 25. திருமணமாகி 5 வருடங்கள். குழந்தைப் பாக்கியம் இல்லை. நானும் எனது கணவரும் தொழில்புரிகின்றோம். அத்துடன், எமது தொழில் விருத்திக்காக - பல்கலைக்கழகத்தில் வெளிவாரி பட்டப்படிப்பும் படிக்கின்றோம். குழந்தை இல்லாததற்கு மருத்துவப் பரிசோதனை செய்தோம். எம்மிருவருக்கும் எதுவித பிரச்சினையும் இல்லை என்றே பரிசோதனைகள் தெரிவித்தன. எனது பெற்றோர்களும் நண்பர்களும் குழந்தை வரம்வேண்டி, தென்இந்தியக் கோயில்களுக்கு போய்வரும்படி கூறுகின்றனர். தொழில், படிப்பு காரணமாக விடுமுறை


**நீண்ட நேரம் வாசிப்போர், தொலைக்காட்சி பார்ப்போர், கணினியில் பணிபுரிவோர், கண்களை இமைக்காமல் செயற்படும்போது கண்வரட்சி நோய் ஏற்படும் சாத்தியம் உள்ளது. மின் விசிறியின் கீழ் நித்திரை கொள்பவர்களும் இந்த பிரச்சினையை எதிர்நோக்குகின்றனர்.**


எடுத்து இப்படி சுற்றுலா போய்வருவது முடியாத காரியம். ஆனால், இப்படித் தெய்வத் திருத்தலங்களை தரிசித்துவந்து குழந்தை கிடைத்தவர்கள் பற்றி எனக்குத் தெரியும். ஆனால், இப்படி இந்தியா சென்றுதான் தெய்வ அனுக்கிரகம் கிடைக்க வேண்டுமா, ஏன் இலங்கைக் கோவில்களை தரிசனம் செய்து குழந்தைப் பாக்கியம் கிட்டாதா என்று பகுத்தறிவு வினா எழுப்புகின்றது. தெய்வத் திருத்தல தரிசனங்களுக்கும் குழந்தைப்பேறுக்கும் மருத்துவத் தொடர்பு உண்டா? உங்கள் ஆலோசனை வேண்டுகின்றேன்.


**பதில்:** Fertility என்கின்ற கருவுறும் பண்பு தற்காலத்தில் குறைந்துகொண்டு வருகின்றது என்று மருத்துவ ஆய்வுகள் பகருகின்றன. இதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. சரியான உணவுமுறை இல்லாதது, Fast Food எனப்படும் இலகு உணவுப் பண்டங்களை இளம் சந்ததியினர் அதிகமாக விரும்பி உண்பது, செயற்கை இரசாயனங்கள், செயற்கை ஹோர்மோன்கள் ஊட்டி வளர்க்கப்பட்ட மூலப்பொருட்கள் மற்றும் இறைச்சி வகைகளை இந்த இலகு உணவுப்பண்டங்களில் அதிகமாக சேர்க்கப்படுவது, நச்சுச்சூழல், ஓசோன் பாதிப்பு, குடும்பக் கட்டுப்பாடு என்று கூறி திருமணத்தின் பின் குழந்தை பெறுவதை தள்ளிப்போட நீண்டகாலத்துக்கு கருத்தடை மாத்திரைகள், சாதனங்களை உபயோகிப்பது, சிறுசிறு விசேடங்களுக்காக திருமணத்துக்கு முன்னரே மாதவிலக்கை தள்ளிப்போட ஹோர்மோன் தயாரிப்புகளை உபயோகிப்பது - இவை போன்ற செயற்பாடுகள் உடலில் ஏற்படுத்தும் மாற்றங்கள் முக்கிய காரணங்களில் ஒன்று.

அடுத்ததாக பொருளாதார, சமூக சூழ்நிலைகளால் திருமணவயது தள்ளிப்போடப்படுவதும் இன்னொரு காரணம். 20 - 25 வயது காலகட்டத்தை விட 25 - 30 வயது காலகட்டத்தில் Fertility எனப்படும் கருத்தரித்தல் பண்பு மிகவும் குறைவு. 30 வயதின் பின்னர் இந்தப் பண்பு மிகமிகக் குறைவு.




பெண்ணுக்கு கருத்தரித்தலுக்குத் தடையாக உள்ள நோய்களோ, ஆணுக்கு விந்தணு வளர்ச்சிக்கு தடையாக உள்ள நோய்களோ மலட்டுத்தன்மைக்கு சிலவேளைகளில் காரணங்களாக இருந்தாலும் அவைகளின் பங்கு 25 வீதத்துக்கு குறைவாகவே காணப்படுகின்றது. குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களில் அநேகருக்கு செய்யப்பட்ட பரிசோதனைகள் உங்கள் விஷயத்தைப் போல் எதுவித பிரச்சினைகளையும் காட்டுவதில்லை. ஆனால், இன்றைய சூழ்நிலையில் Stress என்கின்ற மன இறுக்கம் மலட்டுத்தன்மைக்கு இன்னொரு முக்கிய காரணமாக விளங்குவது அறியப்பட்டுள்ளது. அது உண்மையும் கூட.

அந்தக் காலத்து குடும்பவாழ்க்கை அமைதியானது. பரபரப்பு இல்லாதது. உத்தியோகம் புருஷலட்சணமாகவும், வீட்டுப் பராமரிப்பு மனைவியின் பொறுப்பாகவும் இருந்த [illegible] இதனால் ஒரு தம்பதியினருக்கு குறைந்தது சராசரி ஐந்து குழந்தைகளாவது குடும்பத்தில் இருந்தன. ஆனால், இன்று பரபரப்பும் படபடப்பும் மிகுந்த வாழ்க்கை. பொருளாதாரத்துக்காக புருஷனும் மனைவியும் உழைக்கவேண்டிய தேவை. உத்தியோகத்தில் பாதுகாப்புக்காக மேற்படிப்புகளை மேற்கொள்ளவேண்டிய சூழ்நிலை. ஹாஸ்யமாக சொல்வதென்றால் 'பிள்ளையைத் தூக்கும் வயதிலே புத்தகம் தூக்கும் நங்கைகள்'. இதனால், தொழில் முடிந்து வந்ததும் படிப்பு படிப்பு என்று ஓர் இயந்திர வாழ்க்கை. கருத்தரித்தலுக்கு உடலியக்கம் மட்டுமல்ல மனதின் ஒத்துழைப்பும் அவசியம் என்பதை தம்பதிகள் மறந்துவிடுகின்றார்கள். மனம் இறுக்கமின்றி இலகுவாக இருக்கும்போதுதான் கருப்பை வாசல் இளகி விந்தணுக்கள் உள்ளே செல்கின்றன. உள்ளே சென்ற விந்தணுக்கள் பலோபியன் குழாய் வழியே முட்டையைச் சந்திக்க குழாய் தளர்வாக இருக்கின்றது. சூலகங்களும் கிரமமாக முட்டைகளை வெளிவிடுகின்றன. இந்த ஒருங்கிணைந்த செயல்முறைக்கு மன இறுக்கம் தடையாக இருக்கின்றது. தம்பதியர் இருவருக்கும் தங்களுக்கென்றொரு குழந்தை வேண்டும் என்ற ஏகோபித்த அவா இருக்கவேண்டியது அவசியம். தொழில் பிரச்சினைகள், கல்விப்பிரச்சினைகள், குடும்பப் பிரச்சினைகள் மன இறுக்கத்தை அதிகரிக்கின்றன. அதனால்தான் எதுவித உடல், உடலியல் குறைபாடுகளும் இல்லாவிட்டாலும் பலர் கருத்தரிக்க முடியாமல் இருக்கின்றனர். இந்தவேளையில் தொழில், கல்வி, குடும்பச் சூழல் என்பவற்றை ஒருபுறம் தூக்கி வைத்துவிட்டு தம்பதிகள் வெளியூர்களுக்கு சென்று 'தாமும் தன்பாடும்' என்ற நிலையில் மகிழ்வாக இருக்கும்போது கருத்தரிக்கும் சந்தர்ப்பம் அதிகரிக்கின்றது. அந்தக் காலத்தில் இந்த அடிப்படையை வைத்துத்தான் கோவில்கள் அதிகம் உள்ள இந்தியாவுக்கு 'குழந்தைவேண்டும்' என்ற ஒரே நிலையான மனப்பாங்குடன் தலயாத்திரை செய்துவர முன்னோர் அறிவுரை சொன்னார்கள். மேலும் கோவிலை வலம்வருதல், விழுந்துகும்பிடல், அடியொற்றி அழித்தல் என்பவை இடுப்புப் பகுதியில் உள்ள ஜனனேந்திரிய உறுப்புகளை மசாஜ் செய்து நல்லபடி இயங்கவைத்து கருத்தரித்தலுக்கு


இலவச மருத்துவ ஆலோசனைகளை
'உதயன்' மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'உதயன்'
36 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


உதவுகின்றன. உங்கள் விஷயத்திலும் [illegible] மைக்கு இம்மாதிரி யான மன இறுக்கம் காரணமாக இருக்கலாம். கொஞ்சக்காலம் இந்தப் பிரச்சினைகளை ஒதுக்கிவைத்து. இருவரும் தலயாத்திரை செய்து வருவது நல்லது என்று நானும் எண்ணுகின்றேன். மன அமைதிக்காக இப்படிச் செல்லும்போது தொழிலகத்தோடு தொடர்பு, படிப்புக்குரிய நூல்கள் என்பவற்றையும் கூட தூக்கிச்சென்று தலயாத்திரையின் உண்மையான நோக்கத்தை தயவுசெய்து தவறவிட்டுவிடாதீர்கள்.

***

**கேள்வி:** வயது 26. பெண். அலுவலகத்தில் கணினி இயக்குநராகப் பணிபுரிகின்றேன். காலையில் எதுவித பிரச்சினையுமில்லை. ஆனால், மாலையாக ஆக கண் அரிப்பு ஏற்படுகிறது. கண்ணெரிவும் உண்டு. கண்கள் இரண்டும் சிவந்துவிடும். கண்ணுக்குள் தூசியோ, மண்ணோ விழுந்திருப்பது போன்ற ஓர் உணர்வு. கண்வைத்தியரிடம் காட்டியபோது கண் காய்ந்து போய்விட்டது என்றுகூறி தினமும் கண்ணுக்கு போடுவதற்கு சொட்டு மருந்து தந்தார். அதனை உபயோகிக்கும்போது பிரச்சினை இல்லை. எனக்கு இந்தநோய் எதனால் ஏற்பட்டது. முற்றாகக் குணமாக்கமுடியுமா?

**பதில்:** கண் அரிப்பு, கண் எரிவு, கண் அழற்சி, தூசிதுகள் கண் மடலுக்குள் இருந்து அரிப்பது போன்ற உணர்வு, கண் சிவந்திருத்தல், மங்கலான பார்வை, நீண்டநேரம் வாசிக்கும்போது தொலைக்காட்சி பார்க்கும்போது அல்லது உங்களைப் போல் கணினியில் வேலை செய்யும்போது அதிகளவில் கண்ணீர் வடிதல், பார்வை மங்கல் போன்ற குணங்கள் Dry Eyes Syndrome என்கின்ற 'வரண்ட கண்' கோளாறு காரணமாக ஏற்படுகின்றன.

கண் இமைகளில் பலசுரப்பிகள் இருக்கின்றன. இந்தச் சுரப்பிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான சுரப்புகளைச் சுரக்கின்றன. சளித்தன்மையான (Mucus) சுரப்பு, நீர்த்தன்மையான (Aqueous) சுரப்பு, எண்ணெய் தன்மையான சுரப்பு (Lipid) என்ற மூன்றுவகை சுரப்புகள் எமது கண்களுக்கு ஈரத்தன்மையை தந்து கண்களைப் பராமரிக்கின்றன. இந்தச் சுரப்புகள் சரியாகச் சுரக்காத வேளையில், தேவையான அளவு சுரக்கப்படாமல் இருக்கும்போது 'வரண்ட கண்' கோளாறு ஏற்படுகின்றது. வெளிச்சூழலில் வீசும்காற்று கண்ணைக் காயவைத்து விடுகிறது. வரண்ட சுவாத்திய நிலை Air Condition சூழ்நிலை, சிகரெட் மற்றும் வாகனப்புகை சூழல் என்பவைகளால் கண்ணில் வரட்சித் தன்மை அதிகரிக்கின்றது. Contact Lens உபயோகிப்பவர்களுக்கு அந்த Lens கண்ணீர் படலத்தை உறிஞ்சி எடுக்கும் தன்மையுள்ளதால், கண்சுரப்புகள் குறைவாக சுரக்கப்படும் வேளையில் இந்த 'வரண்ட கண்' கோளாறுகள் ஏற்பட ஏதுவாகலாம். அதேவேளையில் சாதாரணமாக வயதானவர்களுக்கு அவர்களது முதுமைகாரணமாக் வரண்ட கண் ஏற்படும் சாத்தியம் அதிகம். நீரிழிவுநோய், கர்ப்பத்தடை மாத்திரை உபயோகம், கண்தொற்று என்பவை கூட கண்சுரப்புகளை பாதிக்கும். ஒருசிலருக்கு தூங்கும்போதுகூட கண் இமைகள் திறந்திருக்கும். இவர்கள் மின்விசிறிக்கு நேரே கீழ் தூங்கும்போது கண்கள் காய்வதற்கு இடமுண்டு. பொதுவாகவே மின்விசிறிக்கு நேர்கீழே தூங்குவது தவிர்க்கப்படுவது நல்லது.

மேலும் அதிகமானோர் வாசிக்கும் போதோ, தொலைக்காட்சி பார்க்கும் போதோ, கணினியில் பணிபுரியும் போதோ இமைகளை அசைக்காமல் (Blinking) செயல்படுவர். இதுகூட கண்வரட்சிக்கு காரணமாகும்.

இந்தக் கோளாறுக்கு முதலில் சரியான காரணம் கண்டறியப்படவேண்டும். அதன்பின் அந்தக் காரணத்துக்குரிய சிகிச்சை முறையுடன் செயற்கை கண்ணீர் சொட்டுகள் (Artificial Tears) உபயோகிக்கப்படவேண்டும். வேறுகாரணங்கள் காணப்படாவிடின் மேற்குறிப்பிட்ட சொட்டுமருந்து சிகிச்சையுடன் கண் இமைகளுக்கு ஒத்தடம், மசாஜ் என்பவை உதவும். நீண்டநேரம் கண்களை இமைக்காமல் இருப்பது தவிர்க்கப்படவேண்டும். கணினிவேலை, தொலைக்காட்சி பார்த்தல், வாசித்தல் என்பவற்றின்போது பத்து நிமிடங்களுக்கு ஒருமுறையாவது 10 செக்கன்களுக்கு கண்களை இறுக மூடிக்கொண்டிருப்பது நல்லது. அடிக்கடி கண்இமைகளை மூடித்திறத்தல் (Blinking) சிறந்த கண்பயிற்சியாகும். உடலின் ஈரத்தன்மை குறையாது தினமும் 10 கிளாஸ் திரவப்பதார்த்தங்கள் அருந்துவது அவசியம்.

உங்களைப் பொறுத்தவரையில் அடிப்படைக் காரணங்கள் உங்கள் பிரச்சினையில் இல்லாதபடியால் நான் மேற்கூறிய கருத்துகளை கவனத்தில் எடுத்துப் பின்பற்றலாம்.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

# பொங்கல் விழாவினை முன்னிட்டு சிறப்பு விலைக் கழிவு விற்பனை

**புதுவருட, தைப் பொங்கல் தினத்தைக் குடாநாட்டு மக்கள் இனிமையாகக் கொண்டாட வேண்டுமென்பதற்காக விசேட விலைக் கழிவுடன் விற்பனைக்கு விடப்பட்டுள்ள பொங்கல் பொதிகளை வாங்கிப் பயன்பெறுங்கள்.**

1 கிலோ No. 1 தீட்டல் அரிசி, சக்கரை 500g, பயறு 100g, கற்கண்டு 100 g , கஜு 25g, பிளம்ஸ் 50 g, நெய், தேன் என்பன தேவையான அளவு, எசென்ஸ் ஒரு போத்தல் ஆகியனவும்,

மேலதிகமாக,

விபூதி, சந்தனம், குங்குமம், ஊதுபத்தி, சூடம் என்பனவும் ஒவ்வொரு பொதியுடன் இணைப்புச் செய்யப்பட்டுள்ளன.

**வெளிச் சந்தை விலைப்படி ரூபா 510 என மதிப்பீடு செய்யப்பட்ட பொதியொன்று ரூபா 450 இற்கு மட்டும் எம்மால் விற்பனைக்குத் தரப்படுகின்றது.**

**எமது சங்கத்தின் கூட்டுறவு நகர் கிளைகளிலும், சகல நுகர்ச்சிக் கிளை நிலையங்களிலும் நாளைமறுதினம் 2009.01.07 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்.**

**அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு, தைத்திருநாள் வாழ்த்துக்கள்.**

- தலைவர், பணிப்பாளர்கள்,
பொது முகாமையாளர், பணியாளர்கள்.

(வி/356461)

## 5 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

05.01.2009




இல.43, அம்மன் வீதியைச் சேர்ந்த **கமலநாதன் -அகல்யா** தம்பதியரின் செல்வப் புதல்வன் **ரேவஜன்** தனது ஐந்தாவது பிறந்த நாளை இன்று (05.01.2009) திங்கட்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். ரேவஜனை அன்பு அப்பா, அம்மா, அக்காமார், அண்ணாமார், அம்மையா, அம்மம்மாமார், அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, மாமாமார், மாமிமார், மச்சாள், மச்சான்மார் அனைவரும் வீரமாகாளி அம்மன் அருள் பெற்றுப் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: **மாமா.**
இல.43, அம்மன் வீதி,
யாழ்ப்பாணம். (81475)

## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஜன.5

சாவகச்சேரி நகர சபை ஊழியர் நலன் புரி உறுப்பினர்களின் ஒன்றுகூடல் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு நகர சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.(202-207)

## கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களின் கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு யாழ். ஆரியகுளம்சந்தியிலுள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (202)

## புதிய வகுப்பிற்கான புதிய அனுமதிகள்

இவ் ஆண்டில் அனுமதி பெறும் இறுதிச் சந்தர்ப்பம்

English Medium Grade 10 Class Commences January 05th

இன்றுமுதல் ஜனவரி 10 வரை

The Express Institute
Irupalai, Kopay. - அதிபர்

## பிறந்தநாள் வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்



**திரு.தம்பியப்பா தவராசா**
(ஆசிரியர், யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க.பாடசாலை)

எமது பாடசாலையில் ஆசிரியராகச் சேவையாற்றிய **திரு.தம்பியப்பா தவராசா** அவர்கள் 05.01.2009 இல் சேவையில் இருந்து இளைப்பாறுகின்றார். இவரது சேவையைப் பாராட்டுவதோடு, எமது பிறந்தநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்து, ஓய்வு காலத்தில் குடும்ப சகிதம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் கழகம்,**
**யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க.பா.சாலை.** (81470)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1051 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

தனுசு 10 21 35 54

02-01-2009

செல்லுபடியாகும் தொடர் இல. 500343830 - 500364768

ஜக்பொட் பரிசு ரூபா. 13,493,755/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 225,783 | 20/- | 4,515,660/- |
| 2 இலக்கங்கள் | 20,726 | 40/- | 829,040/- |
| 1 இல. + லக்கினம் | 20,590 | 60/- | 1,235,400/- |
| 2 இல. + லக்கினம் | 1,863 | 200/- | 372,600/- |
| 3 இலக்கங்கள் | 559 | 1000/- | 559,000/- |
| 3 இல. + லக்கினம் | 54 | 10,000/- | 540,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 13,493,755/- | 13,493,755/- |
| மொத்தம் | | | 21,945,455/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 269,583 | | 22,445,455/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

தொடர் இலக்கம் 400350782 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2009 ஜனவரி 06 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| மாத்தளை | 500360526-9-19 |
| கம்பஹா | 500364260-3-14 |
| அம்பாறை | 500349414-8-26 |
| கண்டி | 500356091-9-44 |
| திருகோணமலை | 500349845-0-39 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

## இடமாற்றம்

வடமராட்சி,ஜன.5

பருத்தித்துறை வடமராட்சி வடக்குப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றி வந்த 5 முகாமைத்துவ உதவியாளர்கள் இம்மாதம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் இருவர் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்திற்கும் மற்றும் இருவர் வடமராட்சி கிழக்குப் பிரதேச உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்துக்கும் மற்றைய ஒருவர் வலி.கிழக்குப் பிரதேச செயலகத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

(202-236)

## வீதி சேதம்

கோப்பாய், ஜன.5

கோப்பாய்-அச்சுவேலி-இராசவீதி பல இடங்களில் மிகமோசமாகச் சேதமடைந்துள்ளது. புத்தூர் நவக்கிரி பகுதிகளிலேயே அதிகளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதி மழைக்கு முன்னதாகவே செப்பனிடப்பட்டிருந்த போதிலும் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை இவ்வீதியில் ஆங்காங்கே குவிக்கப்பட்டிருக்கும் மக்கி மணலினால் வீதிப் போக்குவரத்தில் சிரமமேற்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(202-72)

## பசுமாடு திருட்டு


வடமராட்சி, ஜன.5

புலோலிப் பகுதியில் மேய்ச்சலுக்கு விடப்பட்ட சுமார் 45 ஆயிரம் ரூபா பெறுமதி மிக்க கன்று ஈனும் நிலையில் உள்ள பசுமாடு ஒன்று அண்மையில் திருடப்பட்டுள்ளது.

தென் புலோலியைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமான பசுமாடே இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

(202-236)

## அகவை 60 நிறைவில் சேவைநலன் பாராட்டு



**திரு.தர்மராசா தவராசா (S.L.T.S-I)**
(பிரதி அதிபர், யா/கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை)

### சேவை விபரம்

| | |
|---|---|
| யா/அல்வாய் வடக்கு இ.த.க.பாடசாலை (ஆசிரியர்) | 02.10.1970 - 13.02.1971 |
| யா/பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை (ஆசிரியர்) | 14.02.1971 - 31.12.1972 |
| க/பன்விலை தமிழ் மகாவித்தியாலயம் (ஆசிரியர்) | 01.01.1973 - 31.12.1981 |
| யா/ நேவரையாளி இந்துக் கல்லூரி (ஆசிரியர்) | 01.01.1982 - 18.07.1993 |
| யா/கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை (பிரதி அதிபர்) | 19.07.1993- 04.01.2009 |

இன்று 05.01.2009இல் அகவை அறுபதைப் பூர்த்தி செய்யும் கணித ஆசான் 39 வருடங்கள் சேவை செய்து எமது பாடசாலையில் இருந்து ஓய்வுபெறுகின்றார். எங்கள் பிரதி அதிபர் இனிவரும் காலங்களிலும் உடல், உள ஆரோக்கியத்துடன் வாழ இறைவனிடம் இறைஞ்சிநிற்கின்றோம்.

**யா/கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலைச் சமூகம்,**
**வல்வெட்டித்துறை.** (81261)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவாசகர் விழா 4 தினங்களுக்கு ஈழத்துச் சிதம்பர மண்டபத்தில்

யாழ்ப்பாணம், ஜன.5

காரைநகர் மணிவாசகர் சபை நடத்துமம மணிவாசகர் விழா நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் நான்கு நாள்கள் ஈழத்துச் சிதம்பர வசந்த மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

முதலாம் நாள் நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்திய சைவசமய பாடப் பரீட்சையில் வகுப்பு ரீதியாக முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப் படவுள்ளன. அத்துடன் பரீட்சையில் அதி உயர் புள்ளிகளைப் பெற்ற ஐந்து மாணவர்களுக்குத் தங்கப்பதக்கங்களும் வழங்கப்படவுள்ளன.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வலிகாம வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் கனடாவில் இருந்து வெளிவரும் ''எனது ஊர் காரைநகர்'' எனும் காலண்டுச் சஞ்சிகையின் ஆதரவுடன் மேற்படி சபையால் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டி, மனனப் போட்டி, பண்ணிசைப் போட்டி என்பவற்றில் முதல் மூன்று நிலைகளைப் பெற்ற பாடசாலை மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறும்.

மூன்றாம் நாள் நிகழ்வுகள் எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் இ.த.ஜெயசீலன் தலைமையிலும், நான்காம் நாள் நிகழ்வுகள் வெள்ளிக்கிழமை இரவு 9 மணிக்கு மணிவாசகர் சபைத் தலைவர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை தலைமையிலும் நடைபெறவுள்ளன.

இந்த விழாக்களில் திருவாசகப் பேருரைகள், பாடசாலை மாணவர்களின் பண்ணிசை, பேச்சு மற்றும் இசையரங்கம், நாட்டிய ரங்கம், கவியரங்கம், நடன நிகழ்வுகள் உள்ளிட்ட மணிவாசகப் பெருமானுடைய திருவாசகத்தைச் சாரமாகக் கொண்ட பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (202-250)

# வட மாகாண கல்வி அதிகாரிகளின் உயர் மட்டக் குழு யாழ்.வருகை

அச்சுவேலி, ஜன.5

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு மற்றும் வடமாகாணக் கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள் உள்ளடங்கிய உயர் மட்டக் குழு ஒன்று திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் வரவுள்ளது.

இம்மாத முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் ''வடக்கு மாகாண கல்வி அபிவிருத்தி மாநாட்டில்'' கலந்துகொள்வதற்காக இந்த உயர் மட்டக் குழு வரவுள்ளது.

திருகோணமலையில் இருந்து வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தலைமையில் யாழ்ப்பாணம் வரும் உயர் அதிகாரிகள் வடக்கு மாகாண கல்வி அபிவிருத்தி மாநாட்டில் கலந்து கொள்வதோடு, யாழ்.மாவட்டத்தில் உள்ள கல்வி வலயங்களின் செயற்பாடுகள், நிர்வாக நடைமுறைகள் தொடர்பான ஆய்வுகள் மேற்பார்வை, மதிப்பீட்டுப் பணிகளையும் மேற்கொள்ளவுள்ளனர்.

அத்துடன் தேசிய ஆசிரியர்கள் இடமாற்றக் கொள்கை அமுலாக்கல் மற்றும் கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த அதிகாரிகளின் இடமாற்றம் தொடர்பாகவும் மிக முக்கியமான தீர்மானங்கள், முடிவுகள் என்பன மேற்கொள்ளப்படவுள்ளன. (202-11)

## சாவற்கட்டு கடற்றொழில் சங்கத்துக்கு உதவி

நீரியல் வளத்துறைத் திணைக்களம் சாவற்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்துக்குக் கடற்றொழில் உபகரணங்களை வழங்கவுள்ளது.

சங்கத்தினர் மேற்கொண்ட முயற்சி யின் பலனாக சங்கத்தின் அங்கத்தவர்களில் 274 பேருக்கு இந்த உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன என சங்கத்தின் தலைவர் நா.பொன்னம்பலம் தெரிவித்தார். (202-20)

# குறிகாட்டுவான் - நெடுந்தீவுக்கான அரச படகுச் சேவை சீரில்லை

நல்லூர், ஜன.5

குறிகாட்டுவான் - நெடுந்தீவுக்கான அரச படகுச் சேவை தொடர்ந்தும் சீரற்றே காணப்படுகின்றது. இதனால் போக்குவரத்துச் செய்வதில் பயணிகள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

கடந்த சில நாள்களாகப் பழுதடைந்துள்ள குமுதினிப் படகு நேற்று முன்தினம்வரை சேவைக்கு வரவில்லை எனப் பயணிகள் முறையிடுகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பிரயாணத்துக்காக நெடுந்தீவு துறைமுகத்திற்கு வந்திருந்த பய ணிகள் எந்த ஒரு படகும் சேவையில் ஈடுபடுவதற்கான சாத்தியங்களின்றித் துறைமுகத் தில் பலமணி நேரம் காத்திருந்தனர். இறுதியில் நெடுந்தீவு கடற்றொழிலாளர் சங்கத்தின் 'கூலர்' மீன்பிடிப்படகு பயணிகளை குறிகாட்டுவானுக்கு ஏற்றிவந்ததாகப் பயணிகள் தெரிவித்தனர். (202-111)

## ஜி.சீ.ஈ (சா/த) கணிதம் -II முன்னோடிப் பயிற்சிப் பரீட்சை

எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ சாதாரணதர கணிதம்- II மீள் பரீட்சைக்கான முன்னோடிப் பயிற்சிப் பரீட்சை யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சையை எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதால் உரியமாணவர்களை இப்பரீட்சைக்குத் தோற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (204)

# இலங்கையிலேயே அதிபழைமையான பதிவுகளை பருத்தித்துறைச் செயலகமே பேணி வருகின்றது

## வடவலய உதவிப் பதிவாளர் நாயகம் தகவல்

கரவெட்டி, ஜன.5

இலங்கையிலேயே அதி பழைமையான- நீண்டகாலங் கொண்ட- பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவு ஆவணங்களைப் பேணிவரும் திணைக்களமாகப் பருத்தித்துறைப் பிரதேச செயலகம் விளங்குகின்றது.

இத்தகவலை வடவலய உதவிப் பதிவாளர் நாயகம் திருமதி மகாராணி இராசரத்தினம் தெரிவித்தார்.

அண்மையில் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் இறப்பு, பிறப்பு, விவாகப் பதிவு அலுவலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் இரா. வரதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

இலங்கையில் 1940ஆம் ஆண்டுக்கான பதிவுகள்கூட எவ்வித பழுதும் இல்லாது பாதுகாக்கப்பட்டுள்ளன. இப்படியான பதிவேடுகளை பருத்தித்துறை மாவட்டப் பதிவகத்திலேயே நான் காண்கின்றேன். இலங்கையின் பிறப்பு, இறப்பு விவாகம் போன்ற பதிவகங்களில் இப்பதிவகத்தை முதன்மையா னதாக நான் கருதுகின்றேன் - என்றார்.

யுத்தம் காரணமாகக் கஷ்டப் பிரதேசமாகவும் பாதுகாப்பு வலயமாகவும் கருதப்படும் மருதங்கேணி, குடத்தனை, நாகர்கோயில் போன்ற இடங்களைச் சேர்ந்த மக்களுக்கான பதிவுப் பிரதிகளை பருத்தித்துறை காணிப் பதிவகத்திலுள்ள பதிவகத்திலேயே பெற்றுக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டார். (202-70)

# கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பச்சை மிளகாய் எடுத்து வர ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன.5

குடாநாட்டில் பச்சைமிளகாய்க்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டையும் அதீத விலையேற்றத்தையும் கருத்தில் கொண்டு யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கொழும்பில் இருந்து உடனடியாக ஒரு தொகுதி பச்சை மிளகாயை விமானம் மூலம் தருவிக்கவுள்ளது.

சங்கத்தின் தலைவர் ப.கிரிதரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

பெரும்பாலும் குறிப்பிட்ட அளவில் பச்சைமிளகாய் இந்த வாரத்தில் யாழ்.எடுத்து வரப்படும். குறிப்பாக குடாநாட்டில் பச்சை மிளகாய்க்குப் பெரும் தட்டுப்பாடும் விலை அதிகரிப்பும் காணப்படுகின்றன. ஒரு கிலோ ஆயிரம் ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்றது. இந்த விலை அதிகரிப்பால் நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் சங்கத் தலைவர் கூறினார்.

இதனைக் கருத்திற்கொண்டு மக்களின் தேவை கருதியும் சங்கம் அவசரமாக ஒரு தொகுதி பச்சைமிளகாயை இவ்வாரத்தில் விமானம் மூலம் தருவித்து சங்கத்தின் சகல விற்பனை நிலையங்கள் ஊடாகவும் நியாய விலையில் மக்களுக்கு விநியோகிக்கவுள்ளது.

இதேவேளை பச்சைமிளகாயை விமானம் மூலம் தருவித்து மக்களுக்கு விநியோகிப்பதன் மூலம் அவற்றின் விலை திடீரென நகரில் குறைவடையலாம் என்று வர்த்தக வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன.

இதேசமயம் இந்த விமானத்தில் தைப்பொங்கலுக்கு தேவையான ஒரு தொகுதி பொங்கல் பொருள்களும் எடுத்துவரப்படுவதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (202-224)

# வாழைப்பழத்தின் விலை நாளுக்கு நாள் அதிகரிப்பு

நல்லூர், ஜன.5

குடாநாட்டில் இடம்பெற்ற 'நிஷா'புயல், வெள்ள அனர்த்தங்களைத் தொடர்ந்து நகரப் பகுதிகளில் வாழைப்பழத்தின் விலைகள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன.

கதலி வாழைக்குலைகளுக்கு பலத்த தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

சந்தைகளிலும் இதர வர்த்தக நிலையங்களிலும் கதலி வாழைப்பழம் இல்லாத நிலையில் ஒரு சில கடைகளில் அதனைக் காணக்கூடியதாக உள்ளது.

இந்தக் கடைகளில் கதலி வாழைப்பழம் கிலோ 80 முதல் 85 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

இதரைப்பழம் ஓரளவு கிடைக்கிறது. கிலோ ரூபா 35 ஆக விற்பனை செய்யப்படுகின்றது. (202-111-224-236)

## யாழ்.நகரில் உள்ள

# சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் வசதியில்லை; பாவனையாளர் விசனம்

வேலணை, ஜன.5

யாழ்.நகரில் உள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையங்கள் போதிய வசதிகளுடன் இல்லை. இதனால் பாவனையாளர்களின் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் சேதமடையும் நிலைமை உள்ளன எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

யாழ்.நகருக்குப் பல்வேறு தேவைகளின் நிமித்தம் வருவோர் தமது சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றை சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் வைத்துவிட்டே செல்கின்றனர். எனினும் அந்நிலையங்களில் போதிய பாதுகாப்பு வசதிகள் இல்லாததால் மழை, வெயில் என்பவற்றிலேயே வாகனங்களை நிறுத்த வேண்டியுள்ளது. அத்துடன், பறவைகளின் எச்சங்களும் வாகனங்களை அசிங்கப்படுத்துகின்றன.

எனவே சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க யாழ்.மாநகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பாவனையாளர்கள் கோருகின்றனர்.

அத்துடன் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் தற்போது சைக்கிள் ஒன்றுக்கு ஐந்து ரூபாவும் மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு ஏழு ரூபாவும் அறவிடப்படுவதாகப் பாவனையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (202-267)




வலி.கிழக்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார இறுதி நாள் நிகழ்வு கோப்பாய் லயன்ஸ் கழக ஆதரவோடு கடந்த வாரம் நடைபெற்றது.

நிகழ்வில் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் உரையாற்றுவதையும் அருகில் நல்லூர்ப் பிரதேச சபைச் செயலாளர் த.சாந்தசீலன், வலி.கிழக்குப் பிரதேச சபைச் செயலாளர் த.நடராஜா, லயன் மாவட்ட இணைப்பாளர் லயன் டாக்டர் வி.தியாகராஜா, கோப்பாய் [illegible] நாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்தில் காணலாம். [illegible] அடுத்துள்ள படத்திலும் காணலாம். (72)

# ஆஸ்பத்திரி வீதி சேதம்

நல்லூர், ஜன.5

யாழ்.பஸ் நிலையத்திற்கும் சத்திரச் சந்திக்கும் இடைப்பட்ட ஆஸ்பத்திரி வீதி அண்மையில் பெய்த பெருமழையால் சேதமடைந்து காணப்படுகின்றது.

இந்தப் பகுதி குன்றும் குழியுமாக இருப்பதால் வாகனப் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமம் ஏற்படுவதாகவும் சாரதிகள் கூறுகின்றார்கள். (202-111)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்லி

தோற்றம் 20 ★ 11 ★ 1927



மறைவு 07 ★ 12 ★ 2008

### அமரர் அண்ணாமலை தெய்வானைப்பிள்ளை

அன்பிற்கு அணிகலனாய் ஆசையின் இருப்பிடமாய்
பண்பிற்கோர் சிகரமாய் பாசத்தின் புகழ் ஒளியாய்
வாழ்ந்து வழிகாட்டிய வள்ளல் குலக்கொழுந்தே – அம்மா!
உங்களைத் தேடி வருவோரை
நாடி நீ சென்று இன்முகத்துடன் இனிது வரவேற்று
இன்னமுதூட்டி இனிய மொழி பேசுவாய்
தெய்வானை என்னும் தெய்வத்தின் திருவுருவே!
அம்மா! உங்களை எம் சிந்தையில் நிறுத்தி
சீருடன் நாம் வாழ்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும்
இறைவனை வேண்டி நிற்போம்

(30260)

நாளை (06.01.2009) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

வராத்துப்பளை, புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## கண்ணீருடன் கரைந்த மூன்றாமாண்டு நினைவலைகள்

உதயம் 05 ★ 10 ★ 1988



அஸ்தமனம் 05 ★ 01 ★ 2006

### செல்வி கோமதர்சினி பரமேஸ்வரன் (சிந்து)

(யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய 2007 கலைப்பிரிவு மாணவி)

அன்பு மகளே! எம் ஆசை மகளே! சின்னமகளே! எங்கள் சிந்து மகளே!
எண்ணி எண்ணி ஏங்குகின்றோம். ஏனிந்தக் கதி எமக்கு,
எங்கள் உணர்வானவளே! உன்னிடத்தை நிரப்ப மீண்டும் வருவாயம்மா
தேடுகின்றோம் நாம் மூன்று வருடங்களாய்!
உயர் கல்வி பல கற்று பல்கலையில் பயிலுவாய் என்றிருந்தோம்
கையசைத்து சென்றவளே! மீண்டும் நீ வருவாயென!
ஏங்கித் தவிக்கும் உயிரிலும் மேலான உறவுகள்
ஆண்டு பல சென்றாலும் அழியாது உன் நினைவுகள்...
உன் ஆத்மா சாந்திபெறக் கண்ணீர்ப்பூக்களை காணிக்கை ஆக்குகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

நி.மு. :நகுலேஸ்வரா வீதி, கீரிமலை
த.மு.:இந்துக் கல்லூரி வீதி,
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

உன் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

மண்மகிழ 31 ★ 03 ★ 1933



கண்நெகிழ 07 ★ 12 ★ 2008

### திருமதி குணமணி இராசதுரை

07.12.2008 அன்று சிவபதமடைந்த திருமதி குணமணி இராசதுரை அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும் நாளை (06.01.2009) செவ்வாய்க்கிழமை மு.ப.11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு வந்து ஏற்ற உதவிகள் செய்தவர்களுக்கும், அனுதாபச்செய்தி தெரிவித்தவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

தகவல்:
சு.இராசதுரை (கணவர்)
(ஆசிரியர்).

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(81492)

## தமிழ் மக்களின் இன்னல்களையும் ....

( 7ஆம் பக்கத் தொடர்ச்சி)

*உள்ளும் புறத்தும் உற்றிடு பகைவர்*
*பலராய்நின்ற போதிலுமஞ்சாச்*
*சிங்கமாய் அவர்களின் சிறுமைகள் தன்னை*
*உலகமறிய உரைத்தில் குமாரிற்கு*
*இணையாய்ச் சொல்ல எவருமே இல்லை''*

என்று குறிப்பிட்டுள்ளார்.

மாமனிதர் அவர்கள் தன்னைப் பற்றிக் கூறும்போது பின்வருமாறு கூறினார்: ''நீ உனது உயிரைப் பற்றிப் பயப்பட்டால் வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டும். நீ வாயை மூடிக்கொண்டே வாழவேண்டுமானால் அந்த வாழ்க்கையின் அர்த்தம் தான் என்ன?நான் ஒரு அடிமையாக வாழ்ந்து இனத்துவேசிகளும் ஆட்சியில் உள்ளவர்களும் கூறுவனவற்றிற்கு தலையாட்டிக்கொண்டிருக்க விரும்பவில்லை. அவர்கள் விரும்புவதை நான் ஏற்றுக் கொள்ள முடியாமல் அவர்கள் கூறுவது எனது நம்பிக்கைக்கு எதிராக அமைந்தால் நான் ஏன் எனது மனச்சாட்சிக்கு எதிராக மௌனம் சாதிக்க வேண்டும்''

அவர் தான் ஏன் விடுதலைப்புலிகளை ஆதரிக்கிறார் என்பதற்கு சுவர்ணவாகினியில் பின்வருமாறு கூறினார். ''தமிழர் அரசியல் நிலை என்ன என்பதை ஒரு சந்தர்ப்பத்தில் நான் ஆராய்ந்து பார்த்தேன். ஒரு புறம் பயங்கரமான சிங்கள அரசும் மறு புறம் ஒருசதமும் பெறுமதியற்ற தமிழ்க் குழுக்களும் பாராளுமன்றத்தில் இருக்கின்றனர். அவர்கள் சிங்கள அரசுக்கு நிபந்தனையின்றி ஆதரவு வழங்கி வந்தனர். எக்காரணத்தை முன்னிட்டு அவ்வாறு ஆதரிக்கிறார்கள் என்பதை நீங்கள் அவர்களிடம் கேட்டு அறியுங்கள். அரசு அவர்களுக்கு பாதுகாப்பும் தனிப்பட்ட உதவிகளும் செய்கிறது. இத்தகைய சூழலில் தமிழ் மக்களின் அபிலாசையை முன்னெடுத்துச் செல்லும் தமிழ் மக்களை பிரதிநிதித் துவப்படுத்தும் ஓர் அமைப்பு தமிழீழ விடுதலைப்புலிகளே என்று எனக்குத் தோன்றியது. அவர்கள் ஒருபுறம் போராடிக் கொண்டு மறுபுறம் அரசுக்கு அழுத்தம் கொடுக்கிறார்கள். இத்தகைய சூழ்நிலையிலேயே நான் புலிகளை ஆதரிக்கின்றேன்'' என்றார்.

நான் சட்டத்தொழில் ஆரம்பித்த காலம் முதல் குமார் அவர்கள் இறக்கும் வரை அவருடன் சேர்ந்தே பணியாற்றி வந்தேன். ஒரே குடும்ப அங்கத்தவர்களைப் போல் என்னுடன் பழகிவந்த குமார் பொன்னம்பலம் அவர்களின் மறைவிற்குப்பின் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவியை நான் ஏற்று நடாத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நானும் எனது கட்சியும் இவரது கொள்கையைத் தொடர்ந்தும் பின்பற்றுதல் அவரது ஆத்மாவுக்கு நாம் அளிக்கும் ஆறுதல் என்றே கருதுகிறேன்.

அல்லற்பட்ட தமிழினத்தின் அவலங்களைப் போக்கி அவர்களுக்காக ஆணித் தரமாகக் குரல்கொடுத்த ஆண் மகனின் குரல் வளை நசுக்கப்பட்டது. தமிழர்கள் ஒரு தலைவனை இழந்தனர். தமிழர் களுக்காகத் தன்னையே தியாகம்பண்ணி இந்தத் தரணியிலே அமரர் குமார் பொன்னம்பலம் அவர்கள் செய்த தொண்டுகளெல்லாம் தமிழர் தம் சரித்திரத்தில் நிலைத்திருக்கும். மறைந்தும் மறையாத அமரர் புகழ் நீடு வாழி. அவரது 9ஆவது சிராத்த தினமாகிய இன்றைய நாளில் அவனியிலே தமிழர்களுக்கு இனிமேலாவது ஓர் ஆறுதல் கிட்ட வேண்டும். அதற்கு அமரர் குமார் பொன்னம்பலத்தின் ஆத்மா ஆசி வழங்கட்டும்.

## கண்ணீர் அஞ்சலி

புவியியற்றுறையின் சிரேஷ்ட விரிவுரையாளர்
கலாநிதி க.சுதாகர் அவர்களின் அன்பு மாமனார்
**உயர்திரு இராசரத்தினம் பாலகிருஷ்ணன்**
அவர்கள் காலமான செய்தி கேட்டு துயருற்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்திபெற பிரார்த்திப்பதுடன் அவரின்
பிரிவாயல் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ்.பல்கலைக்கழகம். புவியியற்றுறையினர்.

## மரண அறிவித்தல்

### கந்தசாமி பவளகாந்தன்



முடமாவடியைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும்கொண்ட கந்தசாமி பவளகாந்தன் (30.12.2008) செவ்வாய்க்கிழமை பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி - திரவியம் தம்பதியரின் மூத்த மகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் பிரியதர்சினி, பிரிதிவிராஜ், பவானி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2009) திங்கட்கிழமை பிரான்ஸில் மாலை 4 மணிக்கு பிரான்ஸ் நேரப்படி நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அன்புத்தங்கை, மைத்துனர்
[திரு.திருமதி சிவனேசன்]

கோண்டாவில் கிழக்கு. (81495)

## 34ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 16 ★ 03 ★ 1927



விண்ணில் 22 ★ 12 ★ 1974

### திருமதி கனகாம்பிகை சபாரத்தினம்

திதி: 05.01.2009

கலையாக எம்முடனே வாழ்கின்ற தாயே!
கவிதையாய் உள்ளத்தில் நிறைந்தாய் அம்மா!
விலை கூற முடியாத உன் அன்புக் கீடாக
வியக்கின்றோம் உனக்கு நிகர் நீதானம்மா!
மலை போலத் துயரங்கள் வந்துற்ற போதும்
பனியாகக் கலைந்து விட துணை நில் அம்மா!
நிலையில்லா இவ்வுலகில் நிம்மதியாய் நாம் வாழ
நிலையான உன் ஆசி நிதம் வேண்டும் அம்மா!

'திலக வாசம்'
தபாலக வீதி,
சாவகச்சேரி. (சி/556477)

குடும்பத்தினர்.
இல.5, கல்லடி வீதி,
சாவகச்சேரி.

## அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பு





திருமதி விநாசித்தம்பி செல்லம்மா , திருமதி குலராஜசிங்கம் சிவக்கொழுந்து

கடந்த 08.12.2008 முன்பு அழைக்கப்பட்டு நடைபெறவிருந்து தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்ட விடத்தற்பளை மிருசுவில் திருமதி விநாசித்தம்பி செல்லம்மா (சண்முக வாத்தியார்) அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும் தாயாரின் வீட்டுக்கிருத்திய நாளன்று காலமான அவரது மகள் உசன், மிருசுவில் திருமதி குலராஜசிங்கம் சிவக்கொழுந்து (இராணி) அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும் நாளை (06.01.2009) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது தற்காலிக இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

(உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இதைத் தனிப்பட்ட அழைப்பாக அன்புடன் ஏற்றுக் கொள்ளவும்.)

த.முகவரி:
து.குலராஜசிங்கம்
கோண்டாவில் மேற்கு, கொக்குவில். (81371)

நி.முகவரி:
து.குலராஜசிங்கம்
(குலம் போட்டோஸ்).
உசன், மிருசுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலின் தரைப்படைகள் காஸாவுக்குள் புகுந்து தாக்குதல்

## ஹமாஸ் போராளிகள் எதிர்ச் சமர்

டெல் அவிவ், ஜன. 05

காஸா துண்டத்தில் ஹமாஸ் தீவிரவாதிகளின் இலக்குகள், கட்டடங்கள், அலுவலகங்கள் ஆகியவற்றின் மீது கடந்த எட்டு நாள்களுக்கு மேலாக கடும் விமானத்தாக்குதல்களை மேற்கொண்டு வந்த இஸ்ரேலால் தற்போது காஸாவுக்குள் அனுப்பப்பட்டுள்ள தரைப்படைகளுக்கும் ஹமாஸ் போராளிகளுக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

''சனிக்கிழமை இரவு, நான்கு முனைகளுக்கூடாக இஸ்ரேலிய துருப்புகள் வட காஸாவுக்குள் நுழைந்தன. அவற்றுக்கு ஆதரவாக, குண்டு வீச்சு ஹெலிக்கொப்டெர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன'' என நேரில் கண்டவர்கள் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்கள்.

காஸா துண்டத்துக்குள் நுழைந்துள்ள இஸ்ரேலிய தாங்கிகள், கவச வாகனங்கள் ஆகியவை காஸா நகரையும், வட நகரங்களான பெய்த் லஹியா, ஜாபலியா ஆகியவற்றையும் நோக்கி முன்னேறின. இவற்றுக்கெதிராக ஹமாஸ் போராளிகள் மோட்டார், ஏவுகணைத் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளார்கள் என குடியிருப்பாளர்கள் ஏ.எவ்.பி.செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்கள்.

எட்டு நாள்களுக்கு முன்னர், இஸ்ரேலால் விமானத் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஆரம்ப முதல், கடந்த சனிக்கிழமை வரை, இஸ்ரேலிய ஜெட் போர் விமானங்களும், கடற்படை கப்பல்களும், 800 இக்கு மேற்பட்ட தாக்குதல்களை நடத்தியுள்ளன. சனிக்கிழமை மாத்திரம் 40 தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன'' என பலஸ்தீன அதிகாரியொருவர், ரொய்ட்டருக்குத் தெரிவித்தார்.

''காஸா துண்டத்தில் இஸ்ரேலின் தரை மார்க்கமான தாக்குதல்கள் ஆரம்பமாகி விட்டன. ஹமாஸ் தீவிரவாதப் போராளிகளின் பயங்கரவாதக் கட்டமைப்பை அடியோடு தகர்ப்பதற்காகவே இந்த அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது'' என இஸ்ரேலிய இராணுவப் பெண் பேச்சாளரொருவர் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

''ஹமாஸ்களின் பயங்கரவாத செயற்பாடுகளுக்குரிய மற்றும் பல பகுதிகள் மீதும் எமது அதிரடித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும். எனினும், இவை சிவிலியன்களுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே முன்னெடுக்கப்படும்'' என இஸ்ரேலிய மேஜர் அவிட்டால் லிபோ விச் தெரிவித்தார்.

''ஹமாஸ் போராளிகளுக்கு எதிரான தரை வழித் தாக்குதல்கள் சாதாரணமானவையாக இருக்கமாட்டா. அதேவேளை, குறுகிய கால எல்லையைக் கொண்டவையாகவும் இருக்க மாட்டா. முன்கூட்டியே நாமிதை தீர்மானித்து விட்டோம்'' என இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் ஈகுட் பராக் பத்திரிகையாளர் மாநாடொன்றில் தெரிவித்தார்.

''இஸ்ரேலுக்கும், காஸாவிலுள்ள இஸ்ரேலியர்களுக்கும் எதிரான ஹமாஸ் போராளிகளின் தாக்குதல்களுக்கு இறுதி முடிவு கட்டுவதற்காகவே இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய தவிர்க்க முடியாத நிர்ப்பந்தத்துக்குள் நாம் தள்ளப்பட்டுள்ளோம்'' என்றும் அவர் கூறினார்.

''காஸாவிலுள்ள ஹமாஸ் போராளிகள் தென் இஸ்ரேலிய பகுதிகளுக்குள் ஏவுகணைத் தாக்குதல்களை அவ்வப்போது மேற்கொண்டு வருகிறார்கள். இத்தாக்குதல் நடவடிக்கைக்கு முடிவு கட்டி, தென் பிராந்திய பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த வேண்டிய கடப்பாடு எமக்குண்டு'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''நாங்கள் மிகக் கவனமாக திட்டமிட்டு எங்கள் இராணுவ நடவடிக்கைகளை வகுத்துள்ளோம். நாங்கள் போர்வெறி பிடித்தவர்கள் அல்லர். அதேவேளை, எங்கள் நகரங்களும், கிராமங்களும், சிவிலியன்களும் ஹமாஸ் போராளிகளால் தொடர்ந்தும் தாக்கப்படுவதை எம்மால் ஒருபோதும் அனுமதிக்கவே முடியாது'' என்றும் அவர் கூறினார்.

''அதேவேளை, ஹமாஸ் போராளிகளுக்கு நேசக் கரம் நீட்ட முன்வந்துள்ள ஹிஸ்புல்லா தீவிரவாத இயக்கம் மீதும் எமது பார்வையைச் செலுத்தியுள்ளோம். ஹிஸ்புல்லாக்கள் நிலை கொண்டுள்ள லெபனானோடு ஒட்டிய வட எல்லைப்புறத்தில் எமது பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இப்பிராந்தியத்தில் எத்தகைய எதிர்ப்பையும் எம்மால் முறியடிக்க முடியும்'' என்றும் அவர் தெரிவித்துக்கொண்டார்.

## கானா ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் வெற்றி

அக்ரா, ஜன. 05

மேற்கு ஆபிரிக்க நாடான கானாவில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் ஜோன் இவான்ஸ் அட்டா மில்ஸ் வெற்றி பெற்றார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட அகுவோ - அடோ சிறு வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்.

''வாக்கெடுப்பில் இவான்ஸ் அட்டாமில்ஸ் 50.23 சதவீத வாக்குகளையும், அகுபோ அடோ 49.77 சதவீத வாக்குகளையும் ஈட்டியுள்ளனர்'' என தேர்தல் ஆணையத் தலைவர் கடோ அபாரி - ஹயான் தலைநகரான அக்ராவில் அறிவித்தார்.

''உத்தியோகபூர்வ முடிவுகளின்படி, கானா குடியரசின் ஜனாதிபதியாகப் பேராசிரியர் ஜோன் இவான்ஸ் அட்டாமில்ஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதை பிரகடனப்படுத்துவது எனது கடமையாகும்'' என்றும் அவர் தெரிவித்துக் கொண்டார்.

அதேவேளை, ''தேர்தல் முடிவுகளை இரு வேட்பாளர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என வெளியேறவிருக்கும் ஜனாதிபதி ஜோன் கூபூர் கேட்டுள்ளார். புதிய ஜனாதிபதி புதன் கிழமை பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஜோன் இவான்ஸ் அட்டா மில்ஸ், தமது கட்சியின் தலைமையகத்துக்கெதிரில் திரண்ட ஆதரவாளர்கள் மத்தியில் பேசுகையில், ''கானாவை சுபீட்சகரமான நாடாகக் கட்டி எழுப்புவதற்கான நேரம் வந்துவிட்டது' என்றார்.

''நான் எல்லோருக்குமான ஜனாதிபதியாகவே இருப்பேன். இதை கானா மக்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்தேர்தலில் பலத்த போட்டி நிலவியது. இப்போட்டியில் பங்குபற்றிய இதர வேட்பாளர்களுக்கு குறிப்பாக என்னோடு பயங்கரமாக மோதிய கானா அகுபோ -அடோவுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றும் தெரிவித்துக்கொண்டார்.

உலக அரங்கில்

## இஸ்ரேலின் தரைமார்க்கத் தாக்குதலை உடன் நிறுத்த ஐ.நா. செயலர் கோரிக்கை

நியூயோர்க், ஜன. 05

''இஸ்ரேல் காஸாவில் தனது தரை மார்க்கமானத் தாக்குதலை உடனடியாகக் கைவிட வேண்டும்'' என ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் அவசர வேண்டுகோளொன்றை விடுத்துள்ளார். அத்துடன் இவ்விவகாரம் குறித்து பரிசீலிக்க பாதுகாப்புச் சபையின் அவசர கூட்டமொன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் தரை மார்க்கமான இராணுவ நடவடிக்கைகளை பிரான்ஸ், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளும் கண்டித்துள்ளன. ''இஸ்ரேலின் தரை மார்க்கமான தாக்குதல்கள் நிலைமையை மேலும் சிக்கலாக்கிவிடும்'' என பிரான்ஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

''இஸ்ரேல் யுத்தத்தை விரிவுபடுத்துவதும் துரிதப்படுத்துவதும் பிராந்திய அமைதிக்கும் இயல்பு நிலைக்கும் குந்தகமாக அமைந்துவிடும். குளறுபடிகளையும், கலக்கத்தையும் ஏற்படுத்தும்'' என பிரிட்டிஷ் வெளிவிவகாரச் செயலர் டேவிட் மிலிபேண்ட் தமது எச்சரிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

''இராணுவ நடவடிக்கைகளால் அப்பாவி சிவிலியன்களின் உயிருக்கோ, உடைமைகளுக்கோ பங்கம் ஏற்பட்டுவிடக்கூடாது என இஸ்ரேலுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. காஸா மக்களையும் ஹமாஸ்கள் பாதுகாப்புக் கேடயங்களாகப் பயன்படுத்துகிறார்கள்'' என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அதன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, ஐ.நாவுக்கான பலஸ்தீன அவதானி ரியாத் மன்சூர் உடனடியாக ஆக்கிரமிப்பைக் கைவிடுமாறு இஸ்ரேலைப் பணிக்குமாறு ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு அறைகூவல் விடுத்துள்ளார்.

''இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகளால், காஸாவில் மனிதாபிமான நெருக்கடிகள் தலைதூக்கும். இஸ்ரேலால் கொல்லப்பட்டுள்ள 400க்கும் மேற்பட்டவர்களில் 25 சதவீதமானோர் அப்பாவிகளான சிவிலியன்கள் ஆவர்'' என ஐ.நா. சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும், ''கொல்லப்பட்டவர்களில் 80 சதவீதமானோர் ஹமாஸ் போராளிகளாவர். காஸாவிலிருந்து ஹமாஸ்களால் ஏவப்பட்ட ஏவுகணைக்கு நான்கு இஸ்ரேலிய அப்பாவி சிவிலியன்களே பலியாகியுள்ளார்கள்'' என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

## தென்கொரிய எதிர்க்கட்சி எம்.பிக்கள் படையினரோடு கடும் மோதல்

சியோவ், ஜன. 05

தென்கொரிய நடாளுமன்றத்துக்குள் ஆளுங்கட்சி எம்.பிக்களை செல்லவிடாது மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த எதிர்க்கட்சி எம்.பிக்களுக்கும், பாதுகாப்புப் படையினருக்குமிடையே கடும் மோதல் ஏற்பட்டது. இதில் எதிரணியான ஜனநாயகக் கட்சியின் அநேக எம்.பிக்கள் காயமடைந்தார்கள்.

ஆளும் கிராண்ட் நெஷனல் கட்சி அமெரிக்காவுடன் மிகப் பெரிய வர்த்தக ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்ள முன்வந்துள்ளது. இதற்கான மசோதா உட்பட எண்பதுக்கும் மேற்பட்ட மசோதாக்களையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முனைந்துள்ளது.

இம்மசோதாக்களுக்கு கடும் ஆட்சேபனை தெரிவித்து, டிசெம்பர் 26 ஆம் திகதி முதல் எதிரணியான ஜனநாயகக் கட்சியின் எம்.பிக்கள், தலைநகரான சியோலிலுள்ள நாடாளுமன்ற நுழைவாயிலுக்கு முன்னால் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இதனால், நாடாளுமன்ற அமர்வுகளும் தடைப்பட்டு வருகின்றன.

நாடாளுமன்றக் கட்டடத்தை விட்டு வெளியேறுமாறு, சனிக்கிழமை எதிரணி எம்.பிக்களுக்குப் பாதுகாப்புப் படையினர் கோரிக்கை விடுத்தனர். இதற்குச் செவிமடுக்க மறுத்த எம்.பிக்களுக்கும், படையினருக்குமிடையே கடும் மோதல் ஏற்பட்டது. எம்.பிக்களை படையினர் அவ்விடத்திலிருந்து இழுத்து வெளியேற்ற முற்பட்டமையால், இருசாராருக்கிடையிலும் கைகலப்பு மூண்டது.

மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள எம்.பிக்களை படையினர் வெளியேற்ற முனைந்தமைக்கு ஜனநாயகக் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. அத்துடன் இது சட்டத்துக்கு முரணான ஒரு செயல் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

''அமெரிக்காவுடனான உத்தேச வர்த்தக உடன்படிக்கையால், தென் கொரிய விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாவர். இதனை நாம் தடுத்தே தீருவோம்'' என எதிர்க்கட்சியினர் சூளுரைத்துள்ளனர். தொடர் போராட்டங்களையும் நடத்தி வருகின்றனர்.

விவசாயிகளை இந்த உடன்படிக்கை பாதிக்காது என தென்கொரிய ஜனாதிபதி லீ யுங்-பாக்கும், அவரது கிராண்ட் நெஷனல் கட்சியினரும் தெரிவித்து வருகின்றனர். மாறாக நாட்டின் பொருளாதாரம் துரிதமாக மேம்பாடடையும் என்றும் நம்பிக்கை தெரிவித்து வருகின்றனர்.

''தற்போதைய நாடாளுமன்றத் தொடர் ஜனவரி 8 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. அதற்கு முன்னர் இம்மசோதாவை நிறைவேற்றிவிட கிராண்ட் நெஷனல் கட்சியினர் துடிக்கின்றனர்'' என எதிரணித் தலைவர் தெரிவித்துள்ளார்.

## 115 வயது மூதாட்டி காலமானார்

லிஸ்பன், ஜன. 05

உலகிலேயே நீண்டகாலம் வாழ்ந்த போர்த்துக்கல் மூதாட்டியான மரியா டி ஜீசஸ், தனது 115 ஆவது வயதில், கடந்த வெள்ளிக்கிழமை (ஜனவரி மாதம் 2 ஆம் திகதி) காலமானார்.

இப்பெண்ணின் ஆறு மக்களில் ஒருவர், போர்த்துக்கல் செய்தி நிறுவனத்திற்கு இவர் குறித்துக் குறிப்பிடுகையில், ''எனது தாய் நோய் வாய்ப்பட்டதுமில்லை. மருந்து எதுவும் உட்கொண்டதுமில்லை'' என்றார்.

மரியா டி ஜீசஸ் என்னும் இம் மூதாட்டி, மத்திய போர்த்துக்கல்லில் பிறந்தவர். 12 ஆவது வயதில் விவசாயத்தில் ஈடுபட ஆரம்பித்தவர். இவர் பாடசாலைக்குச் சென்றதே கிடையாது.



அதனால் எழுதப் படிக்கத் தெரியாதவராகவே இருந்து வந்துள்ளார் என ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்தது.

நீண்ட காலமாக வாழ்ந்த மற்று மொருவரான எட்னா பார்க்கர் என்பவர் தனது 110 ஆவது வயதில், கடந்த வருடம் (2008) நவம்பர் மாதம் 26 ஆம் திகதி காலமானார்.

தற்போது நீண்ட ஆயுளுடன் வாழும் ஒரே ஒரு மனிதர் அமெரிக்கரான ஜேர்ட் ரூட் பெய்னீஸ் ஆவார். இவர் 1894 ஆம் வருட ஏப்ரல் 6 ஆம் திகதி பிறந்தவர்.

## இந்தோனேஷியாவில் பூகம்பம்

ஜகார்த்தா, ஜன. 05

கிழக்கு இந்தோனேஷியாவை நேற்று ஞாயிற்றுக்கிழமை பாரிய பூகம்பம் உலுக்கியது. இதன் தாக்கம் ரிச்டர் அளவு கோலில் 7.6 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது என, அமெரிக்க தேசிய புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

மனோக்வாரியின் தென் - மேற்கேயும் மேற்கு பப்புவா மாகாணத்தையும் இந்தப் பூகம்பம் கடுமையாகத் தாக்கியது என்றும் ஆய்வு மையம் குறிப்பிட்டது. எனினும், சேத விவரங்கள் உடனடியாக வெளியாகவில்லை.

பூகம்பத்தால் வீடுகளும், கட்டடங்களும் குலுங்கின. குடியிருப்பாளர்கள் வெளியேறி திறந்த வெளிகளிலும் மேட்டு நிலப் பகுதிகளிலும் திரண்டார்கள். அதேவேளை, ஆழிப் பேரலை எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. எனினும் ஒருமணி நேரத்துக்குப் பின்னர் இது வாபஸ் பெறப்பட்டது என உள்ளூர் அதிகாரிகள் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்கள்.

ஆழிப்பேரலை எச்சரிக்கை விடுக்கப்பட்டதும் குடியிருப்பாளர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டார்கள். பொலிஸாரும் இராணுவத்தினரும் இவர்கள் வெளியேறப் பெரிதும் உதவினர். பூகம்பத்தை அடுத்து நில அதிர்வுகளும் தொடர்ந்தன என்றும் அவர்கள் கூறினர். இந்த பூகம்பத்தால் சிறிய அளவில் ஜப்பானிய கரைப் பிராந்தியங்களில் ஆழிப்பேரலை ஏற்பட்டது என ஜப்பானிய புவியியல் ஆய்வு மையம் ரொய்ட்டர் செய்திச் சேவைக்குத் தெரிவித்தது.

2004 ஆம் வருட டிசம்பர் 26 ஆம் திகதி மேற்கு இந்தோனேஷியாவுக்கு அப்பால் உலுக்கிய பூகம்பத்தால் ஏற்பட்ட ஆழிப்பேரலைகளுக்கு இப்பிராந்தியத்தில் 2 லட்சத்து 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

## பக்தாத்தில் தற்கொலைத் தாக்குதல்; 23 பேர பலி! 110 பேர் படுகாயம்!!

பக்தாத், ஜன. 05

ஈராக்கின் தலைநகரான பக்தாத்துக்குத் தெற்கே அமைந்துள்ள யுசுபியா நகரில் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 23 பேர் கொல்லப்பட்டனர். 110 பேர் வரை காயமடைந்தனர் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

சுனி முஸ்லிம்களின் பேரவைக் கூட்டம், யுசுபியா நகர ஷேக்கின் இல்லத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. சுனி முஸ்லிம் பழங்குடி மக்களின் தலைவர்கள் இதில் திரளாகப் பங்குபற்றியிருந்தார்கள். தற்கொலைக் குண்டுதாரி இக்கூட்டத்துக்குள் பிரவேசித்து தான் மறைத்து வைத்திருந்த குண்டை வெடிக்க வைத்துள்ளார் என பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

''ஷேக் மொகமத் அப்துல்லா சாலிஹ்கின் இல்லத்தில் இக்கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. குண்டுவெடித்ததும் தீச்சுவாலைகளோடு கரும்புகை மண்டலம் எழுந்தது. கூட்டத்திலிருந்தோரில் பலர் பதறியடித்துக்கொண்டு ஓடினர். சிலர் எரிகாயங்களுடன் காணப்பட்டனர்'' என பலநாத் அப்துல் ஹெடி என்பவர் றொய்ட்டருக்குத் தெரிவித்தார்.

[illegible]களிலும், காயமுற்றோரிலும், பழங்குடி மக்களின் தலைவர்களுமடங்குவர். காயமடைந்தவர்கள் உடனடியாக மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். அநேகர் ஆபத்தான கட்டத்திலிருந்தனர். உயிரிழந்தோரின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும்'' என அதிகாரியொருவர் பி.பி.ஸி. செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

''ஈராக்கிய ஷியா பிரதமர் நூரி மாலி கியால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தேசிய நல்லிணக்கப்பாட்டிற்கான திட்டத்தையொட்டியே, ஷேக் மொஹமத் அப்துல்லா சாலிஹ் இக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார். தற்கொலைக் குண்டுதாரியும் ஷேக்கின் உறவினர்தான் என்றும் தெரிய வந்துள்ளது'' என பாதுகாப்பு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

''ஈராக்கில் தேசிய நல்லிணக்கப்பாட்டைத் தோற்றுவிக்க பிரதமர் திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளார். இதன்படி ஷியாக்கள் மத்தியிலும், சுனி முஸ்லிம்கள் மத்தியிலும் நல்லிணக்கப்பாட்டுக்கான கூட்டங்கள் தற்போது பரவலாக நடத்தப்பட்டு வருகின்றன'' என உத்தியோபூர்வ அரச அதிகாரியொருவர் விளக்கினார்.

இக்குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை 30 என உள்துறை அமைச்சு தெரிவித்தது. எனினும், 23 பேரே பலியாகியுள்ளனர் என ஈராக்கியப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்துச் சிதம்பரத்தில்
வீற்றிருந்து
பல அற்புதங்களை
ஆற்றிவரும்
ஆண்டிகேணி
ஐயனார்
வரலாற்று நூல்

## ஆண்டிகேணி ஐயனார் புராணம்

ஈழத்துச்சிதம்பரம் திருப்பணிச்சபை
அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
விலை ரூபா 250 மட்டுமே

## நீங்காத நினைவுகளுடன் மூன்றாம் ஆண்டில்.....

அரியாலையில் பிறந்து பொலிகண்டியில் சீர் சிறப்புற வாழ்ந்து சிவப்பேறுபெற்ற
அமரர் கலாபூஷணம், கலைமகிழ்நன்
**கந்தையா பாலசிங்கம்** (ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அன்னை மடியில் 05 ★ 08 ★ 1931



இறைவன் அடியில் 05 ★ 01 ★ 2006

திதி: பூர்வபக்க ஷஷ்டி 02.01.2009

காலத்தை வென்ற காவிய நாயகனே!
காலனும் கவர்ந்து மூன்றாண்டாயிற்றே
நாடு போற்றும் நல்லாசானாய்
சமூகம் போற்றும் தலைமகனாய் - உதாரண புருஷனாய்
வீடு போற்றும் இல்லத்தலைவனாய் - தந்தையாய் - பாசமிகு பேரனாய்
உறவுகள் போற்றும் தோழனாய் நல்லதோர் நண்பனாய்
எல்லா வாழ்வும் சிறப்புற வாழ்ந்த எங்கள் ஐயனே;
பூலோகக் கடமை முடித்து சிவலோகக் கடமையேற்ற
மூன்றாண்டு நினைவு நாளில் எங்கள் குடும்ப தெய்வமே

உங்கள் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல கொட்டுக் கிணற்றடி விநாயகனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

பா.பிரபாகரன்,
"செந்தில்பதி",
பொலிகண்டி மேற்கு, வல்வெட்டித்துறை.

என்றும் உங்கள் நீங்கா நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### திருமதி ஜீவாகரன் குணாளினி (குணா)

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜீவாகரன் குணாளினி நேற்று(04.01.2009)ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் குணசிங்கம் - சரோஜினிதேவி தம்பதியினரின் அன்பு மகளும் ஜீவாகரனின் அன்பு மனைவியும் சூரியா, விபுலன் ஆகியோரின் அன்புத் தாயும் கிரிதரன், குமணன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(05.01.2009) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தியேட்டரடி,
சங்கானை.

தகவல்:
ஜீவாகரன்
(கணவர்).

## விற்பனைக்கு

சன்டெல்
தொலைபேசி
விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 077 4071595

## ஒப்புநோக்குநர் ( Proof Reader) தேவை

பெண்கள் மட்டும். க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தமிழ்மொழியில் திறமைச் சித்தி. மாநகரசபை எல்லைக்குள் நிரந்தர வதிவிடம்.

அலுவலக நேரத்தில் நேரில் வரவும்.

பாரதி பதிப்பகம்,
430, காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம்.

## IIS

விசேட பிரிவு ஆரம்பம்

A/L 2008 கணிதப்பிரிவில் தோற்றி பொறியியற்பீடத்திற்கு அனுமதி பெற்ற மாணவர்களுக்கான விசேட பிரிவு

Diploma in Eng.Drawing & AutoCAD

ஆரம்பம்

10.01.2009 காலை 10.00மணி

INSTITUTE OF INFORMATICS STUDIES
#100, Clock Tower Road,
Jaffna.
T.P.No : 021 222 2831 Fax : 021 222 6933 E.Mail : iisco@sltnet.lk

## உதைபந்தாட்டம்

வலி.வடக்கு, ஜன.5

அராலி தெற்கு மாவத்தை விளையாட்டுக் கழகம் வலிகாமம் உதைந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் உழவர் திருநாளையொட்டி நடத்திவரும் 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாவத்தை விளையாட்டுக்கழகமைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

* அராலி ஜேம்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் அராலி ஐக்கிய விளையாட்டுக்கழகம்

* மானிப்பாய் றெட் றேஞ்சர் விளையாட்டுக் கழகம் எதிர் அராலி சில்வெஸ்டார் விளையாட்டுக் கழகம்.

(1-86)

## மரண அறிவித்தல்கள்



### தம்பு நடராஜா

(வர்த்தகர், நெல்லியடி மத்திய சந்தை, முன்னாள் கார் உரிமையாளர் Ey-3113)

தோலகட்டி, வயாவிளானைப் பிறப்பிடமாகவும், சந்தா தோட்டம், புலோலி வட கிழக்கு, புலோலியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு நடராஜா 03.01.2009 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மருதங்கேணி வீதி, புலோலி வடகிழக்கு,
சந்தா தோட்டம், புலோலி.
T.P. 0776617382

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி தேவமலர் யோகராஜா

உடுவில், இராமலிங்கம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவமலர் யோகராஜா நேற்று (04.01.2009) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வைத்தியகலாநிதி அ.யோகராஜாவின் (மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை) அன்பு மனைவியும் கவிதா, நிறஞ்சன் ஆகியோரின் அன்புத் தாயும் பிறேமச்சந்திரன் (ஆசிரியர்), தேவபிரியா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(05.01.2009) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூவோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்க்ள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராமலிங்கம் வீதி,
உடுவில்.

தகவல்:
Dr.அ.யோகராஜா
(கணவர்).

## ஓராண்டு நினைவஞ்சலி

பிரம்மஸ்ரீ சிவகணேசக் குருக்கள்
கணேசராஜசர்மா



தோற்றம் 25.09.1985
மறைவு 18.12.2007


திதி: 05.01.2009

ஆண்டொன்று ஆனாலும்
ஆழ்துயரம் ஆறவில்லை
உன் உறவு உடைந்தாலும்
உன் நினைவு உடையாது
விழியெல்லாம் உன் நினைவு
வழியெல்லாம் உன் உருவம்
கேணியிலே நீ விழுந்தாய்
கேளாமல் ஏன் சென்றாய்?
இளவயதில் மரணத்தைக் கண்டாய்
இள மனங்களில் வருத்தத்தைத் தந்தாய்
கடவுளிடத்தில் பற்று வைத்தாய்
கடவுளையே கலங்க வைத்தாய்
மண்ணிலே உன் வாசம்
கண்ணிலே உன் சோகம்
ஐயனிடம் அருள் பெற்று
ஐயனிடமே செல்வாயாக.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக!

உன் நினைவுடன்:
**பெற்றோர், சகோதர, சகோதரிகள்.**
வண்ணப்புரம் சிவன்கோவில்,
அராலி மத்தி, வட்டுக்கோட்டை.

A/L பெறுபேறுபெற்ற மாணவர்களே!
B. Sc. in Comp. Sc. B. Sc. in Multimedia- 1st Year
North Lanka IIT
Main Street,
Chankanai.
0602214305
New College of Higher Studies,
Ariyakulam Junction,
Jaffna.
விண்ணப்பித்துவிட்டீர்களா?
மாபெரும் புலமைப் பரிசில் திட்டம் 2009
பரீட்சை 11-01-2009 அன்று நடைபெறவுள்ளது
14-01-2008 விரிவுரைகள் ஆரம்பம்
அனுமதி அட்டைகளை நேரடியாகப் பெற்றுக்கொள்ளவும்
North Lanka IIT is your right choice for your Degree Education

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மெண்டிஸ், முரளியின் சுழலில் பங்களாதேஷ் வீரர்கள் அவதி

## டில்ஷானின் அதிரடியால் தலை நிமிர்ந்தது இலங்கை அணி

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் இலங்கை அணியின் சுழல் பந்து வீச்சாளர்களான அஜந்த மெண்டிஸ், முத்தையா முரளிதரன் ஆகியோரின் பந்துவீச்சில் பங்களாதேஷ் வீரர்கள் திணறினர்.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக வர்ண, புரவும், பிரசன்ன ஜெயவர்த்தனவும் களமிறங்கினர். அவர்களில் ஜெயவர்த்தன ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார். மற்றொரு ஆரம்ப வீரரான வர்ணபுர 63 ஓட்டங்கள் எடுத்தார்.

தொடர்ந்து வந்த சங்ககாரா (05), அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன (11), திலான் சமரவீர (19) ஆகியோர் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினர். எனினும், தொடர்ந்து களமிறங்கிய திலகரட்ண டில்ஷானும், கப்புக்கெதரவும் மிகவும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி அணியை வலுவான நிலைக்கு இட்டுச்சென்றனர். டில்ஷான் 2 சிக்ஸர்கள், 21 பவுண்டரிகளுடன் 162 ஓட்டங்களைக் குவித்தார். கப்புக்கெதர 96 ஓட்டங்களை விளாசினார்.

அவர்களுக்குப் பிறகு வந்த ஏனைய வீரர்களான சமிந்த வாஸ் (3), முரளிதரன் (0), பெர்ணான்டோ (0) ஆகியோரும் அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேறினர். முடிவில் இலங்கை அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 384 ஓட்டங்களைப் பெற்றது.

பங்களாதேஷ் சார்பில் முதல் இன்னிங்ஸில் சிறப்பாக விளையாடிய ஷஹிப் அல் - ஹஸன் 4 விக்கெட்டுக்களையும், மஷ்ரபி மொட்ரஸா 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணியை மெண்டிஸும், முரளியும் பதம் பார்த்தனர். அவர்களுடன் வாஸும் இணைந்து 208 ஓட்டங்களுடன் பங்களாதேஷை சுருட்டினர்.

பங்களாதேஷ் சார்பில் மஷ்பி மொட்ரஸா மட்டுமே அரைச்சதம் கடந்து 63 ஓட்டங்களை எடுத்தார். முதல் இன்னிங்ஸில் 176 ஓட்டங்கள் முன்னிலை வகித்த இலங்கை அணி தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடத் தொடங்கியது. நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் இலங்கை அணி விக்கெட் இழப்பின்றி 17 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.






# இலங்கையுடன் ஒருநாள் தொடர் நடத்துவதற்கு இந்தியா முயற்சி

டில்லி, ஜன. 05

மும்பைத் தாக்குதல் சம்பவத்துக்குப் பிறகு இந்திய கிரிக்கெட் அணியின் சில போட்டிகள் ரத்துச் செய்யப்பட்டதால் அந்த நாட்டு கிரிக்கெட் சபைக்கு சுமார் 360 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதனை ஈடுசெய்யும் வகையில் இலங்கையுடன் அடுத்த மாதம் நடுப்பகுதியில் ஒருநாள் தொடரை நடத்த இந்திய கிரிக்கெட் சபை முயற்சித்து வருகிறது.

''இது தொடர்பாக இலங்கை கிரிக்கெட் சபையுடன் பேசி வருகிறோம். இலங்கைக்கு எதிராகக் குறுகியகாலத் தொடரை நடத்த வாய்ப்பு உள்ளது. இதுவரை அவர்களிடம் இருந்து நல்லவிதமான பதில் வந்துள்ளது. எனவே இந்தத் தொடரை நடத்த முடியும் என்று நம்புகிறோம்'' - என்று இந்திய கிரிக்கெட் சபை நிர்வாகி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சர் காமினி லொகுகே கூறுகையில், ''இந்தியாவுடன் கிரிக்கெட் தொடர் நடைபெற தற்போதைக்கு 60 சதவீத வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக எங்களின் பாகிஸ்தான் பயணம் பாதிக்கப்படாது. பாகிஸ்தான் பயணத்தில் எந்த மாற்றமும் இல்லை'' - என்றார்.

# சிறந்த கிரிக்கெட் வீரர்களை கௌரவிக்க ஐ.சி.சி. தீர்மானம்

சிட்னி, ஜன. 05

டென்னிஸ் விளையாட்டில் சிறந்த வீரர்களை கௌரவிப்பது போன்று கிரிக்கெட்டிலும் முன்னாள் வீரர்களைத் தேர்ந்தெடுத்து கௌரவிக்க முனைந்துள்ளது சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் (ஐ.சி.சி.).

'கிரிக்கெட் ஹால் ஒவ் பேர்ம்' என்ற பெயரில் ஒவ்வொரு ஆண்டும் வீரர்களைத் தேர்ந்தெடுத்து கௌரவிக்க ஐ.சி.சி. முடிவு செய்துள்ளது. ஐ.சி.சியின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் வீரர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். சிறந்த கிரிக்கெட் வீரர்களுக்கான ஐ.சி.சி. ஆண்டு விருதளிப்பு நிகழ்ச்சியின்போது புதிய வீரர்கள் அறிவிக்கப்படுவர் என ஐ.சி.சியின் முதன்மைச் செயல் அதிகாரி ஹரூன் லோர்கட் தெரிவித்துள்ளார்.

முதலாம் ஆண்டுக்கு 55 முன்னாள் வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கென புதிய இணையத்தளத்தையும் ஐ.சி.சி. தொடங்கியுள்ளது. அதில் அவர்களது விளையாட்டு புள்ளி விபரங்கள், வாழ்க்கை வரலாறு ஆகியன இடம்பெறும். (த)

# சென்னை டென்னிஸ் இன்று ஆரம்பம்; உலகின் முன்னணி வீரர்கள் களத்தில்



'சென்னை ஓபன் 2009' ஏ.டி.பி. டென்னிஸ் போட்டி, சென்னை நுங்கம்பாக்கம் டென்னிஸ் மைதானத்தில் இன்று தொடங்குகிறது.

ஏ.டி.பி. டென்னிஸ் போட்டிகளில் ஒன்றான இப் போட்டிகள் ஆண்டுதோறும் ஜனவரி மாதத்தில் சென்னையில் நடத்தப்படுகின்றன. 14 ஆவது ஆண்டாக சென்னை ஓபன் 2009 ஏ.டி.பி. டென்னிஸ் போட்டி, சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள எஸ்.டி.ஏ.டி., டென்னிஸ் மைதானத்தில் இன்று தொடங்கி, எதிர்வரும் 11 ஆம் திகதிவரை நடைபெறும்.

ஆண்கள் மட்டுமே பங்கேற்கும் இப்போட்டியில் ஒற்றையர் மற்றும் இரட்டையர் இறுதிப் போட்டிகள் 11 ஆம் திகதி நடக்கவுள்ளன.

ரஷ்யாவின் நிக்கோலே டெவிடென்கோ, சுவிட்சர்லாந்தின் ஸ்டானிஸ்லஸ் வாவ்ரின்கா, குரோஷியாவின் மரின் சிலிக், இவோ கார்லோவிக், ஜேர்மனியின் ரெய்னர் சட்லர், ஸ்பெயினின் கார்லோஸ் மோயா உள்ளிட்ட பல முன்னணி டென்னிஸ் வீரர்கள் இப்போட்டியில் கலந்து கொள்கின்றனர்.

கடந்த ஆண்டு சென்னை ஓபன் போட்டியில் ரஷ்யாவின் மிக்கைல் யோஸ்னி ஒன்றையர் சம்பியன்ஷிப் பட்டத்தைக் கைப்பற்றினார்.

இரட்டையர் சம்பியன்ஷிப் பட்டத்தை தாய்லாந்தின் சன்சாய் ரதிவதனா, சன்சட் ரதிவதனா ஆகியோர் கைப்பற்றினர். இந்தியாவின் லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி ஜோடி இரட்டையர் போட்டியில் பங்கேற்கவுள்ளனர். இந்த ஆண்டு மொத்தம் ஆறு கோடி ரூபாய் பரிசாக வழங்கப்படவுள்ளது.

இதேவேளை இந்தியாவில் நடந்த கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின்போது, இங்கிலாந்து அணிக்காக பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்ட ரிக் டிக்கசன், சென்னை ஓபன் 2009 டென்னிஸ் போட்டியிலும் பாதுகாப்புப் பணியை மேற்கொள்ளவுள்ளார்.

# மேற்கிந்தியா வெற்றி

றைஸ்ட்சர்ச் (நியூஸிலாந்து), ஜன. 05

நியூஸிலாந்துக்கு எதிராக கிறைஸ்ட்சர்ச்சில் சனிக்கிழமை நடந்த 2 ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், ஒரு பந்து மீதமிருக்கையில் பரபரப்பான வெற்றியைப் பெற்றது மேற்கிந்தியத்தீவுகள் அணி.

பலத்த காற்று மற்றும் மழை காரணமாக இது 28 ஓவர்கள் போட்டியாக நடத்தப்பட்டது.

முதலில் ஆடிய நியூஸிலாந்து அணி 8 விக்கெட்டுக்கு 152 ஓட்டங்களைச் சேர்த்தது.

இதையடுத்து 'டக் - வொர்த் லூவிஸ்' முறைப்படி 158 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 27.5 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 158 ஓட்டங்களைச் சேர்த்து வெற்றி பெற்றது.

ஆட்ட நாயகன் விருதைப் பெற்ற ராம் நரேஷ் சார்வான் மற்றும் ராம்தின் ஆகியோர் சிறப்பாக ஆடி அணிக்கு வெற்றி தேடித்தந்தனர்.

கடைசி 3 ஓவர்களில் வெற்றிக்கு 30 ஓட்டங்கள் தேவைப்பட்டன. டிம் செதீ வீசிய ஓவரில் 12 ஓட்டங்களையும், அதற்கடுத்து ஜீதன் படேல் வீசிய ஓவரில் 14 ஓட்டங்களையும் சார்வான் - ராம்தின் ஜோடி அதிரடியாக விளாசி அணிக்கு வெற்றி தேடிக்கொடுத்தது. சார்வான் 65 பந்துகளில் 67 ஓட்டங்களையும், ராம்தின் 18 பந்துகளில் 28 ஓட்டங்களையும் குவித்தனர்.

இவ்விரு அணிகளிடையிலான 3 ஆவது போட்டி வரும் புதன்கிழமை வெலிங்டனில் நடைபெறுகிறது. முதல் போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


What Next?......After A/L
Obtain a World Class British Qualification

பல நூறு மாணவர்கள் பயணித்த வெற்றிப்பாதையில் உங்கள் காலடியையும் பதித்துக்கொள்ளுங்கள்.

A/L தகைமையுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர்கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபல பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதிலும் (Admission) உயர்கல்விக்கான Visaக்களைப் பெறுவதிலும் தவறி விடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL, UK வழங்கும் BTEC HND தகைமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் B.Sc.(Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியை பெற்றுத்தருவதோடு உயர்கல்விக்கான Visaக்களையும் உறுதி செய்கின்றது. இக்கற்கை நெறிகளை பூர்த்திசெய்துகொள்ளும் மாணவர்களுக்கு வெளிநாடு செல்வதற்கான வசதிகளை IIS City Campus ஏற்படுத்திக்கொடுக்கின்றது.

சர்வதேச தரம் வாய்ந்த இக்கற்கை நெறியினை தென்பகுதிக்கு சென்று,குறிப்பாக கொழும்பு சென்று கற்க வேண்டிய நிலையை முற்றாக மாற்றி பெற்றோரின் அரவணைப்பிலும் பாதுகாப்பிலும் இருந்து கொண்டே எமது சொந்தப்பிரதேசத்தில் மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பினை எமது நிறுவனம் வழங்குகின்றது.



Delivered locally......
Recognized globally......

BTEC edexcel INTERNATIONAL

HND in Computing (General)
in Computing (ICT System Support)
in Computing (Software Development)

HND in QS
(Higher National Diploma in Quantity Surveying)

New Batches start on 23.01.2009 at 10.00 am

IIS என்றும் உங்கள் ஒளிமயமான எதிர்காலத்தின் வழிகாட்டி

Edexcel International 'A' rated centre for the 4th consecutive year

IIS CITY CAMPUS
#200,Sivan Pannai Road,Jaffna.
Tel:021 222 8060 Fax:021 222 6933
Email:iiscc@sltnet.lk Web: www.iiscitycampus.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிரங்கமாக பொலிஸ் பதிவிற்கு அழைத்து அரசு தமிழர்களை பீதிக்குள்ளாக்குகின்றது

## பி.பி.ஸி. பேட்டியில் மனோ எம்.பி. காட்டம்

"தமிழ் மக்களை மீண்டும் மீண்டும் அழைத்து - கால் கடுக்க காவல் நிலையங்களில் நிற்க வைத்து - பொலிஸில் பதிவுமேற்கொள்வதன் மூலம் அரசு தமிழர்கள் மத்தியில் ஒரு பீதியை ஏற்படுத்துகிறது.''

- இவ்வாறு மனோகணேசன் எம்.பி. நேற்றிரவு பி.பி.ஸிக்குக் காட்டமாகக் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த சில மாதங்களிற்கு முன்னர் வடக்குப் பிரதேச மக்கள் கொழும்பில் பொலிஸ் பதிவு மேற்கொண்டனர். அதேபோல், கிழக்கு மாகாண மக்களும் பதிவுசெய்யப்பட்டனர். பின்னர் ஊவா மாகாண மக்கள் பதிவு செய்யக்கோரப்பட்டபோது நான் கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தேன். அதன் பிரகாரம் அது நிறுத்தப்பட்டது.

பின்னர் மீண்டும் தமிழர்கள் கொழும்பில் பதிவு மேற்கொள்ளவேண்டுமென பகிரங்கமாக அறிவிக்கப்பட்டது.

இவ்வாறு பகிரங்கமாக அறிவித்து தமிழ் மக்களை அலட்சியம் செய்தும் அலைக்கழிக்க வைத்தும் - அவர்களை அரசு அவமானப்படுத்துகிறது.

தமிழர்களை மாத்திரம் தனிமைப்படுத்தி அவர்களைப் பதிவுசெய்யும் கட்டாய நடவடிக்கையானது, அவர்கள் இந்நாட்டின் குடிமக்களா என்று கேட்கும் நிலைக்குத் தள்ளியுள்ளது - என்றார். (அ-சி)

## ஒட்டுசுட்டானும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

மாங்குளம் - முல்லைத்தீவு வீதியி லுள்ள ஒட்டுசுட்டான் சந்தியை விடுதலைப் புலிகளால் நிர்வாக விநியோக நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்பட்டு வந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

ஒட்டுசுட்டான் மீது விமானத் தாக்குதலும் இடம்பெற்றுள்ளது. (அ-சி)

## பரந்தனில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினரின் நகர்வுகளை முறியடித்தனர்.

இதில் படையினர் 60 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 100இற்கும் அதிகமான படையினர் காயமடைந்துள்ளனர்.

படையினரின் சடலங்கள் உட்பட இராணுவப் பொருள்கள் விடுதலைப் புலிக ளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பி.கே எல்.எம்.ஜி. - 01, ஏகே எல்எம்ஜி - 01, ஆர்.பி.ஜி - 1, மற்றும் ரி-56 ரக துப்பாக் கிகள் - 4 உள்ளிட்ட ஆயுதப் பொருட்களே விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட் டன - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மோதல்கள் குறித்து படைத்தரப்புத் தகவல்கள் எவையும் நேற்று நள்ளிரவு வரை வெளிவரவில்லை. (அ-சி)

## நேற்றைய தொடர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை 4 மணியளவில் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் நடராசா இராஜேஸ்வரி (வயது 58), சண்முகராசா (வயது 60), கிறிஸ்ரி வாசிங்ரன் (வயது 34), பவானி (வயது 41), யோகராசா (வயது 31), சிவஞானம் (வயது 28), சிவகுமன் (வயது 35), பாஸ்கரன் (வயது 36), பியுசின் (வயது 24), சந்திரன் (வயது 39), பாலேந்திரன் (வயது 51), சின்னையா நடராசா (வயது 66), தொம்மை ஜெகராசன் (வயது 31), ஆகியோரே காயமடைந்தனர் என அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

அத்துடன், காயமடைந்தோருக்கான மருந்து வகைகளின்றி அவர்கள் உயிரிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-சி)

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களுக்கு யுத்தரீதியாகக்கிடைத்த தோல்வி மாத்திரமின்றி உளவியல் ரீதியாகவும் கிடைத்த தோல்வியாகும்.

கிளிநொச்சி புலிகளின் தலைநகரமாக விளங்கியது. இந்த நகரில்தான் புலிகளின் சமாதான செயலகம் உட்படப் பல அலுவலகங்கள் இருந்தன. படையினர் மீதான பாரிய தாக்குதல்களுக்கான திட்டங்கள் அங்கிருந்துதான் வகுக்கப்பட்டன.

இவ்வாறானதொரு முக்கிய நகரம் பறிபோயுள்ளதால் புலிகள் உளவியல் ரீதியாகத் துவண்டுபோயுள்ளனர்.

இந்த வெற்றியை இந்நாட்டுக்குப் பெற்றுத்தந்த படையினருக்கு நாம் எமது கௌரவத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். படையினர் தொடர்ந்து முன்னேறுவதற்கு இந்நாட்டு மக்கள் தொடர்ந்தும் ஆதரவு வழங்கவேண்டும்.

தோல்வியடைந்த புலிகள் அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்தத் தொடங்கியுள்ளனர்.இது தொடர்பாக மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும்.

இந்த நிலையில் அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசப்படுகிறது. அதிகாரப் பகிர்வு என்பது மற்றுமொரு பிரிவினைவாதத்திற்கே வழிவகுக்கும். யுத்தம் மூலம் புலிகளைத் தோற்கடிப்பதுதான் ஒரேதீர்வு.

ஆகவே, இச்சந்தர்ப்பத்தில் அரசியல் தீர்வு பற்றிய பேச்சுக்கே இடமில்லை. அரசியல் தீர்வு தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு உடன் கலைக்கப்படல் வேண்டும். அக்குழு அறவே தேவையற்ற ஒன்று - என்றார். (அ-சி)

## கிளிநொச்சி வீழ்ந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகதிகளாக வந்துள்ள ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்களைப் பராமரிக்கும் பொறுப்பு இந்தியாவின் மீது சுமத்தப்பட்டுள்ளது. எனவே இலங்கை இனப் பிரச்சினையை, அந்நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினையாகக் கருத முடியாது.

எனவே, இந்திய அரசு உடனடியாகத் தலையிட வேண்டும். அங்குள்ள தமிழ் மக்களுக்கு சம உரிமை என்பது அவர்களின் பிறப்புரிமை. அதை இலங்கை அரசிடம் பிச்சை கேட்பது போல் கேட்க வேண்டிய நிலை தமிழர்களுக்குக் கூடாது.

கிளிநொச்சியை இழந்தது விடுதலைப் புலிகளுக்கு பின்னடைவாக இருக்கலாம். ஆனால், அதனாலே அவர்கள் தோற்றுவிட்டார்கள் எனக் கூற முடியாது. பிரபாகரனைப் பிடிப்பது என்பதும், அவரை இந்தியாவிடம் ஒப்படைப்பது என்பதும் நடைமுறைச் சாத்தியமற்றது - என்றார். (அ-சி)

## தொடர்கிறது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பித்துள்ளோம்'' என கிளிநொச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்ட செய்தியாளர்களிடம் மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் தெரிவித்துள்ளார். "நாங்கள் அவரைத் தேடிக் கண்டுபிடிப்போம்'' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சனிக்கிழமை கிளிநொச்சிக்குக் கிழக்கே முரசுமோட்டைப் பகுதியில் மோதல் இடம்பெற்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விமானங்கள், ஹெலிக்கொப்டர்களின் உதவியுடன் படையினர் முல்லைத்தீவை நோக்கித் தமது முன்னேற்ற முயற்சியை மேற்கொண்டுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவுப் பகுதிகளில் உள்ள புலிகளின் நிலைகள் மீது விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ள கிளிநொச்சி நகருக்கு வெளியே சனிக்கிழமையன்று விடுதலைப் புலிகளுடன் நான்கு பகுதிகளில் மோதல்கள் இடம்பெற்றன என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்த மோதல்களில் இருதரப்புகளுக்கும் இழப்புகள் ஏற்பட்டன என்று இராணுவ அதிகாரி யொருவர் குறிப்பிட்டுள்ளார்.


A/L 2011 கலை, வர்த்தக பிரிவு
மகிழ்வகம்
ஆரம்பம்: 14.01.2009
யாழ்.நகரின் மிகப்பிரபல்யமான அனுபவமிக்க ஆசிரியர்களின் வழிநடத்தல்
மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
A/L 2009, 2010 வகுப்புகள் வழமைபோல் நடைபெறுகின்றன.
மகிழ்வகம்,
சட்டநாதர் சிவன் கோவில் அருகில்,
நல்லூர், யாழ்ப்பாணம். நிர்வாகி.

32 ஆவது வருட சேவை
விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம், 52, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்
A/L Day Class
வர்த்தகப்பிரிவு ஆரம்பம்: 09.01.2009 - 8 மணி
Eco. - திரு. B.சுஜீந்திரன்
Acc. - திரு. P.பகீரதன்
Bist. - திரு.யசோ
★ யாழ். மாவட்டத்தில் அதி சிறப்புத்தேர்ச்சி பெற்ற எமது மாணவர்களுக்கு வாழ்த்துக்கள்.
★ பஸ்ஸில் வருபவர்கள் ஸ்ரான்லி றோட்டாலும், சைக்கிளில் வருபவர்கள் சிராம்பியடி லேனாலும் வரவும்.

A/L DAY CLASS
சிறந்த பெறுபேற்றை ஏற்படுத்திய ஆசிரியர் குழாம்
கணித, உயிரியல் பிரிவு
CHE:- S.வாசு, PHY:- K.செல்வன், BIO:- V.A.ஞானேந்திரன், Com.Mat.S.ரூட்
வர்த்தகப் பிரிவு
ACC:- P.பகீரதன், ECO:- N.B.சுஜீதரன், Bu.Stl. S.யசோ
கலைப் பிரிவு
Tamil:- A.K.கீர்த்திராஜன், Geo.:- S.R.பாலா Log:-P.கமல், Hin.Cul:-S.ஜெயக்குமார், Eco.:- N.B.சுஜீதரன், Pol.Sc.:-A.K.றொபின்சன், Dra:-S.பிரபாகரன், His:-S.அருள், Chri:-S.K.ரூட், Math-T.தவசேகர்
ஆரம்பம்:- 05.01.2009 இன்று காலை 7a.m.
NEC பெருமாள் கோயிலுக்கு அருகாமை. Clock Tower Road, Jaffna

SHAMROCK
கச்சேரியடி, யாழ்.
English Medium- Gr.6 to 11
(Gr.10,11க்கு செய்முறைப் பரீட்சைகளும்)
Science- S.கோபிநாத்
Maths- W.நந்திவர்மன்
English Lit- K.ஜெயக்குமார்
Gr. 1 முதல் 11 வரை
புலமைப்பரிசில் Gr. 5
2011 A/L கலை, வர்த்தக கணித, விஞ்ஞானபிரிவுகள்(03.01.09)
பேச, எழுத, வாசிக்க
★Spoken, English.
★சிங்களம்

கற்சுமி வெளியீடு - 2009
தரம் 1, 2, 3, 4,5 மாணவர்களுக்குரிய அப்பா, அன்னை, தாய், அறிவு, தேடல் (மாதம் இருமுறை வெளிவரும்)
தரம் 1, 2, 3, 4,5 மாணவர்களுக்குரிய கணிதம் + நுண்ணறிவு வினாத்தாள்கள் (EASY WAY, வழு) (மாதம் இருமுறை வெளிவரும்)
தரம் 6,7,8,9,10,11, O/L மாணவர்களுக்குரிய கணிதபாட வினாத்தாள்கள். (Way to Win, Try to Win) (மாதம் இருமுறை வெளிவரும்)
தரம் 9,11 மாணவர்களுக்குரிய (Talent, Target) (மாதம் இருமுறை வெளிவரும்)
குறிப்பு-
எமது வெளியீடுகளைப் பெற விரும்பும் பாடசாலைகள், பெற்றோர்கள், மாணவர்கள், முகவர்கள் தொடர்பு கொள்ளவும்.
வருடம் ஒரு தடவை பதிவு செய்து வருடம் முழுவதும் பெற்றுக்கொள்ளுங்கள்.
பதிவுகள்31.01.2009க்கு முன் பதிவுசெய்பவர்கள் முழு வெளியீடுகளையும் பெறமுடியும்.
வெளிநாடுகளிற்கும், வெளி மாவட்டங்களிற்கும் தபால் மூலம் அனுப்பி வைப்பதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
உங்கள் பிள்ளையின் ஆற்றலை மேம்படுத்தும்
கற்சுமி கல்வி நிறுவனம்
166,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7442
எமது இணையத்தள முகவரி WWW.Katsumi.jf.com

வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
புதிய கல்வியாண்டில் காலடி எடுத்து வைக்கும் மாணவச் செல்வங்களே! உங்களுக்குத் தேவையான
★பாடப் புத்தகங்கள், பயிற்சிப் புத்தகங்கள்
★அப்பியாசப் புத்தகங்கள்
★பாடசாலை உபகரணங்கள்
அனைத்தையும் ஒரே இடத்தில் மலிவு விலையில் பெற்றுக்கொண்டு
உங்களுக்கான அன்பளிப்புக் கலண்டர்களையும் பெற்றுக் கொள்ளவும்
மலர்ந்திருக்கும் புதிய ஆண்டுக்கான கலண்டர்கள்
★மெய்கண்டான் ★லீலா ★அஷ்டலக்சுமி ★கரிகணன் ★தீபம் ★ஞானம்
டயறிகள்
★ Management
★ Management Lock
★ Leela one day Page
மலிவு விலை
பூபாலசிங்கம் புத்தகசாலை
ஆஸ்பத்திரி வீதி, யாழ். தொ.பே. 021 222 6693, 2422

DMI இல் மாங்களேஸ்
A/L-2009,2010,2011
நாடகமும் அரங்கியலும்
மாங்களேஸ்
DMI நாவலர் வீதி, யாழ்.

24 கணிதப் பரீட்சையா?
நாவலர் வீதி, யாழ். DMI ஸ்ரான்லி வீதி, யாழ்.
Free A/L-2011
ஜனவரி - 10 காலை 9.00 மணி
DMI

PHYSICS:- K.Selvan
A/L 2009 — சடப் பொருளியல் — ஆரம்பம்:- 05.01.2009 [Mon, Fri 4.30-5.30]; மின்னியல் — ஆரம்பம்:- 06.01.2009 [Tue, Thr. 6.30-7.30]
A/L 2010 — Light — ஆரம்பம்:- 07.01.2009 [Mon, Wed 6.30-7.30]
DAY CLASS — Paper Class — [Tu., Wed, Thr. 5 - 6] [Sat, Sun 6.45-7.45]
NEC Clock Tower Road, Jaffna பெருமாள் கோயிலுக்கு அருகாமை.

வெளிவந்துவிட்டது!
2009 லீலா பஞ்சாங்கக் கலண்டர்
வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
அன்னை புத்தகசாலை
ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.
தொ.பே- 222 9881

மானிப்பாயில் புதிய பிரிவுகள் ஆரம்பம்!
100% Practical Education!!
பல புதிய விடயங்களுடன்
07/01/2009 அன்று வகுப்புக்கள் ஆரம்பம் !!
Diploma in Mobile Phone Repairing
(சகல வகையான கைத்தொலை பேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார் கற்கை நெறி)
O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான அனைத்து கணினி வகுப்புகளும் ஆரம்பமாக உள்ளதால் மாணவர்கள் தங்கள் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும் !!
மேலதிக விபரங்களுக்கு :-
UNI TECHNOLOGY
ICT Education Trainers
Manipay T.P:- 060 - 221 - 6433
(மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே)

VACANCY
Trainee Software Developers(03)
Language: VB/VB.Net
Age:18 - 26 Sex: Male
சுயவிவரக் கோவையினை கீழுள்ள முகவரிக்கு 08.01.2009க்கு முன் அனுப்பிவைக்கவும்.
T.P: 077 9560477, 077 2487082
Mail: mail@msdcjaffna.com
MSDC, Jaffna Road,Manipay.

32 ஆவது வருட சேவை
விக்னா கல்வி நிறுவனம்
கிளை :-417, K.K.S. Road. யாழ். இந்துக்கல்லூரி அருகாமையில்
பிரிவு 2 — தரம் 6, 7, 8, 9, 10, O/L
இன்று ஆரம்பம்: ஜனவரி 05 பி.ப. 3மணி.
என்றுமே நிறைகுடம் தளம்பாது. தன்னிகரில்லா ஆசிரியர் குழு.
Sci.- திரு. தேவா, திரு. ஜெயவதனன்.
Tam- திரு. தயாபரன், திரு.விஜய், செல்வி கிருஷ்ணலதா.
Soci.- திரு.பார்த்திபன், திரு.ஆனந்.
Com.- திரு. கம்ஷன்.
Math.- திரு.விக்கி, திரு. ரூபன்.
Eng.- திரு.விஸ்வநாதன்,திரு. செல்வரட்ணம்.
Rel.- திரு N.T.தரன், கிருஷ்ணலதா.
Geo.- திரு.ஆனந்தராஜா.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.